Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.


T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆடி 28 புதன்கிழமை (13.08.2014) பக்கங்கள் 20 ஓசை – 316

## இரணைமடு– யாழ்.குடிநீர்த்திட்டம் விசேட செயற்றிட்டமொன்றை முன்னெடுக்க வேண்டும் ஜனாதிபதி

### அமைச்சர் டக்ளஸ் கோரிக்கை



இரணைமடு-யாழ்ப்பாணம் குடிநீர்த்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு வடக்கு மாகாண சபை, அரசியல் காரணங்களைக் கூறி இழுத்தடிப்புச் செய்து கொண் டிருக்கின்றது.

ஆனால் இரணைமடுக்குளத்தை புனரமைப்புச் செய்து நீர்க் கொள் ளளவை அதிகரித்து வடமாகா ணத்தின் பல பகுதிகளுக்கு குடி நீர் வழங்குவது காலத்தின் அவ சியமாகும். வடக்கு மாகாண சபையைப் பொறுப்பேற்றிருப்ப வர்கள் மேற்படி திட்டத்தை செயற படுத்தவிரும்பாமலும், செயற் படுத்தத் தெரியாமலும் குடிநீர் விநியோகத்திட்டத்தை இழுத்த டிப்புச் செய்கின்றனர்.

எனவே மேற்படித் திட்டத்தை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி என்றவகையில் விசேட திட்ட மொன்றை வகுத்து வடக்கு மக்க ளின் குடிநீர்ப்பிரச்சினைக்கு நிலை

19 ஆம் பக்கம் பார்க்க

## அவ்டாஸ் கௌஷல் நியமனம்; இந்தியாவிற்கு தொடர்பில்லை

### கொழும்பிலுள்ள தூதரகம் விளக்கம்

(கொழும்பு)

காணாமற்போனோர் தொடர் பாக விசாரணை நடத்தும் நிபுனா குழுவிற்கு ஆலோசனை வழங் கவென நியமிக்கப்பட்டுள்ள சர் வதேச நிபுனர்குழுவில், இந்திய மனித உரிமை ஆர்வலரான அவ் டாஸ் கௌஷல் இணைத்துக் கொள்ளப்படுவதானது இந்திய அரசாங்கத்தின் நிலைப்பாட்டை பிரதிபலிக்காதென கொழும்பி லுள்ள இந்தியத்தூதரகம் தெரிவித் துள்ளது.

காணாமற்போனோர் குறித்து விசாரிக்கும் அதிபர் ஆணைக்குழு வுக்கு ஆலோசனை வழங்குவ தற்காக நியமிக்கப்பட்டுள்ள, ஆலோ சனைக் குழுவின் உறுப்பினர் களின் எண்ணிக்கையை ஆறாக அதிகரிக்கப் போவதாக, ஜனா திபதி அறிவித்திருந்தார்.

இந்தக் குழுவில் இந்தியர் ஒருவரும், இடம்பெறுவார் என் றும் அவர் கூறியுள்ள நிலையில், இந்திய மனித உரிமை செயற் பாட்டாளர் அவ்டாஸ் கௌஷல் ஆலோசனைக் குழுவில் இடம் பெறவுள்ளதாக செய்திகள் வெளி யாகின,

இதுகுறித்து கருத்து வெளி யிட்டுள்ள கொழும்பிலுள்ள இந் தியத் தூதரக மூத்த அதிகாரி ஒருவர்,

தனிப்பட்ட தொடர்புகளின்

19 ஆம் பக்கம் பார்க்க

# இலங்கையுடனான உறவு ஒலியின் வேகத்தில் வளர்ச்சி

## என்கிறது சீனா



(கொழும்பு)

இலங்கையுடனான தமது உறவு ஒலியின் வேகத்தைப் போல வளர்ச்சி கண்டுள்ளதாக சீனா தெரிவித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மியன் மாரில் நடைபெற்ற 'ஆசியான்' மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிசுடனான சந்திப்பின் போதே சீன வெளிவிவகார அமைச்சர் வாங்யி இவ்வாறு தெரி வித்தார்.

இருதரப்பும், உயர்மட்டத் தொடர் புகளைப் பேணி வரவேண்டும் எனவும், பொருளாதார, வர்த்தக, உட்கட்டமைப்பு கட்டுமாண, ஒத்து ழைப்பைத் தொடர வேண்டும் என்றும் சீன வெளிவிவகார அமைச்சர் இதன்போது மேலும் குறிப்பிட்டார்.

இதன் போது கருத்து வெளி யிட்ட வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், சோதனையான காலகட்டங் களையும் தாண்டி சீன, இலங்கை உறவு தாக்குப் பிடித்து வலு வாக வளர்ச்சி பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு இடையிலான பரஸ்பர உறவுக்கு இது ஒரு முன னுதாரணம் என்றும் அவர் கூறி யுள்ளார்.

உட்கட்டமைப்பு, தேசிய பாது காப்பு, பாதுகாப்பு, கலாசாரம், உள்ளிட்ட விடயங்களில் இருத

19 ஆம் பக்கம் பார்க்க

## நித்திரையிலிருந்த வேளை பாம்பு தீண்டி சிறுவன்மரணம்

வவுனியா, ஓமந்தை, கோழியாகுளம் பகுதியில் உள்ள வீடொன் றில் நித்திரையில் இருந்த சிறுவனைப் பாம்பு தீண்டியதில் அவர் மரணமடைந்தார் என வவுனியா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. கோழியாகுளம் பகுதியைச் சேர்ந்த ஈஸ்வரநாதன் தபிசன் (வயது 3). என்ற சிறுவனே இவ்வாறு மரணமடைந்தவரா வார். இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது - வவுனியாவின் மீள்குடியேற்ற கிராமமான ஓமந்தை, கோழியாகுளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு தாய் மற்றும்

19 ஆம் பக்கம் பார்க்க

## அரசு–தொண்டு நிறுவனங்களின் உறவை வலுப்படுத்துவதற்கு உதவி

### யு.என்.டி.பி. அறிவிப்பு



அரசாங்கத்திற்கும் தன்னார் வத் தொண்டு நிறுவனங்களுக் கும் இடையிலான கூட்டுறவை வலுப்படுத்திக் கொள்ளத் தேவை யான ஒழுங்குகளை செய்ய விரும்புவதாக ஐக்கிய நாடுக ளுக்கான அபிவிருத்தித் திட்டம் (யு.என்.டி.பி.)அறிவித்துள்ளது.

இலங்கை தேசிய மனித அபி விருத்தி அறிக்கை நேற்றைய தினம் கொழும்பு பண்டாரநா யாக்க நினைவு கேட்போர் கூடத தில் உத்தியோகபூர்வமாக வெளி

19 ஆம் பக்கம் பார்க்க

## எண்பது வீதமான படையினருக்கு இந்தியாவில் தொடரும் பயிற்சி

### இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைப் படையினரில் எண்பது வீதமானோருக்கு தொடர்ந் தும் இந்தியாவே பயிற்சிகளை அளித்துவருவதாக இராணு வத்தளபதி லெப் ஜெனரல் தயா ரட்னாயக்கா தெரிவித்துள்ளார்.

இராணுவத்தலைமையகத்தில் நடந்த செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் வெளிநாடுகளுடனான இராணுவத்தின் உறவுகள் குறித்து கருத்து தெரிவிக்கையி லேயே அவர் இவ்வாறு தெரி வித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது. நாம் கேட்கும் போதெல்லாம் இந்தியாவிடம் இருந்து உதவிகள் கிடைக் கின்றன.

நாம் இந்திய இராணுவத்து டன் நெருக்கமாகப் பணியாற்று கிறோம்.

இந்தியா மிகவும் உதவியாக உள்ளது. எமது படையினருக் கான மேலதிக வெளிநாட்டுப் பயிற்சித் தேவைகளை நிறைவேற றுகிறது.

பாகிஸ்தானும் கூட, இரா ணுவத்துக்குப் பயிற்சி வசதி களை வழங்கி வருகிறது.

எம்முடன் தொடர்புகளை வைத் திருக்கும் நாடுகளில் அமெரிக்கா வும் ஒன்று.


எமது அதிகாரிகளைக் கருத் தரங்குகள், பயிற்சிப் பட்டறை கள். கலந்துரையாடல்களுக்கு அமெரிக்க இராணுவம் அழைக்

19 ஆம் பக்கம் பார்க்க

## மருத்துவமாது மரணம்

கடமை நேரத்தில் மயங்கி விழுந்த மருத்துவமாது ஒருவர் மரணமானார். இந்தச் சம்பவம் நேற்றையதினம் மட்டுவில் தெற்கு ஆரம்ப சுகாதார நிலையத்தில் இடம்பெற்றது. சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ஸ்ரான்லின் நிஷாந்தினி (வயது - 27) என் பவரே உயிரிழந்தவராவார். நேற் றையதினம் ஒரு மணியளவில் தனது வெளிக்கடமையை முடித்து

19 ஆம் பக்கம் பார்க்க




உள்ளே ➡ தரம் 5 மாணவர்களுக்கான புலமைபரிசில் வினாத்தாள்



## பொது இடத்தில் புகைபொருள் பாவித்தால் கடும் தண்டனை

### இனி புதிய நடைமுறை அமுல்

பொது இடங்களில் புகையிலைசார் பொருட்களான சிகரட், பீடி, சுருட்டு மற்றும் மதுபானம்சார் பொருட்களைப் பயன்படுத்துவது தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே பொது இடங்களில் புகையிலைசார் மற்றும் மதுபானம்சார் பொருட்களைப் பயன்படுத்துபவர்கள் தொடர்பாக உரிய அதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டியது எமது கடமையாகும்.

பொது இடங்களில் புகையிலைசார் மற்றும் மதுபானம்சார் பொருட்களைப் பயன்படுத்துபவர்கள் இனம் காணப்படின் பொலிஸ் அதிகாரிகள் மூலம் சட்ட நடவடிக்கை எடுக்கக் கோருவதாக யாழ்.மாவட்ட புகைத்தல் கட்டுப்பாட்டுக் குழுவின் நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் ஆரம்ப கட்டமாக நல்லூர் உற்சவ காலத்தினை முன்னிட்டு ஆலயச் சூற்றாடலில் புகையிலைசார் மற்றும் மதுபானம்சார் பொருட்களைப் பயன்படுத்துபவர்கள் இனம் காணப்படின் உரியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
கலைப்பீடம்

புதிய கல்வியாண்டு கற்றல் செயற்பாடுகள் ஆரம்பம் 2012/2013

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலை மற்றும் இராமநாதன் நுண்கலைக்கழகத்தின் அனைத்து வருட மாணவர்களுக்குமான கல்வியாண்டு 2012/2013 இற்கான விரிவுரைகள் யாவும் எதிர்வரும் 25/08/2014 ஆம் திகதி ஆரம்பமாகின்றன.

முன்னர் அறிவிக்கப்பட்டபடி 11/08/2014 ஆம் திகதி விரிவுரைகள் நடைபெறமாட்டாது என்பதனை மாணவர்கள் கவனத்திற் கொள்ளவும்.

*வழிகாட்டல் நிகழ்வு :*

இராமநாதன் நுண்கலைக்கழகத்துக்கு கல்வியாண்டு 2012/2013 இற்குத் தெரிவு செய்யப்பட்டுப் பதிவுகளை மேற்கொண்ட சித்திரமும் வடிவமைப்பும், நடனம், இசை ஆகிய பாடநெறிகளுக்கான புகுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் நிகழ்வுகள் (Orientation Programme) எதிர்வரும் 25/08/2014 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு இராமநாதன் நுண்கலைக்கழகத்தில் நடைபெறும்.

பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்.
08/08/2014
(C/3777)


## புதிய கட்டடத்தில் ஸ்கந்தபுரம் சந்தை இரு தடவை திறப்பு விழா நடந்த விநோதம்

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஸ்கந்தபுரம் பொதுச்சந்தை நேற்று முன்தினம் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனினால் இரண்டாவது தடவையாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் துரித மீட்சித்திட்டத்தின் கீழ் 63 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கடந்த 15.09.2011 அன்று கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வை.குகராசாவினால் அடிக்கல் நாட்டப்பட்டு, கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு கடந்த 20.10.2012 அன்று நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக்குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமாரால உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. இதன்போது ஸ்கந்தபுரம் சந்தைக்கான நினைவுப் படிகத்தினை பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சி மற்றும், வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் பிரதிப் பணிப்பாளர் விஜயகிருஸ்ணனால் திரைநீக்கம் செய்யப்பட்டது.

இதன் பின்னர் குறித்த ஸ்கந்தபுரம் பொதுச் சந்தைக்கான ஏனைய அடிப்படை வசதிவாய்ப்புக்களை கரைச்சி பிரதேச சபையினால் மேற்கொள்ளப்படாமையினால் சந்தை வியாபாரிகளினால் சந்தைக் கட்டடத்தைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து வியாபாரிகளால் பிரதேச சபையினருக்கு கொடுக்கப்பட்ட அழுத்தத்திற்கு பின்னர் சபையினால் ஏனைய அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட நிலையில், மீண்டும் ஸ்கந்தபுரம் பொதுச்சந்தை நேற்று முன்தினம் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனினால் திறந்து வைக்கப்பட்டது. இதன்போது மேலுமொரு நினைவுப் படிகம் வடக்கு மாகாணசபை உறுப்பினர் பசுபதிபிள்ளையினால் திரைநீக்கம் செய்யப்பட்டது.

ஸ்கந்தபுரம் பொதுச்சந்தையின் பிரதான வாயிலின் இடது பக்கம் மீள் எழுச்சி மற்றும் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் பிரதிப்பணிப்பாளர் விஜயகிருஸ்ணனால் 20.10.2012 அன்று திரைநீக்கம் செய்யப்பட்ட நினைவுப் படிகமும், வலது பக்கம் வடக்கு மாகாணசபை உறுப்பினர் பசுபதிபிள்ளையினால் நேற்று முன்தினம் திரைநீக்கம் செய்யப்பட்ட நினைவுப் படிகமும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வுக்காக கிட்டத்தட்ட ஒரு இலட்சம் ரூபா வரை செலவு செய்யப்பட்டுள்ளதாகவும், நினைவுப் படிகத்திற்கு மட்டும் 50 ஆயிரம் ரூபா தேவையெனவும் தெரிவிக்கும் பிரதேச வர்த்தகர்களும், பொது மக்களும் இந்தப் பணத்தினை வைத்து சந்தைக்கான மிகவும் அவசியமான நீர்த் தேவை உள்ளிட்ட ஏனைய பணிகளை மேற்கொண்டிருக்கலாம் எனவும் தெரிவிக்கும் அவர்கள் இதனை ஒரு கேலிக்கூத்தான நடவடிக்கை எனவும் விமர்சித்துள்ளனர். (29.)

## சர்வதேச இளைஞர் தினத்தையொட்டி விசேட இரத்ததான முகாம்



சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்ட செயலகமும், யாழ்.மாவட்ட இளைஞர் கழக சம்மேளனம் மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ்.மாவட்ட காரியாலயமும் இணைந்து சிரமதானம் மற்றும் இரத்ததான முகாம் என்பனவற்றை ஏற்பாடு செய்து நடாத்தின.

இவ் நிகழ்வு நேற்றுக் காலை 8.30 மணி முதல் இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் செ.விஜிதரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் பவானி பசுபதிராஜா, தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வடக்கு மாகாணப் பதில் பணிப்பாளர் கே.தவராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இரத்ததான நிகழ்வானது காலை 8.30 மணி முதல் அரியாலை ச்ரஸ்வதி சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது. இதில் சுமார் நூறு பேர் வரையில் இரத்ததானம் செய்தனர்.

அதனைத் தொடர்ந்து சிரமதான நிகழ்வானது யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றது.

ஆய்வுகூடப் பகுதி, கண் விடுதி, களஞ்சிய அறை, என்பு முறிவு விடுதி, விபத்து பிரிவு ஆகியவை சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டன. அத்துடன் கண் விடுதியிலுள்ள தளபாடங்களிற்கு வர்ணம் பூசும் பணிகளும் இடம்பெற்றன.

இவ் நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உத்தியோகத்தர்கள், இளைஞர் கழக சம்மேளனங்களின் பிரதிநிதிகள், இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பல இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டனர். (48,பா)


ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1082 | திகதி 11.08.2014

வெற்றி எண்கள் | ஆங்கில எழுத்து
26 33 45 51 M

ஜக்பொட் பரிசு ரூ 6 59,39,420/= வெல்லப்படவில்லை

| பரிசு வகைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 3,59,39,420/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 2 | 10,00,000/= | ரூ. 20,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 3 | 50,000/= | ரூ. 1,50,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 264 | 1,000/= | ரூ. 2,64,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 472 | 1,000/= | ரூ. 4,72,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11560 | 60/= | ரூ. 6,93,600/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 5973 | 40/= | ரூ. 2,38,920/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 151325 | 20/= | ரூ. 30,26,500/= |
| ஆங்கில எழுத்து | 21995 | 20/= | ரூ. 4,39,900/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 72,84,920/=

எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூபா. 36,235,520/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.08.14 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
(C/3763)


## விபத்தில் சிக்கிய சிறுவன் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிறவுண் வீதி சந்தியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டோ - மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்த மூன்று வயதுச் சிறுவன் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்ததாக அவ்வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசடி வீதி, கந்தர்மடத்தைச் சேர்ந்த ஜெயக்குமார் சோபிஜன் (வயது-3) என்ற சிறுவனே இவ்வாறு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை 6.00 மணியளவில் ஆட்டோ ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்த சிறுவன் யாழ்.பிறவுண் வீதிச் சந்திப் பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதி வேகக்கட்டுப்பாட்டை மேற்கொண்ட போது குறித்த சிறுவன் ஆட்டோவில் இருந்து தூக்கி வீசப்பட்டு ஆட்டோச் சில்லில் அகப்பட்டு காயமடைந்ததாகவும் இதன் பின்னர் சிறுவன் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (பா)


சிறு விளம்பரம்

டயானா பிளாஸ்ரிக்
றீசைக்கிள் (மீள்சுழற்சி)

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.
(C/3395)

# சிறுவர் இல்லங்களுக்கு ஆடைகள் அன்பளிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு முள்ளியவளையில் உள்ள "பாரதி" இல்ல சிறுவர்களுக்கு 60 ஆயிரம் ரூபா பெறுமதியான பெட் சீற் மற்றும் ஆடைகளையும் கிளிநொச்சி மாவட்டம் இரணைமடுவில் உள்ள "செஞ்சோலை" பெண் சிறுவர் இல்ல சிறுவர்களுக்கு 20 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆடைகளையும் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பஞ்சலிங்கம் சிறீதரன் குடும்பத்தினர் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

முல்லைத்தீவு பாரதி இல்லம் மற்றும் செஞ்சோலை சிறுவர்களுக்கான அன்பளிப்பினை முல்லைத்தீவு பாரதி இல்லத்தில் வைத்து இவர்கள் சிறுவர்களிடம் கையளித்தனர். அதனைத் தொடர்ந்து பாரதி இல்ல சிறுவர்கள் தமது கலைத் திறமைகளை வெளிப்படுத்தும் விதமாக ஒரு மணி நேரம் கலை நிகழ்வுகளையும் "செஞ்சோலை" சிறுவர்கள் தமது கலைத் திறமைகளை வெளிப்படுத் தும் விதமாக 30 நிமிட நேர கலை நிகழ்வுகளையும் தொகுத்து வழங்கினர் மேலும் சிறுவர்கள் மத்தியில் ப.சிறீதரன் உரை நிகழ்த்தி சிறுவர்களுக்கான அறிவுரைகளை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (63)

# மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் நடைபாதை அமைக்கும் பணி நிறைவு




இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையினால் தொழிற்திறன் நாளை முன்னிட்டு இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை, நல்லூர் மங்கையர்க்கரசி பாடசாலையின் உள்வளாகப் பகுதியில் நடைபாதையை அமைத்துக் கொடுத்துள்ளது. இதன்போது மேற்படி அதிகார சபையின் தொழில்நுட்பப் போதனாசிரியர் மோகனச்சந்திரனுடன் கட்டுமானப் பணியில் இராணுவப்பயிற்சியாளர்கள் இணைந்து செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இச் செயற்றிட்டம் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சனின் வழிப்படுத்தலில் நடைபெற்றதற்கு அதிபர் மற்றும் பாடசாலைச் சமூகத்தினர் நன்றி தெரிவித்துள்ளனர்.

# சிக்கன கூட்டுறவு சங்கத்தில் பல இலட்சம் ரூபா நிதி மோசடி

கரவெட்டி பிரதேச செயலகத்தில் இயங்கும் சிக்கன கூட்டுறவு சங்கத்தில் ல இட்சம் ரூபா மோசடி இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிக்கன கூட்டுறவு சங்கத்தில் அங்கத்தவராக இருப்பவர்களுக்கு தமது கடனைக் கட்டியும் புத்தகத்தில் அதற்கான பதிவுகள் இல்லாமல் இருப்பதனால் கட்டி முடிக்கப்பட்ட பணத்திற்கு பதிலாக மீண்டும் பணத்தை கட்டுமாறு கடிதம் மூலம் அறிவிக் கப்பட்டுள்ளது. இந்த மோசடி சம்பந்தமாக பொருளாளருடன் தொடர்பு கொண்ட போது நீதிமன்றத்தில் சந்திப்பதாக சிக்கன கூட்டுறவு முன்னைநாள் பொருளாளர் தெரிவித்துள்ளார். (18)



கைதடி மேற்கு அருள்மிகு ஞானவைரவர் ஆலய வருடாந்த உற்சவத்தின் போது... (51)

# மற்றவர்களைப் பற்றி என்ன தெரியும் நமக்கு?






குண்டுச்சட்டிக்குள்ளே குதிரை ஓட்டுறதைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பியள். அப்படியான குதிரையோட்டமும் குதிரைகளும் யாழ்ப்பாணத்துக்குள்ளதான் இருக்கு.

யாழ்ப்பாணம் எண்டு இப்பிடிப் பொதுவாகச் சொன்னால், நீங்கள் எந்த இடங்களை யாழ்ப்பாணம் எண்டு சொல்றீங்கள் எண்டு கேட்பீங்கள்.....

உண்மைதான். அப்பிடியொரு குழப்பம் கனகாலமாக இருக்குத்தான்.

யாழ்ப்பாணம் எண்டால் பண்ணைப்பாலத்திற்கு இஞ்சாலையும், அரியாலைக்குள்ளேயும் சுன்னாகத்திற்குத் தெற்கேயும் மானிப்பாய்க்கு கிழக்காலும் இருபாலைக்கு இப்பாலும் உள்ளதே யாழ்ப்பாணம்.

இதை நீங்கள் விளங்காட்டில் நாங்கள் ஒண்டும் செய்யேலாது.

இந்த யாழ்ப்பாணத்துக்குள்ளதான் எல்லாக் குதிரைகளும் ஓடும்.

இதுக்குள்ளதான் எல்லாக் குதிரை ஓட்டமும் நடக்கும்.

அது மத்திய அரசின்ர குதிரைகளா இருந்தால் என்ன? மாகாணசபையின்ர குதிரைகளா இருந்தால் என்ன?

எல்லாப் பாதைகளும் ரோமாபுரிக்கே எண்டமாதிரி எல்லாக் குதிரை ஓட்டங்களும் யாழ்ப்பாணத்திற்கே.

இல்லையெண்டால், பருத்தித்துறையில இருந்து வடமராட்சி கிழக்குக்குப் போற ஒரேயொரு ரோட்டை இன்னும் திருத்தாமல் இருக்கினமா?

அதைப்போல ஏ9 வீதியில் புதுக்காட்டுச்சந்தியில இருந்து மருதங்கேணிக்குப் போற வீதியைத்தன்னும் புதுப்பிக்காமல் விடுவினமா?

காரைநகரில ஊரியான், பலகாடு பக்கமெல்லாம் காடுமண்டி, றோட்டெல்லாம் கல்லுக்கிளம்பிப் போயிருக்கு. இதெல்லாம் கண்ணுக்குத் தெரியாமல் போகுமா?

புத்தூரில் கலட்டிப்பக்கம் கண்படாமல் இருக்குமா? உரும்பிராய், ஊரெழுப் பக்கத்திலயும் இதுதான் நிலைமை.

இப்பிடி ஏராளம் இடங்கள் பாராமுகமாய் – குதிரையோடாத இடங்களாக உள்ளன.

ஏன் இவையெல்லாம் இப்பிடி கண்படாமலும், கருத்திற் படாமலும் புறத்தியில் வைக்கப்படுகின்றன?

இங்கே இருப்பவர்கள் தமிழர்களில்லையா?

இந்தச் சனங்கள் கடந்த காலத்தில் போராடவில்லையா?

அப்பிடியிருந்தும் எதுக்காக இப்பிடி ஒதுக்கப்படுகினம்.

இதைவிட இன்னொரு கொடுமை என்னெண்டால், நெல்லியடி கொடிகாமம் வீதியின் இன்றைய நிலைமையைப் பார்த்தீங்கள் எண்டால் நல்லாய் விளங்கும்.

இல்லாட்டிக்கு இந்த றோட்டில ஒரு தடவை பயணம் போய்ப்பாருங்கோ...

இந்த வீதியில் 20 நிமிசப் பயணத்தை ஒரு மணி நேரத்தில் செய்யவேண்டியிருக்கு. அந்த ஒரு மணித்தியாலத்தில வயித்து நோப் பிடிச்சிடும். அப்பிடிப் பழுதாகிக் கிடக்கு வீதி.

வடமராட்சிப் பிரதேசத்தை தென்மராட்சியோடு இணைக்கிற பிரதான வீதி இது.

வடமராட்சியார் கொழும்புக்கு போக றெயின் எடுக்கிறதுக்கு வாற வழி.

ஆனால் இன்னும் இந்த றோட்டைத் திருத்துறதுக்கு யாருடைய நெஞ்சும் இளகவில்லை.

இப்பிடித்தான் இருக்குது எங்கட ஆக்களின்ர அதிகாரப் பரவலாக்கல்.

அபிவிருத்தியெண்டாலும் அது யாழ்ப்பாணத்தின்ர காலடிக்குள் மட்டும்தான் எண்ட சிந்தனை நல்லா வளந்திருக்கு.

சுத்திச்சுத்தி சுப்பற்ற கொல்லைக்குள்ளே எண்ட மாதிரி யாழ்ப்பாணத்துக்குள்ளதான் வீதிகளைத் திருத்தினாலென்ன, கட்டடங்களைக் கட்டினாலென்ன, கந்தோர்களை திறந்தாலென்ன, திட்டங்களைப் போட்டாலென்ன எல்லாமே நடக்குது.

இந்தக் குதிரையோட்டத்துக்கு இல்லையெண்டால் இந்த வருத்தத்துக்கு என்ன வைத்தியம் செய்யிறது?

அரசியல்வாதிகள் சிலவேளை இந்தக் குதிரை ஓட்டங்களை அடக்கி, கட்டுப்படுத்தி கொஞ்சம் வழிப்படுத்த யோசிக்கலாம்.

எண்டாலும் இந்தக் குதிரைகள் லேசில அடங்காது.

தன்னைச் சுத்தித்தான் உலகம் இயங்குது எல்லாம் இயங்க வேணும் எண்டு நினைக்கிற குதிரைகள்தான் இவை... பிறருக்கு என்னென்ன பிரச்சினைகள், அவை என்ன நினைப்பினம், அவர்களுடைய கஷ்டங்கள் என்ன, அதுகளையும் கவனத்தில எடுக்க வேணும் எண்டெல்லாம் இந்தக் குதிரைகள் நினைப்பதேயில்லை...

மற்றவையைப் பற்றிச் சிந்திக்காத சமூகத்தை மற்றவையும் வெறுமனே பேச்சுக்கு மட்டும் நடிச்சுப்போட்டு கைகழுவி விட்டிடுவினம் எண்டதை நாங்கள் தொடர்ந்து அனுபவிச்சு வாறம். அதை விளங்கிக் கொள்ளாமல் மற்றவை சரியில்லைச் சரியில்லை எண்டதைத்தான் தொடர்ந்தும் கண்டுபிடிச்சுச் சொல்லிக்கொண்டு வாறம்...

அதிகாரப் பகிர்வைப் பற்றியும், அபிவிருத்திப் பரவலாக்கல் பற்றியும் என்னதான் பேசினாலும் இந்தக் குதிரைகளைக் கட்டுப்படுத்தாத வரை எதுவுமே பயனில்லை.

இந்தக் குதிரைகள் பிறத்தியிலிருந்து வந்தவையில்லை.

எல்லாமே தமிழ்க்குதிரைகள்தான். அதுவும் யாழ்ப்பாணத்துக் குதிரைகளே.

பணம் வரும்போது இரண்டு கால்களுடன் வரும். போகும்போது பல கால்களுடன் போகும். - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## பிறரைச் சாட்டுதலும் எதிர்பார்த்தலும்

தோல்விகள், இயலாமைகள், சறுக்கல்கள், துயரங்கள் எல்லாவற்றுக்கும் காரணங்களை வெளியே தேடுவதும், கண்டுபிடித்துப் பழியை அவர்களிடமோ அவைகளிடமோ போட்டுவிட்டு, நம்மைக் குற்றமேதும் அற்றவர்களாய் உணர்வதில் நிம்மதியடைவதும் பொதுவான மனித இயல்பு.

எங்கள் வெற்றிகளையெல்லாம் எங்களது தோள்களிலேயே ஏந்திக்கொள்ளும் நாம், தோல்வி நெருங்கும்போதே சுட்டுவிரலைத் தயாராக்கிக் கொள்கிறோம், மற்றவர்கள் மீது பழியைப் போட!

நமது செயல்களுக்கான, அதனாலுண்டான விளைவுகளுக்கான முழுப் பொறுப்பையும் நாமே எடுத்துக் கொள்வது என்பது அவ்வளவு சுலபமானதல்ல. அதற்கு மன உறுதியும், தைரியமும், தன் மீது வைக்கும் அழுத்தமான நம்பிக்கையும் வேண்டும். தன்னுள்ளேயே குற்றங்களைத் தவறுகளைத் தேடும் சுயவிமர்சன மனப்பண்பும், அதை வெளிப்படுத்தும் ஓர்மமும் வேண்டும்.

ஆனால் அதன் மூலம்தான் நாம் தவறுகளிலிருந்தும் தோல்விகளிலிருந்தும் மீண்டு வெளியே வர முடியும். நமது செயல்களுக்கான விளைவுகளின் பொறுப்பை நாமே எடுத்துக் கொள்ளும் போது தான் நமது அடுத்த நகர்வு வெற்றியை நோக்கியதாக மாற முடியும்.

தடுக்கி விழுந்ததுக்கு கல்லைத் திட்டிக் கொண்டிருப்போம் என்றால், எழுந்து கவனமாக நடப்பதற்கான உந்துதல் நமக்குக் கிடைக்கப் போவதில்லை.

பொதுவாக நாம் நமது தோல்விகளுக்கான காரணங்களை வெளியேதான் தேடுவோம். நமது சோகத்துக்குக் காரணம் நண்பன், கோபத்துக்குக் காரணம் மனைவி, ஏமாற்றத்துக்குக் காரணம் கூட வேலைபார்க்கிறவர் என்றுதான் சொல்லிக் கொண்டிருப்போம்.

நமக்கு வெளியிலே இருப்பவைதான் நமது வெற்றி தோல்வியை நிர்ணயிக்கின்றன என்று நாம் கருதிக் கொள்வதே இதன் காரணம். அரசியலிலும் நமது துன்பங்கள் ஏமாற்றங்களுக்கெல்லாம் பிறர்தான் கரணம் என்று பழியை அவர்கள் மேல் போட்டுவிட்டு நாம் வாளாவிருக்கிறோம்.

அதனால்தான் யாராவது வந்து தீர்வை எடுத்துத் தருவார்கள் என்றும், இந்தியாவோ சீனாவோ அமெரிக்காவோ தங்களிடையே மோதிக் கொண்டால் நமக்கு ஏதாவது நல்லது நடந்து விடாதா என்று நப்பாசையிலும் காத்திருக்கிறோம்.

ரோல்ப் மார்ஸ்டன் என்ற உளவியல் தத்துவ நிபுணர் சொல்கிறார் "உங்கள் தோல்விகளுக்கான முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளுங்கள். உங்கள் தோல்விகளுக்கான பொறுப்பையும் நீங்களே எடுத்துக் கொள்ளும் போது உங்களுக்கு வெற்றி சர்வ நிச்சயம்".

தோல்விகளை நீங்கள் ஏற்றுக் கொள்ளும்போதுதான் உங்களுடைய மன அழுத்தமும் குறையும். வெற்றியை நோக்கிப் பயணிக்க உங்களுக்கு ஊக்கமும் கிடைக்கும். இல்லையேல் யாரைக் குறை சொல்லலாம் என தேடுவதிலேயே ஒட்டு மொத்த சக்தியும் வீணாகிவிடும் என்கிறார் அவர்.

நமக்குள்ளே நாம் மூழ்கி நமது தோல்விகளுக்கான காரணங்களை ஆராயத் தொடங்கினால் விடைகள் வித்தியாசமாக வரும். நமது வீம்போ, பொறுமையின்மையோ, விளக்கமின்மையோ, பிழையான நம்பிக்கைகளோ எதுவோதான் காரணமாக இருந்திருக்கிறது என்பது தெரியவரும்.

நமக்குள் இருக்கும் பிழைகளைத் தானே நாம் சரிசெய்ய முடியும்! நமது வெற்றி தோல்விக்கான நாணயக்கயிறு பிறரிடமோ, சூழ்நிலையிடமோ இருக்கிறது என நாம் கருதிக் கொள்ளும் காலம் வரை நமது வெற்றியை நாம் உருவாக்க முடியாது.

'நானே பிரச்சினை" எனப் புரிந்துகொள்பவர்கள் 'என்னால்தான் தீர்வு" என்பதையும் அறிந்து கொள்வார்கள். - ஆசிரியர்.

# பல்கலைக்கழக மாணவன் மீதான தாக்குதலில் உண்மை இல்லை

## பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவிப்பு.

(கொழும்பு)

சப்ரகமுவ பல்கலைக்கழக விடுதியில் வைத்து முகமாலையைச் சேர்ந்த மாணவனொருவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தில் எவ்வித உண்மையும் இல்லை என்றும் இந்த தாக்குதல்,குறித்த மாணவனால் தனக்குத் தானே மேற்கொள்ளப்பட்டதென விசாரணைகளிலிருந்து தெரியவந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சப்ரகமுவா பல்கலைக்கழக மாணவர் விடுதியில் வைத்து முதலாமாண்டு மாணவரான சந்திரகுமார் சுதர்ஷன் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக பலாங்கொடை பொலிஸ் நிலையத்தில் கடந்த 8 ஆம் திகதி முறைப்பாடு செய்யப்பட்டது.

அதிகாலை வேளையில், தான் மலசலகூடம் சென்றபோது, அப்பகுதியில் நின்றிருந்த இனந்தெரியாதோர் சிலர் இந்த தாக்குதலை மேற்கொண்டதாக தாக்குதலுக்கு உள்ளான மாணவன் தனது முறைப்பாட்டில் தெரிவித்திருந்தார்.

இந்த முறைப்பாடு தொடர்பில் ஆரம்பகட்ட விசாரணை ஆரம்பிக்கப்பட்டபோது, தாக்குதலுக்கு உள்ளான மாணவன் குறித்து சந்தேகம் எழுந்தது. அத்துடன், இச்சம்பவம் தொடர்பான மாணவனின் கூற்றுக்கும் விடுதி பாதுகாவலர்களின் கூற்றுக்கும் பரஸ்பர வேறுபாடு காணப்பட்டது.

இச்சம்பவத்தை அடுத்து, நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள பல்கலைக்கழக விடுதிகளைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம், சிங்கள மாணவர்களுக்கிடையில் அமைதியற்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால், பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் அம்மாணவன் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டான்.

இதன்போது, தனக்கு ஏற்பட்டுள்ள காயங்கள் தன்னாலேயே ஏற்படுத்திக்கொள்ளப்பட்டவை என்றும் தான் முகமாலையைச் சேர்ந்தவர் என்பதால், இவ்வாறான சம்பவமொன்றின் மூலம் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கு இடமாற்றத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற நோக்கத்தில் இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் அம்மாணவன் தெரிவித்துள்ளார்.

அம்மாணவனின் இந்த வாக்குமூலத்தை அடுத்து, காயங்கள் ஏற்படுத்திக்கொள்ளப் பயன்பட்ட பிளேட், பொல்லு, வயர் ஆகியன கைப்பற்றப்பட்டன. இதனையடுத்து, குறித்த மாணவன் கொழும்பு பிரதான சட்ட வைத்திய அதிகாரி அஜித் தென்னகோன் முன்னிலையில் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

இதன்மூலம், அவருக்கு ஏற்பட்டிருந்த காயங்கள் அவராலேயே ஏற்படுத்தப்பட்டன என்பது உறுதியானது.

இவ்வாறான பொய் முறைப்பாடுகள் காரணமாக, வடக்கு கிழக்கு மாத்திரமன்றி அனைத்து பிரதேசங்களிலுமுள்ள தமிழ் மாணவர்கள் மத்தியில் அமைதி சீர்குலைந்துள்ளது.

இதனால், இம்மாணவன், பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார் என பொலிஸ் பேச்சாளர், தனது அறிக்கையில் மேலும் கூறியுள்ளார்.

# சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுக்க மாகாணமட்டத்தில் மத்திய நிலையங்கள்

(கொழும்பு)

சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுக்க மாகாண மட்டத்தில் பாதுகாப்பு மத்திய நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு இதற்கென 226 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்தவின் ஆலோசனையின் பேரில் வடக்கு மாகாணம், மேல் மாகாணம், மத்திய மாகாணம், வட மத்திய மாகாணம், ஊவா மாகாணம், கிழக்கு மாகாணம் ஆகிய ஆறு மாகாணங்களில் இந்த பாதுகாப்பு மத்திய நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த மேற்படிபாதுகாப்பு மத்திய நிலையங்கள் அமைக்கப்படுவதற்குரிய காசோலைகளை இதன்படி ஊவா மாகாண சபையின் செயலாளர் பீ.பி.அமரசேகர, வட மத்திய மாகாண சபையின் செயலாளர் எச்.எம்.ஆர்.பீ. ஹேரத் வட மாகாண சபையின் செயலாளர் ஆர்.விஜய லட்சுமி மத்திய மாகாண சபையின் செயலாளர் சரத் பிரேமவங்ச ஆகியோரிடம் கையளித்தார். வட மாகாணத்தில் கோப்பாய், மருதங்கேணி மற்றும் கரையோர பகுதிகளிலும், மத்திய மாகாணத்தில் வேரவலவத்தையிலும், வட மத்திய மாகாணத்தில் சாலியபுர, வடாடுகமயிலும் இந்த பாதுகாப்பு மத்திய நிலையங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

# 25 ஆயிரத்து 282 வீடுகள் யாழ்.மாவட்டத்தில் நிர்மாணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 மே மாதம் வரையில் 25 ஆயிரத்து 282 வீடுகள் பல்வேறு திட்டங்களின் மூலம் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட செயலக புள்ளி விபரத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்.மாவட்டத்தில் வீடு அற்றவர்களின் விபரங்கள், கிராம அலுவலர் ஊடாக சேகரிக்கப்பட்டு பல்வேறு திட்டங்கள் மூலம நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டன அந்தவகையில், வடக்கு, கிழக்கில் வீடுகள் நிர்மாணிக்கும் திட்டத்தின் கீழ் 13,350 வீடுகளும், மீள்குடியேற்ற அமைச்சின் கீழ் 100 வீடுகளும், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் கீழ் 686 வீடுகளும் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன், அரச சார்பற்ற நிறுவனங்களினூடாக 3,428 வீடுகளும், இலங்கை இராணுவத்தால் 1,700 வீடுகளும், வங்கிகளால் 211 வீடுகளும், சமூக சேவைகள் அமைச்சால் 62 வீடுகளும் இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் 5,745 வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

# சுனாமி நிவாரண மோசடி

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் சுனாமி நிவாரணம் பெற்றுக் கொடுப்பதாக தெரிவித்து பல மில்லியன் டொலர்களை மோசடி செய்த கனடா நிறுவனம் குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

கனடா அரசாங்கத்தை ஏமாற்றி, குறித்த நிறுவனம் நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளதாக அந்நாட்டு நீதிமன்று தெரிவித்துள்ளது.

உலகின் 50 நாடுகளில் கிளைகளைக் கொண்ட அந்நிறுவனம் இலங்கைக்கு சுனாமி நிவாரணத்தை பெற்றுக் கொடுக்கும் ஒப்பந்தத்திலேயே மோசடி செய்துள்ளது.

இந்த நிதி மோசடி குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளதாக குறித்த நிறுவனத்தின் பொறுப்பாளர் டக்மெத் ஆதர் தெரிவித்துள்ளார்.

# “மழைப்பழம்” சிறுவர் வடமோடிக் கூத்து

## சிறுவர் கூத்தரங்கு ஓர் அறிமுகம்

ஈழத்தமிழரது பாரம்பரியக் கலைவடிவமான கூத்தரங்கானது அன்றுதொடக்கம் இன்றுவரை தமிழ் மக்கள் வாழ்கின்ற இடங்களில் உயிர்த்துடிப்புடன் இயங்கி வருவதனைக் காணமுடிகின்றது. இது பெரும்பாலும் வளர்ந்த ஆண்களுக்குரியதாகவே உள்ளது. பெண்கள் சிறுவர்களுக்கான இடம் ஆரம்பகாலக் கூத்துக்களில் காணப்படவில்லை.

குறிப்பாக கட்டியக்காரன், தோழிப் பாத்திரங்களுக்கு மாத்திரம் ஒருசில சிறுவர்கள் உள்வாங்கப்பட ஏனையோர் வாய்பார்ப்பவர்களாகவும், எடுபிடி வேலைகளைச் செய்பவர்களாகவுமே இருந்துவந்தனர். இவ்வாறான விடயங்களைக் கேள்விக்குள்ளாக்கி முற்றுமுழுதாகச் சிறுவர்களுக்காக மாத்திரமே தனித்துவமாக உருவாக்கப்பட்ட அரங்கே சிறுவர் கூத்தரங்காகும்.

இலங்கைத் தமிழ் அரங்க வரலாற்றில் சிறுவர் கூத்தரங்கு என்ற எண்ணக்கரு அல்லது



“மழைப்பழம்” சிறுவர் வடமோடிக் கூத்தின் சதங்கையணிவிழா மட்டக்களப்பு சித்தாண்டி -3 (ஆற்றங்கரை அரசடிப் பிள்ளையார் ஆலய அருகாமையில்) இன்று 13-08-2014 புதன்கிழமை கலாநிதி சி.ஜெயசங்கர் தலைமையில் நடைபெறுகின்றது. அண்ணாவியார் வே.தம்பிமுத்து அவர்கள். பிரதமவிருந்தினராக கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் கலாநிதி வ.இன்பமோகன் கலந்துகொள்கிறார். சிறப்புரை நுண்கலைத்துறை விரிவுரையாளர் சு.சந்திரகுமார். அறிமுக உரை நுண்கலைத்துறை மாணவி தி.துலக்சனா.

கருத்துருவம் புதியது. இது கலாநிதி சி.ஜெயசங்கர் அவர்களால் உருவாக்கம் பெற்றது. “நவீன அரங்கின் கூறான சிறுவர் அரங்கிலிருந்தும் கல்வியியல் அரங்கிலிருந்தும் வேறுபட்டது. ஆயினும் மேற்படி இரு அரங்குகளின் எண்ணக் கருக்களையும் உள்ளிணைத்துக் கொண்டது” என இவர் கூறுகின்றார்.

சிறுவர் கூத்தரங்கானது மட்டக்களப்பு குருக்கள்மடத்தில் “நந்திப்போர்” எனும் வடமோடிக் கூத்தின் மூலமாகவே துளிர்விட ஆரம்பித்தது. இதன் அடுத்தகட்ட வளர்ச்சியாக “மழைப்பழம்” சிறுவர் வடமோடிக் கூத்தானது அரங்கேற்றப்பட்டது. சி.ஜெயசங்கர் அவர்களினால் தமிழில் மொழிபெயர்த்து எழுதப்பட்ட “கிரிஜா” எனும் கதையினை அடிப்படையாகக் கொண்டது.

சீலாமுனைக் கிராமத்தைச் சேர்ந்த கூத்துப் பனுவல் எழுத்தாளர் செ.சிவநாயகம் அவர்களால் “மழைப்பழம்” எனும் பெயரில் கூத்துப் பிரதியாக எழுதப்பட்டது. இது சீலாமுனைக் கிராமத்தைச் சேர்ந்த சி.ஞானசேகரம் அண்ணாவியாரால் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறையின் 2 ஆம் வருட சிறப்புக் கற்கை மாணவர்களுக்கு பயிற்றுவிக்கப்பட்டது.

இவர்களுடன் இணைந்து மூன்றாவது கண் உள்ளூர் அறிவுத்திறன் செயற்பாட்டுக்குழு நண்பர்களும் பங்குகொண்டு மாமாங்கேஸ்வரர் ஆலயத் திருவிழாச் சூழலில் 2012 ஆம் ஆண்டு அரங்கேற்றப்பட்டது.

“மழைப்பழம்” எனும் சிறுவர் கூத்து சித்தாண்டி-3 இல் வசிக்கின்ற சிறுவர்களை ஒன்றிணைத்து அண்ணாவியார் வே.தம்பிமுத்து அவர்களின் உதவியுடன் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றது. இக் கூத்தாற்றுகையின் சட்டம் கொடுத்தல் நிகழ்வானது 12.07.2014 சனிக்கிழமை சித்தாண்டியில் நடைபெற்றிருந்தது.

எமது பாரம்பரியக் கூத்தரங்கானது புராண, இதிகாசக் கதைகளை உள்ளடக்கி விடிய விடிய ஆற்றுகை செய்யப்படுகின்றது. ஆனால் சிறுவர் கூத்தரங்கின் கதைக்கருவானது பண்பாடும், பாரம்பரியமும், அறிவியலும் சார்ந்தவையாகக் காணப்படுகின்றது. அத்துடன் நற்கருத்துக்களை, ஒழுக்க விழுமியங்களை எடுத்துக் கூறுவதாகவும், அறிவூட்டலுடன் கூடிய மகிழ்வூட்டல்களைச் சிறுவர்களுக்கு வழங்குவதாகவும் அமைந்துள்ளது. ஆற்றுகைக்கான கால அளவானது ஒன்று தொடக்கம் இரண்டு மணித்தியாலங்களுக்கு உட்பட்டதாகவும் அமைந்துள்ளது.

கூத்துப் பாடலின் வரிகள், மெட்டுக்கள் என்பன எளிமையானதாகவும், சிறுவர்கள் இலகுவில் உள்வாங்கிக் கொள்ளும் விதத்திலும் அமைக்கப்பட்டுள்ளமை இதன் சிறப்பம்சமாகும்.

சிறுவர் கூத்தரங்கிலே பங்குபற்றும் கலைஞர்களாகவும், பார்வையாளர்களாகவும் உள்ள சிறுவர்கள் பல நன்மைகளைப் பெறுகின்றனர். பங்குகொள்வதனூடாகக் கற்றல், ஞாபகசக்தி வளர்ச்சி, தன்னைத் தானே உணர்ந்துகொள்ளல், உள்ளார்ந்த திறமைகளை விருத்திசெய்தல், கூத்துப் பழகுதல் தொடக்கம் அரங்கேற்றம் வரையான தொடர் செயற்பாட்டினூடாகக் காணப்படும் ஒழுங்குமுறைகள் மற்றும் பாரம்பரியமான சம்பிரதாயங்களைத் தெரிந்துகொள்ளல், குரு மரியாதை, ஒற்றுமை எனப் பல திறமைகளை வகுத்துக் கொள்ள உதவும் ஊடகமாகவும் சிறுவர் கூத்தரங்கு காணப்படுகிறது.

பாரம்பரிய கூத்தரங்கிற்கேயுரிய தனித்துவமான பண்புகளிலிருந்து வழுவாது, சிறுவர்களது உளநிலை, அவர்களின் மகிழ்ச்சி, விருத்தி போன்றவற்றைக் கருத்திற் கொண்டு கதைக்கரு மற்றும் ஆற்றுகையின் கால அளவினையும் குறைத்து சிறுவர்களுக்கென்று சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ள இவ்வரங்கச் செயற்பாடானது, சிறுவர்களுக்குப் பயனுடையதாகவும் அவர்களது ஆளுமை வளர்ச்சிக்குத் தூண்டுகோலாகவும் காணப்படுவதுடன், சிறுவர் கூத்தரங்க வளர்ச்சிக்கு மேலும் வலுச்சேர்ப்பதுமாக அமைந்துள்ளது.

### பங்குபற்றும் கூத்துக் கலைஞர்கள்

| | |
|---|---|
| கட்டியக்காரன் : | சு. தேனுஷன் |
| 1ஆம் பாடினி : | இ. திவ்வியா |
| 2ஆம் பாடினி : | த. தனுஸ்கா |
| 3ஆம் பாடினி : | க. றீத்திக்கா |
| வேதவல்லி(தாய்): | தே. ரவிச்சந்திரன் |
| மதிவதனன்(மகன்): | தே. நிறோசன் |
| சுந்தரி(சிறுமி) : | த. தர்மிக்கா |
| மகேந்திரபூபதி(மன்னன்): | சி. விதுசன் |
| மந்திரி : | க. கரன் |
| விஜயன் : | க. முகுந்தன் |
| கிழவி : | யோ. விதுசிக்கா |
| அரக்கன் : | யோ. விபுதராஜ் |
| பறையறைவோன்: | த. கிரிசாந்த் |
| அண்ணாவியார் : | வே. தம்பிமுத்து |
| ஏடுபார்ப்பவர் : | தி. துலக்சனா |
| தாளம் : | சு. சந்திரகுமார் |
| பிற்பாட்டு : | யோ. விபுதராஜ்<br>சி. விதுசன்<br>த. தர்மிகா<br>தே. ரவிச்சந்திரன்<br>க. றீத்திகா |

### மழைப்பழக் கூத்தின் கதைச் சுருக்கம்

மகத நாட்டினுடைய மன்னன் மகேந்திர பூபதியுடன் அரக்கன் பகை கொண்டுள்ள காரணத்தினால், மழைப்பழத்தினைக் கவர்ந்து வைத்திருந்ததால், நாட்டிலே மழை இன்றி வரட்சி நிலவியது. ஆகவே அரக்கனின் இருப்பிடம் சென்று மழைப்பழம் மீட்டு வருபவர்களுக்கு பாதி இராட்சியமும், தங்கமும் கொடுத்து முடி சூட்டுவதாக அரசர் மக்களுக்கு அறிவித்திருந்தார்.

மழைப்பழத்தை மீட்டுவரச் செல்வோரை அரக்கன் கல்லாக்குகின்றான். சுந்தரி எனும் சிறுமியின் அண்ணன் மதிவதனன் மழைப்பழம் மீட்கச் சென்று அவனும் கல்லாகிவிட்டான். இதனால் சிறுமி சுந்தரி பாடினிகளின் உதவியுடன் அரக்கனின் இருப்பிடம் சென்று, அவன் போடும் புதிர்களுக்கு விடையளித்து, அனைவரையும் காப்பாற்றி மழைப்பழத்துடன் திரும்பி வந்தாள்.

பின்னர் சிறுமி சுந்தரி மழைப்பழம் நட்டு மழை பெய்ததும் அவளுக்கு ராட்சியம், தங்கம் கொடுத்து அரசர் முடி சூட்டுகின்றார்.

இக்கூத்தின் கதாநாயகியான சுந்தரி பாத்திரம் பெண்களின் உரிமைகளையும், அவர்களின் பேச்சுச் சுதந்திரத்தினையும், வீரத்தினையும், துணிவையும், ஆணாதிக்கத்திற்கெதிராக சமநீதி பேசும் பாத்திரமாகவும் உருவாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான விடயங்களைக் உள்ளடக்கி உருவாக்கப்பட்டுள்ள கூத்தே மழைப்பழம் சிறுவர் கூத்தாகும்.

### அண்ணாவியார் பற்றிய அறிமுகம்

சித்தாண்டியில் வசிக்கும் மாண்புமிகு கூத்தாளுமையான வேல்முருகு தம்பிமுத்து அண்ணாவியார் 1947-ல் பிறந்தவர். 15 வயதிலிருந்து தனது தந்தை பழக்கிய கூத்துக்களைப் பார்த்தல், மத்தளம் அடித்தல், தாளக்கட்டுக்களைப் பழகுதல், கூத்தர்களுடன் சேர்ந்து ஆடுதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தார். கூத்தில் இருந்த ஆர்வம் காரணமாக தனது தந்தை பழக்கிய “மணிமாலன் சண்டை” எனும் கூத்தில் முதன்முறையாக பாத்திரமேற்று ஆடினார். இதிலே பெண் பாத்திரமேற்று ஆடியிருந்தார்.

பிற்காலத்தில் தனியாக வடமோடி, தென்மோடிக் கூத்துக்களைப் பழக்கத் தொடங்கினார். இவர் முதன்முறையாகப் பழக்கி அரங்கேற்றிய கூத்து “பவளக்கொடி நாடகம்” ஆகும். அத்துடன் “14 ஆம் போர்”, “18 ஆம் போர்”, “திரௌபதை வில் வளைவு”, “சுபத்திரை கல்யாணம்”, “கலிங்கப்போர்”, “அருச்சுனன் தவநிலை” ஆகிய வடமோடிக் கூத்துக்களைப் பழக்கி அரங்கேற்றியுள்ளார்.

இவர் பல தென்மோடிக் கூத்துக்களை தனது தந்தையுடன். சேர்ந்து பழக்கி அரங்கேற்றியுள்ளார். இதிலே கண்டியரசன் எனும் தென்மோடிக் கூத்தானது தம்பிமுத்து அண்ணாவியாரால் 2012 ஆம் ஆண்டிலே கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் சிறப்புக் கற்கை மாணவர்களுக்கு பயிற்றுவிக்கப்பட்டது. இவ்வாற்றுகைச் செயற்பாட்டில் 3 ஆம் வருட நாடகமும் அரங்கியலும் சிறப்புக் கற்கை மாணவர்களும், விரிவுரையாளரும் பங்குபற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தம்பிமுத்து அண்ணாவியார் கூத்தில் மட்டுமல்லாது மத்தளம், தவில் ஏற்றுதல், மத்தளம் இணக்குதல் போன்ற விடயங்களிலும் ஆளுமை மிக்கவராகக் காணப்படுகின்றார். விவசாயம் செய்தலை பிரதான தொழிலாகக் கொண்ட இவர் சேனைப் பயிர்ச் செய்கையிலும் இயற்கையான முறைப்படி சுயமாக ஈடுபட்டு வருபவர். ஓடாவி வேலை செய்வதிலும் அனுபவம் உள்ளவர். அத்துடன் தோணி செய்வதிலும் ஈடுபாடுடையவர்.

15ற்கும் அதிகளவான கூத்துக்களைப் பழக்கி அரங்கேற்றியுள்ளார். சித்தாண்டியில் மட்டுமல்லாது, மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் உள்ள கூத்தார்வலர் இவரை அழைத்தும் கூத்துக்களைப் பழகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக பல்துறை சார்ந்த ஆளுமை கொண்டவராக தம்பிமுத்து அண்ணாவியார் திகழ்கின்றார்.

**தி.துலக்சனா**
நுண்கலைத்துறை. சிறப்புக் கற்கை, கிழக்குப் பல்கலைக்கழகம்.

# இலங்கையின் போர் இரகசியங்களை 20 நாடுகள் பகிர்ந்துள்ளன

## இராணுவப் பேச்சாளர் பெருமிதம்



போர் இரகசியங்களை 20 நாடுகள் இலங்கையிடமிருந்து பெற்றுக்கொண்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

உலகத்தை ஆச்சரியத்தில் ஆழ்த்திய பயங்கரவாதிகளை இலங்கை படையினர் தோற்கடித்துள்ளனர்.

போர் தந்திரோபயங்கள் மற்றும் போர் இரகசியங்கள் தொடர்பில் அறிந்து கொள்ள இருபதுக்கும் மேற்பட்ட நாடுகளின் இராணுவத்தினர் இலங்கைக்கு விஜயம் செய்த வண்ணம் இருக்கின்றார்கள்.

பயங்கரவாத ஒழிப்புத் தொடர்பிலான பாடங்களை கற்றுக் கொள்ள பல நாடுகள் விரும்புகின்றன.

சர்வதேச போர்ச் சட்டங்களுக்கு உட்பட்ட வகையில் போர்த் தந்திரோபாயங்களை படையினர் பயன்படுத்தியிருந்தனர்.


பிரிட்டனின் போர் உபாயங்களையே படையினர் பயன்படுத்தி வந்தனர். 2000 ஆம் ஆண்டுக்குப் பின்னர் புதிய போர்த் தந்திரோபாயங்கள் பயன்படுத்தப்பட்டன.

இருபது நாடுகளைச் சேர்ந்த படை அதிகாரிகள் இலங்கை இராணுவ முகாம்களில் பயிற்சி பெற்றுக்கொள்கின்றனர். எதிரிகளிடம் சிக்கிக்கொண்ட படையினரை மீட்டல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

மாதுருஓயா முகாம், கொத்தலாவல பாதுகாப்பு கல்லூரி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இவ்வாறு பயிற்சி அளிக்கபபடுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தேர்தலில் போட்டியிட்டால் 3 இலட்சம் வாக்குகள் கிடைக்கும்

## மேல்மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் நம்பிக்கை



தேர்தலில் போட்டியிட்டால் தாம் 300,000 வாக்குகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என மேல் மாகாண சிரேஸ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அனுர சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் உபுல் ஜயசூரியவிற்கு பாதுகாப்பு வழங்கப்படாமை தொடர்பிலான வழக்கு விசாரணைகளின் போது கோட்டே நீதிமன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நூறாண்டுகள் வாழ்ந்தாலும் நான் பொலிஸ் திணைக்களத்திற்காகவே சேவையாற்றுவேன். பொதுமக்கள் எமது சேவையை பாராட்டி வருகின்றனர்.

விசாரணைகளில் தம்மை ஈடுபடுத்த வேண்டாம் என, சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் உபுல் ஜயசூரிய நீதிமன்றில் விடுத்துள்ள கோரிக்கை பெரும் அதிர்ச்சியையும் கவலையையும் அளிக்கின்றது.

விசாரணைகள் எவ்வாறு நடாத்தப்பட வேண்டுமென எவரும் எனக்கு அறிவுரை வழங்கவில்லை எனவும், விசாரணைகளிலிருந்து விலகிக்கொள்ள தானாகவே தீர்மானித்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மக்களின் பணத்தை சூறையாடுவோருக்கு பரலோகத்திலும் தண்டனை கிடைக்கும்

## அஸ்கிரிய மகாநாயக்க தேரர் ஆரூடம்

பொதுமக்கள் பணத்தை சூறையாடுவோருக்கு பரலோகத்திலும் தண்டனை கிடைக்கும் என கண்டி அஸ்கிரிய மகாநாயக்கர் உடுகம புத்தரக்கித தேரர் தெரிவித்துள்ளார்.


கண்டியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அபிவிருத்திப் பணிகளின் போது பணம் மோசடி செய்யப்படுவதாக குற்றம் சுமத்தப்படுகின்றது.

அபிவிருத்திக்காக பயன்படுத்தப்படும் பணம் ஜனாதிபதியினதோ அல்லது வேறு எவரினதோ சொத்துக்கள் அல்ல.

மக்கள் பணத்தை சூறையாடுவோருக்கு இந்த உலகத்தில் மட்டுமன்றி பரலோகத்திலும் தண்டனை கிடைக்கும்.

நாம் சில இடங்களில் வெளியிடும் கருத்துக்கள் மிகவும் அழுத்தமாக ஊடகங்களில் பிரசுரிக்கப்படுகின்றன.

சில சந்தர்ப்பங்களில் எங்களது கருத்துக்கள் திரிபுபடுத்தப்பட்டு வெளியிடப்படுவதும் உண்டு. அது பற்றி கவலைப்படப் போவதில்லை



இலங்கை - சீனாவுக்கு இடையிலான இரு நாட்டு வர்த்தக பொருளாதார அபிவிருத்தி கலந்துரையாடலொன்று 21 ஆவது ஆசிய பிராந்திய அரங்கினை முன்னிட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை மியன்மாரில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், சீனாவின் வெளிவிவகார அமைச்சர் வாங் ஜி ஆகியோர் கலந்துகொண்டனர்.

# தீர்க்க முடியாத பிரச்சினையை உருவாக்குவதே சர்வதேச விசாரணைக்குழுவின் நோக்கம்

## அமைச்சர் சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு

இலங்கையில் தீர்க்கவே முடியாத இனப்பிரச்சினையொன்றினை உருவாக்கவே சர்வதேச விசாரணைக் குழுவினர் முயற்சிக்கின்றனர்.

இலங்கையில் ஆட்சி மாற்றத்தினை ஏற்படுத்துவதே இவர்களின் குறிக்கோள் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

சர்வதேசத்திற்கு ஏற்ற வகையிலான விலை போகக்கூடிய அரசாங்க மொன்றினை உருவாக்கி இலங்கையில் தொடர்சசியான குழப்பங்களை ஏற்படுத்தவே முயற்சிக்கின்றனர். அமெரிக்கா பிரித்தானியா ஆகிய மேற்கத்திய பேரினவாத நாடுகள் இன்று மத்திய கிழக்கிலும் ஏனைய நாடுகளிலும் தமது ஆதிக்கத்தினை செலுத்துகின்றன. ஆயினும் அந்த நாடுகளில் இன்று வரையில் பிரச்சினைக்கான தீர்வு எட்டப்படவில்லை.

குறிப்பாகச் சொல்வதாயின் இவர்களின் தேவை பிரச்சினைகளை தீர்ப்பதல்ல. பிரச்சினைகளை வளர்த்து தமது ஆயுத வியாபாரங்களையும் ஆதிக்கத்தினையும செலுத்துவதேயாகும் இதனை மேற்கொள்ளும் நோக்கிலேயே இன்று முயற்சித்து வருகின்றனர். இலங்கைமீது அக்கறையுள்ளவர்களாக இவர்கள் கதைப்பது வெறும் நாடகமே. பிரிவினைவாதிகளுக்கு ஏற்ற வகையில் இந்த நாட்டில் ஆட்சிமாற்றமொன்றினை ஏற்படுத்தி தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவே இவர்கள் முயற்சிக்கின்றனர். இதற்கு உதவும் வகையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக்கட்சி ஆகிய கடசிகளும் புலம்பெயர் அமைபுகளும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

யுத்த குற்றங்கள் தொடர்பில் சர்வதேசம் இன்று வரையில் ஒரு பக்க விசாரணையினையே மேற்கொண்டு வருகின்றது. தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர் என தெரிவிப்பவர்கள் சிங்கள மக்கள் கொல்லப்பட்டமை தொடரபில் ஏன் பேசவில்லை? இழப்புக்கள் தமிழர்களுக்கு மட்டுமா நிகழ்ந்தன. எமது நாட்டை சீரழித்து பயங்கர வாதத்தினை உருவாக்கிய தமிழ்த் தீவிரவாதிகளுக்கு ஆதரவு குரல் எழுப்புவோர் இந்த நாட்டைக் காப்பாற்றி நாட்டில் அமைதியை உருவாக்க உயிர்த்தியாகம் செய்த இராணுவத்தினர் மீது பழி சுமத்துகின்றனர். இன்று நாட்டில் தமிழ மக்கள் எவ்வித அடக்குமுறைகளுமின்றி சுதந்திரமாக சிங்கள மககளுடன் இணைந்து வாழ்கினறனர என்றார்.

# பரீட்சை விமர்சனங்களை தடுக்க நீதிமன்ற உதவி நாடப்படும்

## கல்வி அமைச்சு அறிவிப்பு

பரீட்சை நடைபெறும் காலத்தில் அந்தப் பரீட்சைகள் தொடர்பில் விமர்சனம் செய்யப்படுவதனை தடுக்க நீதிமன்றின் உதவி நாடப்பட உள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.


பரீட்சை நடைபெறும் காலத்தில் இவ்வாறு விமர்சனம் செய்யப்படுவதனால் மாணவர்களின் மனநிலை பாதிக்கப்படுகின்றது. உச்ச நீதிமன்றின் உத்தரவு ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் முயற்சியில் கல்வி அமைச்சு ஈடுபட்டுள்ளது.

பாடசாலை பரீட்சைளை சீர்குலைக்கும் நோக்கில் வேண்டுமென்றே செயற்படும் நபர்களுக்கு எதிராக பரீட்சைகள் சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கக்கூடிய சாத்தியங்கள் குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு, அமைச்சர் பந்துல குணவர்தன, பரீட்சைகள் ஆணையாளர் ஜே.புஸ்பகுமாரவிடம் கோரியுள்ளார்.

பரீட்சைகள் நடைபெறும் காலத்தில் பரீட்சைகள் தொடர்பில் தேவையற்ற விமர்சனங்களை வெளியிடுவது பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் உளவியலை மோசமாகப் பாதிக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

# பௌத்தமதத்தை பாதுகாக்க அர்ப்பணிப்புடன் செயலாற்றுவேன்

## ஜனாதிபதி உறுதி



(கொழும்பு)

பௌத்த மதத்தைப் பாதுகாப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படப் போவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கண்டி அசல பெரஹரா நிறைவு நிகழ்வுகளில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் பௌத்த மதத்திற்கு எதிராக செயற்படுவதாக போலிப் பிரசாரம் செய்யப்படுகின்றது. இதில் எவ்வித உண்மையும் கிடையாது.

சட்டமென்பது பற்றி தெரியாமல் அது குறித்து பேசி பிழையான கருதுகோள்களை உருவாக்கக் கூடாது.

வலுவான ஓர் செயற்றிட்டத்தின் மூலம் பௌத்த மதத்தை உலகிற்கு எடுத்துச் செல்வதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

மத நல்லிணக்கத்தைப் போன்றே மத மேம்பாட்டுக்காகவும் அரசாங்கம் பாரியளவில் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

தலதாமாளிகையை பாதுகாத்துக்கொள்ள முடியாத யுகமொன்று நாட்டில் இருந்தது. பௌத்த மதத்திற்கு மட்டுமன்றி கோவில், பள்ளிவாசல், தேவாலயங்களுக்கும் இன்று பாதுகாப்பு கிடைத்துள்ளன என்றார்.

# அநுராதபுரம் வான்பரப்பில் பாரிய சத்தத்துடன் வெளிச்சம்



அநுராதபுரத்தின் வான் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் பாரிய சத்தத்துடன் வெளிச்சம் ஒன்று தென்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இது எதனுடைய வெளிச்சம் என்பது இதுவரை கண்டறியப்படவில்லை.

இந்தநிலையில் குறித்த வெளிச்சம் தொடர்பில் பலரும் தம்க்கு அறிவித்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

தம்புள்ளை முதல் சேருவில வரையில் உள்ள மக்கள் இது தொடர்பில் அறிவித்துள்ளதாக நிலையம் குறிப்பிட்டுள்ளது.

# பழைய பூங்கா வளாகத்தில் மைதானம் அமைக்க ஆராய்வு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பழைய பூங்கா வளாகத்தில் கூடைப்பந்தாட்டம் மற்றும் கரப்பந்தாட்ட மைதானங் கள்ள நிர்மாணிப்பது தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண ஆளுநர் சந்திரசிறி ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

பழைய பூங்கா வளாகத்திற்கு நேற்றுமுன்தினம் விஜயம் மேற் கொண்ட அமைச்சர் மற்றும் ஆளுநர் ஆகியோர் குறித்த விட யம் தொடர்பில் ஆராய்ந்தனர்.

யாழ்.மாவட்ட கூடைப்பந் தாட்ட மற்றும் கரப்பந்தாட்ட சங் கங்கள் தமக்கு பொதுவான விளையாட்டு மைதானமொன்றை அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்திருந்தனர். இதனடிப்படை யில் பழைய பூங்காவில் ஏற்க னவே நிர்மாணிக்கப்பட்டுள்ள சிறுவர் பகுதிக்கு பின்புறமாக வுள்ள வெற்றுக் காணியில் குறித்த இரு விளையாட்டுக்க ளுக்கான மைதானங்களை அமைப்பது தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

அந்தவகையில், இனம்கா ணப்பட்ட பகுதியை யாழ்.மாந கரசபையின் ஊடாக துப்புரவு செய்வதற்கு நடவடிக்கையினை முன்னெடுத்த அமைச்சர் அங் குள்ள மரங்களை வெட்டாது துப்புரவுப் பணிகள் முன்னெடுக் கப்பட வேண்டுமெனவும் துறை சார்ந்தோருக்கு பணிப்புரை விடுத்தார்.

இதன்போது யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அரு மைநாயகம், மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம், மாவட்ட சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் சிவதாஸ் ஆகி யோருடன் மாவட்ட கரப்பந்தாட்ட மற்றும் கூடைப்பந்தாட்ட விளை யாட்டுக் கழகங்களினது பிரதிநிதி களும் கலந்து கொண்டனர்.(48)



**கோண்டாவில் மக்கள் நலன்பேணும் அமைப் பினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மாதாந்த நிதியுதவி வழங்கும் நிகழ்வும், அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பும் வெற்றியாளர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும் கோண்டாவிலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற போது... (48)**

## இடிந்த சுற்றுவட்ட பாதைக்கு தீர்வு எட்டப்படுமா?

(மானிப்பாய்)

மானிப்பாய் சந்தியில் காணப்படும் பிரதான சுற்றுவட்டப்பாதை இடிந்த நிலையில் காணப்படுவதால் வீதியில் பயணிக்கும் வாகனங்கள், மற்றும் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதுமட்டுமன்றி இந்தச் சுற்றுவட்ட பாதை பாரிய கனரக வாக னங்கள் வீதியில் திரும்பி செல்வதற்கு ஏற்ற வகையில் அமை யாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சுற்றுவட்ட பாதை பற்றி சம்பந்தப்பட்டவர்கள் நடவ டிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர். (66)

## முத்திரைக்கு மண்ணெண்ணை எப்போது கிடைக்கும்?

வடவரணிப் பிரதேசத்தில் மின்சாரவசதிகளற்ற ஓலைக் குடி சைகளில் வாழும் குடும்பங்களுக்கு சுமார் 2 வருடங்களுக்கு முன் வழங்கப்பட்ட மண்ணெண்ணை முத்திரைக்கு இதுவரை மண் ணெண்ணை வழங்கப்படாது தொடர்ந்து இழுத்தடிப்பு நடவ டிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

ஆனால் கூட்டுறவுச் சங்க கிளையில் தேவையான மண்ணெண்ணை பணத்திற்கு வழங்கப்படுகிறது. இதுபற்றி சங்கக் கிளைகளில் தொடர்பு கொண்டு கேட்டால் தமக்கு முத்திரைக்கு மண்ணெண்ணை வழங்க அனுமதி தரப்படவில்லை எனக் கூறப்படுவதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர். எனவே உரியவர்கள் இனியாவது இந்த மண்ணெண்ணையை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென பாதிக் கப்பட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (150)

ஜனரஞ்சகத் தன்மையை முதன்மைப் படுத்தி பக்கம் சாராமல் துணிச்சலுடன் தரமான அம்சங்களை அள்ளிவரும் வாரமலர்.

வாரமலர்
தினமுரசு

நாளைய தினமுரசு வாரமலரில்...

14.08.2014




- வடக்கு மாகாண சபை ஆடத்தெரியாதவர்களின் மேடை
- கேள்விக்குறியாகும் பெண்களின் வாழ்வு!
- எபோலா எமன் எப்படி வருவான்?
- கிழக்கு மாகாண சபை பாரபட்சமாகத் தமிழர்களை நடத்துகிறதா?



இவரும் போகிறார்...

உங்கள் முகவர்களிடம் கேட்டு வாங்கிப் படியுங்கள்!

சூடு - சுவை - சுவாரசியம் - அதுதான் தினமுரசு

# ஜேர்மனியின் சாதனை மன்னன் ஓய்வு

ஜேர்மனி அணியின் சாதனை வீரர் மிரோஸ்லவ் குளோஸ் சர்வதேச கால்பந்து போட்டிகளிலிருந்து ஓய்வை அறிவித்துள்ளார்.

ஜேர்மனி கால்பந்து அணியின் முன்கள வீரர் மிரோஸ்லவ் க்ளோஸ் (வயது- 36) கடந்த 2001இல் முதன்முதலில் சர்வதேச போட்டிகளில் விளையாட ஆரம்பித்தார். ஜேர்மனிக்காக 137 போட்டிகளில் பங்கேற்றுள்ள அவர் 71 கோல்கள் அடித்துள்ளார். இதன்மூலம் அதிக கோல் அடித்த ஜேர்மனி வீரர்கள் பட்டியலில், முன்னிலை வகிக்கிறார்.

சமீபத்தில் நிறைவடைந்த சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் உலக கிண்ணக் கால்பந்துத் தொடரில், பிரேசிலுக்கு எதிரான அரையிறுதியில் கோல் அடித்த இவர், உலக கிண்ண கால்பந்து வரலாற்றில் அதிக கோல்கள் (16 கோல்) அடித்த வீரர்கள் பட்டியலில், பிரேசில் ஜாம்பவான் ரொனால்டோவை (15 கோல்) முந்தி முதலிடம் பிடித்தார். தவிர இவர், ஜேர்மனியின் உவே சீலர், பிரேசிலின் பீலே ஆகியோருக்கு பின், நான்கு உலக கோப்பை தொடர்களில் கோல் (2002-14, 5,5,4,2+16) அடித்த வீரர் என்ற பெருமை பெற்றார். இவர் கோல் அடித்த போட்டிகளில், ஜேர்மனி அணி தோல்வி அடைந்ததில்லை.

நேற்று முன்தினம் மிரோஸ்லவ் க்ளோஸ், சர்வதேச போட்டிகளிலிருந்து முறைப்படி ஓய்வை அறிவித்தார்.

இதுகுறித்து க்ளோஸ் கூறுகையில், சமீபத்தில் பிரேசிலில் நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடரில் ஜேர்மனி அணி சம்பியன் பட்டம் வென்றது மகிழ்ச்சி. இதன்மூலம் ஜேர்மனிக்கு உலக கோப்பை வென்று கொடுக்க வேண்டும் என்ற நீண்ட நாள் கனவு நிறைவேறியது. தேசிய அணிக்காக விளையாடியதை என்றும் மறக்க முடியாது. சர்வதேச அரங்கில் சில தனிப்பட்ட சாதனைகள் படைத்ததும் மகிழ்ச்சி. ஆனால், கால்பந்தில் முன்கள வீரரின் பொறுப்பு கோல் அடிப்பது மட்டுமே. எனவே, சாதனைகள் பற்றி அதிகம் சிந்திப்பதில்லை. அணியின் வெற்றிக்கு எப்போதும் முன்னுரிமை அளிப்பேன் என்றார்.

க்ளோஸ் ஓய்வு குறித்து ஜேர்மனி பயிற்சியாளர் ஜோ.கிம் லூ கூறுகையில், ஜேர்மனி அணிக்காக தன்னால் முடிந்த பங்களிப்பை அளித்து விட்டார். அவரது முடிவை மதிக்கிறேன். தேசிய அணியில் அவர் ஏராளமாக சாதித்துள்ளார் என்றார்.

ஜேர்மனி கால்பந்து கூட்டமைப்பின் தலைவர் உல்.்.ப்கேங் நீர்ஸ்பேச் கூறுகையில் க்ளோஸ் அசாதாரண வீரர் மட்டுமல்ல, அசாதாரண மனிதரும் கூட. தேசிய அணியில் 71 கோல்கள், உலக கோப்பையில் 16 கோல்கள் என்ற இரண்டு அசாத்திய சாதனைகளின் மூலம் வரலாற்றுப் புத்தகத்தில் தனது பெயரை அழுத்திப் பதிவு செய்துள்ளார் என்றார்.





## ஜாம்பவானின் அடிதடி ஜாலம்
## பத்திரிகையாளர் கன்னத்தில் பளார்

உலக புகழ் பெற்ற கால்பந்து வீரர் டிகோ மரடோனா ஆர்ஜன்ரீனாபத்திரிகையாளர் ஒருவரை கன்னத்தில் அறைந்து மற்றொரு விவகாரத்தில் சிக்கி கொண்டார்.


மரடோனா அவரது குழந்தை டிகோ பெர்ணான்டோ மற்றும் காதலியுடன் தலைநகர் பியோனஸ் ஏர்ஸில் உள்ள திரையரங்கு ஒன்றுக்கு சென்றிருந்தார். அப்போது பத்திரிகையாளர்கள் அவரை சூழ்ந்து கொண்டனர்.

அப்போது நிருபர்களிடம் கூறிய அவர் இது எனது குழந்தைக்கு ஒரு பரிசு. முதன் முதலாக எனது மகனுடன் முழு நாட்களையும் கழிக்கிறேன். அப்போது ஒரு நிருபர் கைச் சைகை மூலம் ஏதோ கேட்டார். குழந்தையின் தாயார் குறித்து கேட்டதாக கூறப்படுகிறது. உடனடியாக மரடோனா என்ன இது முட்டாள் தனம்! ஏன் எனது மனைவி குழப்பம் அடைய வேண்டும். நான் ஏன் என் மனைவியை குழப்பம் அடைய செய்யவேண்டும். நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். எனக்கு 53 வயது ஆகிறது என்று கூறிக்கொண்டு காரை விட்டு வெளியே வந்து பத்திரிகையாளர் ஒருவரை பின் தொடர்ந்து அவரது கன்னத்தில் பளார் என அறைந்தார்.

கடந்த ஒரு மாத்திற்கு முன் 25 வயது பிரபல இளம் பெண் பத்திரிகையாளர் எமி அமோடோ அவரது காதலியாக உள்ளார் என கூறபப்ட்டது. இது போல் முன்னாள் காதலி ஒலிவியா, (வயது-24) டுபாயில் அவரது மாளிகையில் இருந்த பொருட்களை திருடிவிட்டதாக மரடோனா புகாரின் பேரில் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# முகமூடியுடன் களமிறங்கும் புரொட்

## நவீன ஹெல்மெட்




மூக்கில் காயமடைந்த ஸ்ரூவெட் புரொட், இந்திய அணிக்கெதிரான இறுதி டெஸ்டில் முகமூடி அணிந்து களமிறங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதி ஆட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஓவலில் நடைபெறவுள்ளது. மான்செஸ்டரில் நடைபெற்ற நான்காவது டெஸ்டில் இந்திய அணி, இங்கிலாந்திடம் தோல்வியடைந்தது. இதில், வருண் ஆரோன் அசுர வேகத்தில் (141.8 கி.மீ.,) வீசிய பந்து, இங்கிலாந்து வீரர் புரொட், “ஹெல்மெட்” (தலைக் கவசம்) உள்ளே சென்று, மூக்கை உடைக்க, இரத்தம் கொட்டியது. பின் “ரிட்டையர்ட் ஹர்ட்” முறையில் வெளியேறிய இவருக்கு, சிகிச்சை அளிக்கப்பட்டது. மூக்கில் கட்டுடன் இவர், “டுவிட்டரில் வெளியிட்ட செய்தியில்,வைத்தியர்கள் தையல் போட்டு சரி செய்தனர். ஓவல் டெஸ்டில் “மாஸ்க்” அணிந்து பங்கேற்பேன் எனக் குறிப்பிட்டார்.

இது, இங்கிலாந்து அணிக்கு அதிக தெம்பை அளித்துள்ளது. எதிர்வரும் 15ஆம் திகதி ஓவலில் நடைபெறவுள்ள ஐந்தாவது டெஸ்டிலும் புரொட், அண்டர்சன் கூட்டணி “வேகத்தில்” மிரட்ட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இங்கிலாந்து பயிற்சியாளர் பீற்றர் மூர்ஸ் கூறுகையில், ஐந்தாவது டெஸ்டில் புரொட் பங்கேற்பதில் எவ்வித ரிஸ்க்கும் இல்லை. செல்சியா கால்பந்து அணியின் ரமிரஸ் போல முகமூடி அணிந்து விளையாடுவார், என்றார்.

“ஹெல்மெட்” காரணமா: புரொட்டை பொறுத்தவரை புதிதாக வடிவமைக்கப்பட்ட ஹெல்மெட் அணிந்தும் பலன் இல்லாமல் போனது. இதன் முன் பகுதி சாய்வாகவும், பந்து எளிதில் புகாதபடியும் அமைக்கப்பட்டிருந்தது. வழக்கமான ஹெல்மெட் அணிந்து விளையாடிய சாமர்சட் அணியின் கிரெக் கீஸ்வெட்டர், தென் ஆப்ரிக்க விக்கெட் கீப்பர் மார்க் பவுச்சர் போன்றோர் கண்ணில் காயம் அடைந்தனர்.

இதில், காயம் காரணமாக, கிரிக்கெட்டில் இருந்தே பௌச்சர் விலக நேர்ந்தது. எனவே, வீரர்களுக்கு காயம் ஏற்படாத வகையில் புது ஹெல்மெட்டை ஐ.சி.சி., விரைவில் கண்டறிய வேண்டும்.

## காயமின்றி தப்பிய கவாஸ்கர்

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் சுனில் கவாஸ்கர் கார் விபத்தில் காயமின்றித் தப்பினார். இந்திய – இங்கிலாந்து அணிகள் இடையே இங்கிலாந்தில் தற்போது நடைபெற்று வரும் டெஸ்ட் தொடரில் அவர் தொலைக்காட்சி வர்ணனையாளராக பணிபுரிந்து வருகிறார். இந்த நிலையில் மான் செஸ்டரில் நடைபெற்ற கார் விபத்தில் கவாஸ்கர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார். 4ஆவது டெஸ்ட் முடிந்த பின்னர் கவாஸ்கர் மான்செஸ்டரில் காரில் சென்றார். பின்பக்க இருக்கையில் அவர் அமர்ந்து இருந்தார். கவாஸ்கர் அருகே அவரது லண்டன் நண்பர் சந்திரேஷ் பட்டேலும், சாரதி அருகே முன் பக்கத்தில் மற்றொரு வர்ணனையாளர் மார்க் நிகோலசும் இருந்தனர். திடீரென கவாஸ்கர் சென்ற கார் விபத்துக்குள்ளானது. எதிரே வந்த கார் மீது மோதுவதை கவாஸ்கரின் கார் சாரதி தவிர்க்க முயன்றார். அப்போது எதிர்பாராத விதமாக மற்றொரு கார் மீது மோதியது. கடுமையான மழையால் இந்த விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் அதிர்ஷ்டவசமாக கவாஸ்கர் உயிர் தப்பினார்.

# ஓய்வு முடிவில் மாற்றம்



அடுத்த ஒலிம்பிக் போட்டிக்கு முன், இளம் வீரர்களுக்கு வழிவிட்டு, ஓய்வு பெறுவதில் உறுதியாக உள்ளார் உசைன் போல்ட்.

உலகின் மின்னல் மனிதன் வேக வீரர் ஜமேக்காவின் உசைன் போல்ட். 100,200 மற்றும் 4X100 மீ., ஓட்டத்தில் கடந்த 2008(பீஜிங்), 2012 (லண்டன்) ஒலிம்பிக் போட்டிகளில் தங்கம் வென்றவர்.

தவிர, உலக தடகள சம்பியன் ஷிப்பில், 2009, 2013இல் இந்தப் போட்டிகளில் தங்கம் வென்றுள்ளார். 20ஆவது கொமன்வெல்த்தில் 4X100 மீ.,தொடர் ஓட்டத்தில் தங்கம் வென்றார். இது தான் இவரது முதல் கொமன்வெல்த் பதக்கம்.

எதிர்வரும் 2017 உடன் சர்வதேச போட்டிகளில் இருந்து விடைபெறத் திட்டமிட்டு இருந்த இவர். தனது முடிவை மாற்றியுள்ளார்.

இதுகுறித்து உசைன் போல்ட் கூறியதாவது, தடகள சம்பியன் மைக்கல் ஜோன்சனை சந்தித்த போது, சாதிக்க வேறு எதுவும் இல்லாததால் ஓய்வு பெற்றதாகத் தெரிவித்தார். இப்போது நானும் அனைத்தையும் சாதித்து விட்டேன். இது மகிழ்ச்சி தான்.

ஆனால், இனிச் சாதிக்க ஒன்றுமில்லை எனும் போது, ஓய்வு பெறுவது தான் சிறந்தது. இளம் நட்சத்திரங்கள் வரும் போது, தடகளத்தை விட்டு விலகிவிட வேண்டியதுதான். ஏனெனில், தோல்வியை எனக்கு பிடிக்காது. இதனால், அடுத்த பெரிய போட்டிதான் (ரியோ டி ஜெனிரோ ஒலிம்பிக், 2016) எனது கடைசி பங்கேற்பு. இதன் பின் ஓய்வு பெற்று விடுவேன் என்றார்.

# இரண்டாவது டெஸ்ட்
# தரங்க நீக்கம்

(கொழும்பு)

பாகிஸ்தான் அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கான இலங்கை அணியில் திமுத் கருணாரத்ன மற்றும் பினுர பெர்னாண்டோ ஆகியோர் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என இலங்கை கிரிக்கெட் சபை விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டம் நாளை கொழும்பு எஸ்.எஸ்.சி. விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது. இப்போட்டிக்கான இலங்கை அணியில் சிறு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இதில் தரங்க நீக்கப்பட்டு அவருக்குப் பதிலாக கருணாரட்ன சேர்க்கப்பட்டுள்ளார்.இதேவேளை, 19 வயதுடைய பினுர பெர்ணாண்டோ அணியில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கை அணியின் 3 முக்கிய வேகப்பந்து வீச்சாளர்கள் உபாதையடைந்துள்ளதால் இவருக்கு அணியில் வாய்ப்புகள் உருவாகியுள்ளன. பினுர பெர்னாண்டோ இதுவரை முதற்தரப் போட்டிகளிலும் விளையாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.


# சோங்கா, அக்னீஸ்கா சம்பியன்

(மான்ட்ரீர்)

ரோஜர்ஸ் கோப்பை ரென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டியில் பிரான்சின் ஜோ வில்பிரைட் சோங்கா, சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரரை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வென்றார். மகளிர் ஒற்றையர் பிரிவில் அக்னீஸ்கா ரத்வன்ஸ்கா பட்டம் வென்றார்.

ரோஜர்ஸ் கோப்பை ரென்னிஸ் தொடர் கனடாவின் மான்ட்ரீல் நகரில் நடைபெற்றது. இதில், ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டிக்கு 13ஆம் நிலை வீரரான பிரான்சின் ஜோ வில்பிரைட் சோங்காவும், சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரரும் தகுதி பெற்றனர். இப்போட்டியில் பெடரர் வெற்றி பெற்று தனது 80ஆவது ஏடிபி பட்டத்தை வெல்வார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், சோங்கா தனது அதிரடி ஆட்டம், புயல் வேக சேர்வீசால் பெடரரை திக்குமுக்காட செய்தார். 11 ஏஸ்களை வீசி 7-5, 7-6 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்றார். இதன் மூலம், 2008ஆம் ஆண்டுக்குப் பின் முதல் முறையாக ஏ.டி.பி. அந்தஸ்து பெற்ற தொடரில் ஒற்றையர் பிரிவில் சம்பியன் பட்டம் வென்று சாதித்தார் சோங்கா. இவருக்கு பரிசுத் தொகையாக 3.60 கோடி வழங்கப்பட்டது.

மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் உலகின் 5ஆம் நிலை வீராங்கனையான போலந்தின் அக்னீஸ்கா ரத்வன்ஸ்கா, 26ஆம் நிலை வீராங்கனையான அமெரிக்கான வீனஸ் வில்லியம்ஸை எதிர்த்து விளையாடினார். இதில், ரத்வன்ஸ்கா 6-4, 6-2 என்ற நேர் செட்களில் மிக எளிதாக வீனஸ் வில்லியம்சை வீழ்த்தி சம்பியன் கோப்பையை வென்றார். பரிசுத் தொகையாக இவருக்கு 2.7 கோடி வழங்கப்பட்டது.





## தரப்படுத்தலில் சங்கா முதலிடம்

ஐ.சி.சி.யின் டெஸ்ட் தரவரிசையில் தென்னாபிரிக்க வீரர் ஏ.பி.டிவிலியர்ஸை பின்னுக்குத் தள்ளிவிட்டு குமார் சங்கக்கார முதலிடத்தைப் பிடித்துள்ளார். காலியில் பாகிஸ்தானுக்கு எதிராக இடம்பெற்ற டெஸ்ட் போட்டியில் சங்கக்கார 211 ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றிக்கு முக்கிய பங்களிப்பை வழங்கியிருந்தார். இது 2014ஆம் ஆண்டில் அவரது 4ஆவது சதமாகும். இதுவரை இந்த ஆண்டில் அவர் 1350 ஓட்டங்களை பெற்று 84.37 என்ற சராசரி எடுத்துள்ளார். பங்களாதேஷுக்கு எதிராக ஒரு முச்சதம் மற்றும் ஒரு சதம் எடுத்ததோடு லோட்ஸில் இங்கிலாந்துக்கு எதிராக அபாரமான முறையில் 147 ஓட்டங்களைப் பெற்றார்.

2013ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதல் டிவிலியர்ஸ் டெஸ்ட் தரவரிசையில் முதலிடம் வகித்து வந்தார். இப்போது 2ஆவது இடத்திற்குச் சென்றுள்ளார். ஹஷிம் அம்லா 3ஆம் இடத்திலும், அவுஸ்ரேலியாவின் டேவிட் வோர்னர் 4ஆம் இடத்திலும் உள்ளனர். அஞ்சலோ மெத்தியூஸ் 5ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

டெஸ்ட் தர வரிசையில் முதல் 10 இடங்களை பிடித்துள்ள துடுப்பாட்ட வீரர்கள் வருமாறு: சங்கக்காரா, டிவிலியர்ஸ், அம்லா, டேவிட் வோர்னர், அஞ்சலோ மெத்தியூஸ், சந்தர்போல், மைக்கல் கிளார்க், மிஸ்பா உல் ஹக், ரொஸ் டெய்லர், யூனுஸ் கான்.

## ஜிம்னாஸ்டிக் விளையாட்டை விஸ்தரிக்க உடனடி வேலைத்திட்டம்

### விளையாட்டுத்துறை அமைச்சர் பணிப்பு

(கொழும்பு)

இலங்கையில் ஜிம்னாஸ்டிக் விளையாட்டை பாடசாலை மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை விஸ்தரிக்க உடனடியாக வேலைத்திட்டத்தை ஆரம்பிக்குமாறு விளையாட்டு அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தேசிய ஜிம்னாஸ்டிக் சங்கத்துக்கு உத்தரவிட்டுள்ளார்.

ஜிம்னாஸ்டிக் விளையாட்டு ஆலோசகரான ஜப்பானைச் சேர்ந்த டக்கனோரி டக்ஷாஷி நெறிப்படுத்திய ஜிம்னாஸ்டிக் உயர் சான்றிதழ் பாடநெறியைப் பின்பற்றிய 50 பேருக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் ஜிம்னாஸ்டிக் சங்கத் தலைவர் நளின் பெர்னாண்டோ உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றும்போது அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், சர்வதேச பதக்கங்களை வெற்றிகொள்ளக்கூடிய விளையாட்டுக்களில் ஆசியாவை வெற்றிகொள்ளக்கூடிய முக்கிய விளையாட்டாக ஜிம்னாஸ்டிக் விளையாட்டை அடையாளம் கண்டுள்ளோம்.

ஆனாலும் இந்த விளையாட்டு கிராம, பாடசாலை மட்டங்களில் வளர்ச்சி காணவில்லை. யுத்தம் முடிந்தும் கூட வடகிழக்கு மாகாணங்களில் இந்த விளையாட்டு அபிவிருத்தி காணவில்லை. இலங்கையில் பத்தாயிரம் ஜிம்னாஸ்டிக் விளையாட்டு வீரர்களை உருவாக்கும் வேலைத்திட்டத்தை உடன் ஆரம்பிக்க வேண்டும்.

# ஞானரூபன் தாக்குதல் ஆட்டம் கிண்ணம் வென்றது யாழ். பல்கலை





(யாழ்ப்பாணம்)

அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான கால்பந்தாட்டத் தொடர் வெற்றிக் கிண்ணத்தை யாழ். பல்கலைக்கழக அணி கைப்பற்றிக் கொண்டது.

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் முதன் முறையாக நடாத்தப்பட்ட அனைத்துப் பல்கலைக்கழக அணிகளுக்கிடையிலான பெரும் கால்பந்தாட்டத் தொடர் கடந்த வெள்ளிக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை யாழ். பல்கலைக் கழகம் மற்றும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானங்களில் நடைபெற்றன. முதல் சுற்று ஆட்டங்கள் விலகல் முறையில் நடைபெற்றன. இதன் அடிப்படையில் யாழ். பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம், ஊவாப் பல்கலைக்கழக தென்கிழக்குப் பல்கலைக்கழகம் ஆகிய அணிகள் அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறின.

இந்நிலையில் அரையிறுதிப் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்றன. முதலாவது அரையிறுதிப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணியும் கிழக்குப் பல்கலைக்கழக அணியும் மோதின.

ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய யாழ். பல்கலைக்கழக அணி அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டு முன்னிலை பெற்றது. இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் கிழக்குப் பல்கலைக்கழக அணி முயற்சித்தபோதிலும் இறுதி வரை அதன் முயற்சிகள் கைகூடவில்லை. நிறைவில் யாழ். பல்கலைக்கழக அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் ஊவாப் பல்கலைக்கழக அணியும் தென் கிழக்குப் பல்கலைக்கழக அணியும் மோதின. இதில் அபாரமாக ஆடிய தென் கிழக்கு பல்கலைக்கழக அணி வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இறுதிப் போட்டி அன்றைய தினம் மாலை நடைபெற்றது. இதில் யாழ். பல்கலைக்கழக அணியும் தென்கிழக்குப் பல்கலைக்கழக அணியும் மோதின.

ஆட்டத்தின் ஆரம்பம் முதல் யாழ். பல்கலைக்கழக அணியின் ஆதிக்கம் நிலைபெற, ஞானரூபன் முதலாவது கோலை அடித்து அணியை முன்னிலைப்படுத்தினார். தொடர்ந்து முதற்பாதியாட்டத்தின் இறுதி நிமிடங்களிலும் ஞானரூபன் மேலும் ஒரு கோல் போட்டார். முதல் பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, யாழ். பல்கலைக்கழகம் 2-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.

பிற்பாதி ஆட்டத்தில் தென் கிழக்குப் பல்கலைக்கழகம் கோல் போடும் முனைப்புடன் செயற்பட்ட அதேவேளை, அதனை முறியடிக்கும் வகையில் யாழ். பல்கலைக்கழக அணியின் வியூகம் அமைந்திருந்தது. இதனால் தென் கிழக்குப் பல்கலைக்கழக அணியின் கோல் அடிக்கும் முயற்சிகள் யாவும் முறியடிக்கப்பட்டன. இறுதியில் யாழ். பல்கலைக்கழக அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்போட்டியின் ஆட்டநாயகன் மற்றும் தொடர் நாயகன் விருதை யாழ். பல்கலைக்கழக வீரர் ஞானரூபன் பெற்றுக் கொண்டார்.

இதேவேளை, பாடுமீன் விளையாட்டுக்கழகத்தின் பொன் விழா கிண்ணத்தை யாழ். பல்கலைக்கழக அணி அண்மையில் கைப்பற்றிக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (48)

## போராடி வென்றது ஆவரங்கால் இந்து

விளையாட்டுச் செய்திகள்

(ஆவரங்கால்)

புத்தூர் கலைமதி அணிக்கெதிரான போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி போராடி வெற்றி பெற்றது.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழகம் நடாத்தி வரும் மாபெரும் கரப்பந்தாட்டத் தொடர் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

ஏ, பி என இரு பிரிவுகளாக நடாத்தப்பட்டு வரும் இப்போட்டித் தொடரின் ஏ பிரிவுக்கான ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும் புத்தூர் கலைமதி அணியும் முட்டி மோதிக் கொண்டன.

முதல் இரு செட்களையும் புத்தூர் கலைமதி அணி 25-20, 25-22 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி முன்னிலை பெற்றது. இதன் பின்னர் எழுச்சி பெற்ற ஆவரங்கால் இந்து இளைஞர் அணி தமது அனுபவ ஆட்டத்தின் மூலம் மூன்றாவது, நான்காவது செட்களை 25-22, 25-20 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சமப்படுத்தியது.

வெற்றியைத் தீர்மானிக்கும் இறுதி செட்டில் இரு அணிகளும் அனல் பறக்கும் வகையில் புள்ளிகளைப் பெற்ற வண்ணமிருந்தன. விறுவிறுப்பாக நடைபெற்ற இறுதி செட்டில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 15-10 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றதுடன் 3-2 என்ற செட் கணக்கில் புத்தூர் கலைமதி அணியை வீழ்த்தியது. (93)

## ஊரெழு றோயல், ஞானமுருகன் முன்னேற்றம்

(நெல்லியடி)

தும்பளை நற்கருணையுள்ள நற்பணி மன்ற ஆதரவுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் நடாத்தும் அணிக்கு ஏழு பேர் கொண்ட கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டிகளில் ஊரெழு றோயல் மற்றும் மயிலங்காடு ஞானமுருகன் அணிகள் வெற்றிபெற்றுள்ளன.

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடைபெற்று வரும் இப்போட்டித் தொடர் றெனிஸ்போ விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. முதல் போட்டியில் ஊரெழு றோயல் அணியும் யங்கமன்ஸ் அணியும் மோதின. இதில் தண்ட உதை மூலம் ஊரெழு றோயல் அணி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

மற்றுமொரு போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன் அணியும் கரவைச்சுடர் அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஞானமுருகன் அணி 6-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இப்போட்டித் தொடர் தினந்தோறும் மாலை 4.00 மணிக்கு நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (12)

## சறோன், டேனுசன் அபாரமான செயற்பாடு 9 விக்கெட்டுக்களால் சென். ஜோண்ஸ் வெற்றி

(யாழ்ப்பாணம்)

சறோன், டேனுசன் ஆகியோரின் அபாரமான செயற்பாட்டின் மூலம் சென். ஜோண்ஸ் கல்லூரி அணி ஒன்பது விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.


இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்று 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான மூன்றாவது சுற்று ஆட்டம் தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் சென். ஜோண்ஸ் மற்றும் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிகளுக்கிடையிலான ஒரு நாள் போட்டி நேற்று முன்தினம் சென். ஜோண்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி சறோனின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறியதுடன் விக்கெட்டுக்களையும் வேகமாகப் பறிகொடுத்தது. இறுதியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 42.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சௌவ்ரவ் 21 ஓட்டங்களைப் பெற்றார். ஏனைய வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டத்துடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். பந்து வீச்சில் சறோன் நான்கு, சுபிட்ஷன், அபிநாஸ் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 94 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென். ஜோண்ஸ் கல்லூரி அணி டேனுஷனின் அபாரமான துடுப்பாட்டத்தின் மூலம் இலகுவாக வெற்றிபெற்றது. இறுதியில் சென். ஜோண்ஸ் கல்லூரி அணி 24.2 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் டேனுஷன் ஆட்டமிழக்காது 35, சுபிட்சன் 28 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிருஷன் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார். (17)

# ஐ.நா.விசாரணையும், இலங்கையின் பொறிமுறையும்

– வே. அர்ச்சுணன் –



ஐக்கிய நாடுகள் சபை இலங்கைக்கு எதிரான விசாரணைப் பொறிமுறையை தீவிரமாக முன்னெடுத்துள்ள சூழ்நிலையில் இலங்கையும் மாற்றுப் பொறிமுறை ஒன்றை உள்நாட்டிலேயே உருவாக்கி உள்ளது.

இலங்கை இறுதி யுத்தத்தின் போது மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வந்ததாகவும், போர்க் குற்றங்களை இழைத்ததாகவும் மேற்கத்தைய நாடுகள் வலுவான குற்றச்சாட்டுகளை தொடர்ச்சியாக முன்வைத்து வருகின்றன. அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் தொடர்ச்சியாக இலங்கைக்கு நெருக்கடி கொடுத்து வருவதுடன் காட்டமான அறிக்கைகளையும் வெளியிட்டு வருகின்றன.

இஸ்ரேல், பாலஸ்தீனத்திலும் யுத்தம் தீவிரம் அடைந்து அங்கு தினமும் பலர் இறந்து கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் இது தொடர்பில் மௌனம் காத்து வரும் சர்வதேசம், பயங்கர வாதத்தை கூண்டோடு ஒழித்து அமைதியை நிலைநாட்டி நல்லிணக்கத்தை உருவாக்க பாடுபட்டுவரும் எம் மீது சர்வதேச நெருக்கடிகளை கொடுப்பது ஏற்புடைய செயற்பாடு அல்ல என இலங்கை விசனம் வெளியிட்டு வருகிறது.

ஆனால் பிரித்தானியா வெளியிட்ட மனித உரிமை தொடர்பான பிந்திய அறிக்கையில், நாட்டின் தென்பகுதியில் வன்முறைகள் இடம்பெற்றன. இதன் போது பெரும்பாலும் முஸ்லிம்மக்கள் பாதிக்கப்பட்டனர். பௌத்த பிக்குகளும் இணைந்திருந்த இந்த வன்முறையின் போது மூன்று உயிர்களும் காவுகொள்ளப்பட்டன. இரவு வேளைகளில் ஊரடங்கு அமுல் செய்யப்பட்டிருந்த போதிலும் வன்முறைகள் தொடர்ந்த வண்ணம் இருந்தன. இதன்போது சட்டம் முழுமையாக செயலிழந்துவிட்டதாக நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்திருந்தமையையும் சுட்டிக் காட்டியுள்ளது.

மேலும், இலங்கையில் கிறிஸ்தவ தேவாலயங்கள் மீதும் தாக்குதல் அச்சங்கள் தொடர்கின்றன. இதற்கு அரசாங்க அதிகாரிகளும் உடந்தையாக உள்ளனர். இலங்கையில் பேச்சு சுதந்திரம் மீறப்படுகிறது. மாணவர்களின் போராட்டங்கள் அடக்கப்படுகின்றன.

கடந்த மே 16ஆம் திகதியன்று போராட்டம் ஒன்றில் ஈடுபட்ட மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட போது நான்கு பேர் காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர். யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக மாணவர்களும் விரிவுரையாளர்களும் அச்சுறுத்தலுக்கு உட்படுத்தப்படுகின்றனர். ஏப்ரல் 14ஆம் திகதியன்று யாழ்ப்பாண செய்தியாளர் ஒருவர் தாக்கப்பட்டார்.

அரசாங்க அதிகாரி ஒருவரின் மனைவியின் புகைப்படத்தை பிரசுரித்தமைக்காக செய்தித்தாளின் ஆசிரியர் ஒருவர் விசாரணை செய்யப்பட்டார். யாழ்ப்பாண செய்தியாளர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்ட கருத்தரங்கு ஒன்று அதிகாரிகளின் தலையீட்டினால் இரத்துச் செய்யப்பட்டது. எதிர்க் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் விமான நிலையத்துக்குச் சென்றபோது அச்சுறுத்தப்பட்டனர்.

இவ்வாறு இலங்கையின் மனித உரிமை நிலைவரங்கள் கேள்விக் குறியாக உள்ளதாக பிரித்தானியா குற்றம் சாட்டியுள்ளது.

இதேவேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் இலங்கைக்கெதிரான விசாரணை குறித்து அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என்று பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர்களில் ஒருவரான சுப்பிரமணியம் சுவாமி கருத்து வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையத்தினால் இலங்கைக்கு எதிராக தன்னிச்சையான நடவடிக்கைகள் எதையும் எடுக்க முடியாது என்றும், இலங்கை விவகாரம் பாதுகாப்புச் சபைக்குச் சென்றால் சீனா தனது வீட்டோ அதிகாரத்தை பாவிக்கும் என்றும், இந்தியா ஒருபோதும் சர்வதேச விசாரணையை ஆதரிக்காது என்றும் மனித உரிமைகள் பேரவையினால் எந்தவொரு நடவடிக்கையும் இலங்கை மீது எடுக்கமுடியாது என்றும் இலங்கைக்கு சுப்பிரமணியம் சுவாமி ஆறுதல் கூறியுள்ளார்.

ஆனால் இலங்கை ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் விசாரணைகள் தொடர்பில் கவலை கொண்டுள்ளதுடன் உள்நாட்டிலே சர்வதேச தரத்தில் ஒரு விசாரணைப் பொறிமுறையை தற்போது உருவாக்கி உள்ளது. இந்த விசாரணைக் குழு சர்வதேச நிபுணர்கள்ள் உள்ளடக்கியுள்ளது.

சர்வதேச சட்டங்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் தொடர்பாக மாத்திரமே சர்வதேச நிபுணர் குழுவிடம் ஆலோசனைகளைப் பெறுவோம் என்றும், இலங்கை நியமித்துள்ள ஆணைக்குழுவின் சுயாதீனத் தன்மைக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்றும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்துள்ளார்.

எமது விசாரணைக்குழு சர்வதேச சட்டங்களை மதித்து அதற்கேற்ற விதத்தில் விசாரணைகளை முன்னெடுக்கும் என்றும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் பொது மக்களிடம் தகவல் கோரப்படவுள்ளதாகவும், காணாமல் போனவர்கள் தொடர்பில் நம்பகமான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்றும் பரணகம தெரிவித்துள்ளதுடன் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் மற்றும் யுத்தக் குற்ற விடயங்கள் குறித்து பல்வேறு தரப்பினரிடமிருந்தும் தகவல்களைப் பெற்றுக்கொள்ள உத்தேசித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் சிவிலியன் இழப்புக்கள் ஏற்பட்டதற்கான காரணங்கள், இவ்வாறு சிவிலியன் இழப்புக்கள் ஏற்படுத்திய தரப்பினர், சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமை சட்ட மீறல்கள், விடுதலைப் புலிகளுக்கு உதவி வழங்கிய வெளி நாடுகள், நிதியுதவி வழங்கிய தரப்புக்கள், புலிகள் பொது மக்களை மனிதக் கேடயமாகப் பயன்படுத்தியமை, சிறுவர் போராளிகளை இணைத்துக் கொண்டமை, தற்கொலைத் தாக்குதல்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்த யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் இலங்கை கரிசனையுடன் விசாரணைகளை முன்னெடுக்கும் என்று ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ள சூழ்நிலையில் இதற்குரிய முன்னெடுப்புக்களையும் இந்த ஆணைக்குழு தற்போது நகர்த்தி வருகின்றது.

ரஷ்யா, சீனா, இந்தியா போன்ற நாடுகள் இலங்கைக்கு ஆதரவான தளத்தில் இலங்கையின் உள்ளக விசாரணைப் பொறிமுறையை உன்னிப்பாக அவதானிப்பதுடன் தங்களது ஆக்கபூர்வமான பங்களிப்பினையும் இந்தக் குழுவிற்கு வழங்க முன்வந்துள்ளதால் இலங்கை அரசாங்கம் மீண்டும் ஆசுவாசப் பட்டுக்கொள்வதற்கு ஏதுவாகியிருக்கிறது.

## படம் இயக்கும் ஏஞ்சலினா!



ஹொலிவுட் நடிகை ஏஞ்சலினா ஜோலிக்கு, நடிப்பு போரடித்து விட்டது என்கிறார். அதனால் படங்களை இயக்கும் முடிவுக்கு வந்துள்ளார். ஏற்கனவே, The land of blood and honey என்ற படத்தை இயக்கியுள்ளார். பொஸ்னியா போரின் பின்னணியில் நடக்கும் காதல் கதையை மையமாக வைத்து, அந்தப் படத்தை இயக்கியிருந்தார்.

இப்போது, மீண்டும் அதேபோன்ற போர்ப் பின்னணியை மையமாக வைத்து, ஒரு படத்தை இயக்க முடிவு செய்துள்ளார். இரண்டாம் உலகப் போரின் போது நடந்த உண்மைச் சம்பவம் தான், படத்தின் மைய கரு. படத்துக்கு, Unbreakable என, பெயர் கூட தயாராகி விட்டது.

## துப்பாக்கி அனுமதி!



அமெரிக்காவில் யார் வேண்டுமானாலும் துப்பாக்கி வைத்துக் கொள்ளலாம் என்ற சட்டம், 1791இல் அமலுக்கு வந்தது. அன்று, இந்த சட்டத்துக்கு பலர் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். ஆனாலும், எதிர்ப்பை மீறி, அரசு சட்டத்தை நிறைவேற்றியது.

பணம் படைத்தவர்களின் பாதுகாப்பை எண்ணி துப்பாக்கி வைத்திருக்கும் அனுமதியை வழங்கிய அமெரிக்க அரசு, இன்று, அந்த சட்டத்தை வாபஸ் செய்வது குறித்து, ஆலோசித்து வருகிறது. காரணம், பாடசாலைகளிலும், பொது இடங்களிலும் பலர், ஏராளமானவர்களை எவ்வித காரணமின்றி சுட்டுத் தள்ளுவது தான். ஆனால், இப்போதும் "சட்டத்தை வாபஸ் பெற வேண்டாம்..." என்று, ஒரு கூட்டத்தினர் அங்கு போராட்டம் நடத்தி வருகின்றனர்.

## "ஆனால்"

- "ஆனால்" என்ற வெறுக்கத்தக்க சொல் வந்துவிட்டால் முன்னால் சொன்னதெல்லாம் வீணாகிவிடும்ளூ இல்லை என்று மறுப்பதோ, அவமானப்படுத்துவதோ மேலாகும்.

  **- பிராங்ளின்**

- ஒரு மனிதனை முதலில் புகழ்ந்து பேசிவிட்டு பின்னர் "ஆனால்" என்று கூறத் தொடங்கினால் அந்தப் புகழ்ச்சியைப் போல் இழிவானதும், வெறுக்கத்தக்கதும் வேறில்லை.

  **- பீச்சர்.**

- "ஆனால்" என்ற வார்த்தை இரக்கத்தின் துடிப்புக்களை நிறுத்திவிடும் அன்பு ததும்பும் சிந்தனைகளை அடைத்துவிடும். சகோதரப் பான்மையுடன் செய்யும் வேலைகளை அடியோடு நசுக்கிவிடும்.

  **- டானியல்**

# அஞ்சலி: அன்னையின் பிரிவு





**தோ**ழர் சின்னபாலா என மனித நேயம் கொண்ட, நல்லிதயங்களால் நேசிக்கப்பட்ட பாலநடராஜனின் அம்மா காமாட்சிப்பிள்ளை சில நாட்களுக்கு முன்னர் உயிர் நீத்தார்.

அவரது இறுதிச் சடங்குகள் ஊரெழுவில் உள்ள அன்னாரது வீட்டில் 10.08.2014 இல் நடைபெற்றது.

அரசியல் சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

தோழர் .பாலா யாழ்ப்பாணத்தின் அழுத்தமான பழமைப் பிடிப்புக் கொண்ட சம்பிரதாயங்கள் ஆசாட பூதித்தனங்கள் தீண்டாமைக் கொடுமைகளுக்கெதிராகப் போராடியவர்.

யாழ் சமூகத்தின் ஆதிக்க மமதைக்கெதிராகவும் தமிழ் சமூகத்தின் மீதான தேசிய ஒடுக்குமுறைக்கெதிராகவும் ஒரேகாலத்தில் செயற்பட்டவர்.

அவரது வீடு ஒருவகையில் சமூகச் செயற்பாட்டு மையமானது. மிகவும் நெருக்கடியான காலத்தில் வடக்கு கிழக்கின் அத்தனை திசைகளில் - வெளிநாடுகளில் இருந்து வரும் சமூகப் பிரக்ஞை அக்கறை கொண்டவர்களை அரவணைத்தது.

அந்த வீட்டின் அன்னை காமாட்சிப்பிள்ளைதான் காலமானார்.

தோழர் பாலாவிற்கு 5 சகோதரிகளும் ஒரு சகோதரரும். மனைவியார் மூன்று பெண்பிள்ளைகள். தந்தையார் நீண்ட காலத்திற்கு முன்னர் காலமாகிவிட்டார்.

கடந்த 3 தசாப்தங்களில் ஆரவாரமில்லாமல் இயல்பாக தன்னை அர்ப்பணித்த இந்த குடும்பம் பிரதியுபகாரமாக எதனையும் பெற்றதில்லை.

இன்று யாரோ எல்லாம் ஆலவட்டங்கள், தாரைதப்பட்டைகள், பரிவாரங்களுடன் திரிகிறார்கள்.

ஆனால் அந்த வீடும் மனங்களும் அதே எளிமையுடன் பிரக்ஞையுடன்.

அந்த வீடு வடக்கின் சமகால முற்போக்கு ஜனநாயக இயக்க வரலாற்றின் ஒரு குறியீடு.

தோழர் சின்னபாலா என்ற ஆளுமையின் உருவாக்கத்தில் அவரது அன்னையின் பணி மகத்தானது.

இத்கைய மனிதர்கள் எமது சமூகத்தில் அருந்தலாக வாழ்ந்து மறைந்திருக்கிறார்கள்.

இவர்களின் நினைவுகள் என்றென்றைக்குமாக சமூகத்தில் பாதுகாக்கப்பட வேண்டும். இல்லையேல் வரலாறு திரிந்து விடும்.

பொதுவாழ்விற்கான நடைமுறைகளை தனிப்பட்ட வாழ்விலும் கொண்டிருந்தவர்கள்.

ஒரு சமூகத்தின் தார்மீக வலுக்கள் இத்தகைய மனிதர்களால்தான் நிலை நிறுத்தப்படுகின்றன. செழுமையுறுகின்றன.

சமூகத்தில் தீண்டாமை, பெண் அடிமைத்தனம், வறுமை, பிரதேச வாத குறுகிய எல்லைகள் இவற்றுக்கெதிராக அவர் தன்னியல்பாக வாழந்தார்.

ஊருக்கு உபதேசம் செய்யவில்லை.

உண்மையான கவிஞராகவும் எழுத்தாளராகவும் அவர் இருந்தார். நடிப்புத் தேசியவாதி அல்ல.

எத்தனையோ அன்னையர் சகோதர சகோதரிகளின் வரலாறு எழுதப்படாமல் இருக்கிறது.

தனது 30 ஆண்டுகால சமூக வாழ்வை துன்பமும், அவலமும், சவாலும் அச்சுறுத்தலுமாக கழித்தவர். அவரது மரணம் குரூரமானது.

அவரது வாழ்நாள் அர்ப்பணிப்பில் எந்த சராசரி சௌகரியமும் அவருக்கிருந்ததில்லை.

அவரது குடும்பமும் அவ்வாறு தான்.

சமூகத்தை சூறையாடியவர்கள் பலர் கனவான்களாக உலாவரும் காலமிது.

உண்மையான நட்பும் தோழமையும் இந்த எளிமையான இல்லங்களில் தான் உறைந்து கிடக்கின்றன.

அன்னை காமாட்சி அம்மாளுக்கு எம் இதய அஞ்சலிகள்!!

**சுகு-ஸ்ரீதரன்**

# அற்புத உலகில் ஆலிஸ்

**ஆங்கில மூலம் : லூயிஸ் கரோல்**
**தமிழில் : சுகுமாரன்**

8

**தோ**ட்டத்தின் வாசலில் நிறைய ரோஜா செடிகள் இருந்தன. செடியில் வெள்ளை ரோஜாக்களே இருந்தன. மூன்று தோட்டக்காரர்கள் அவசரம் அவசரமாக வெள்ளை ரோஜாக்களுக்கு சிவப்பு வர்ணம் பூசிக் கொண்டிருந்தனர். அவர்கள் சீட்டுக் கட்டில் உள்ள "ஸ்பேட்" வடிவமுள்ள உடையை அணிந்திருந்தனர். இந்தக் காட்சி ஆலிஸை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

அவர்கள் ஒருவருக்கொருவர் குற்றம்சாட்டிக் கொண்டு வேலை பார்த்தனர். சிறிது நேரம் கழித்துதான் அவர்கள் ஆலிஸைப் பார்த்தனர். மூவரும் அவளை வணங்கினர்.

"ஆமாம், எதற்காக பூக்களின் மீது சிவப்பு வரணம் பூசுறீங்க?" என்று ஆலிஸ் கேட்டாள்.

ஆலிஸின் கேள்விக்கு அவர்கள் மெதுவாகப் பதில் கூறினார்கள்.

"மிஸ், இங்கே இருக்க வேண்டியது சிவப்பு ரோஜாக்கள்தான். நாங்கள் தவறுதலாக வெள்ளை ரோஜாக்களை நட்டு விட்டோம். ராணிக்குத் தெரியாமல் இருக்க சிவப்பு சாயம் பூசிக்கொண்டு இருக்கிறோம். இந்தப் பக்கம் ராணி வரப் போகிறார்கள். அவர்கள் வருவதற்கு முன் இந்த வேலையை முடிக்க வேண்டும்.

அவர்கள் மீது பரிதாபம் கொண்ட ஆலிஸ் தூரிகையை எடுத்து பூக்களின் மீது வர்ணம் பூசி உதவி செய்தாள்.

தோட்டக்காரர்களின் ஒருவன் எச்சரிக்கையாக வெளியே பார்த்துக் கொண்டிருந்தான். திடீரென்று ஆரவாரம் கேட்கத் தொடங்கியது. "ராணி வருகிறார்" என்று அவன் அலறினான்.

மூன்று பேரும் சட்டென்று தரையில் கவிழ்ந்து படுத்தனர். காலடியோசை கேட்டது. ராணியைப் பார்க்க ஆலிஸக்கு ஆவலாக இருந்தது.

முதலில் வீரர்கள் இரண்டு பேராக அணிவகுத்து வந்தனர். அவர்கள் கைகளில் கேடயமும் ஈட்டியும் வைத்திருந்தனர். அவர்களின் உடை சீட்டுக் கட்டில் உள்ள "டயமண்ட்" வடிவத்தில் இருந்தது.

அணி வகுப்பின் பின்னால் அந்த வெள்ளை முயல் வந்தது. அது பரபரப்பாகக் காணப்பட்டது. அது ஆலிஸைப் பார்த்தும் அடையாளம் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை. படையின் தளபதி கையில் ராஜாவின் கிரீடம் இருந்தது. கடைசியில் ராஜாவும் ராணியும் வந்தனர்.


அணிவகுப்பு ஊர்வலம் ஆலிஸின் அருகில் வந்ததும் நின்றது.

ராணி ஆலிஸைப் பார்த்ததும் "யார் நீ?" "உன் பெயர் என்ன?" என்று கேள்விகளைக் கேட்டாள்.

ஆலிஸ் மிகப் பணிவுடன் வணங்கிப் பதிலளித்தாள்: "மகாராணி, என்னுடைய பெயர் ஆலிஸ்".

கீழே கிடந்தவர்களைப் பார்த்த ராணி "இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

அவர்கள் அப்படியே படுத்துக் கிடந்தார்கள், பயத்தினால். ராணி ரோஜாக்களைப் பார்த்தார். அவற்றில் பூசப்பட்ட வர்ணம் வடிந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்த அவருக்குக் கோபம் வந்தது.



தோட்டக்காரர்களைப் பார்த்து கோபமான குரலில் "எழுந்திருங்கள்" என்று கட்டளையிட்டாள்.

மூவரும் துள்ளிக்குதித்து எழுந்தனர். "உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்துவதற்காகத்தான் வெள்ளை ரோஜாக்களில் சிவப்பு வர்ணம் பூசினோம்" என்றனர்.

ராணி தளபதிக்குக் கட்டளையிட்டார். "இவர்களுடைய தலையை வெட்டுங்கள்".

வீரர்கள் சிலர் வந்து தோட்டக்காரர்களின் தலைகளை வெட்ட இழுத்துச் சென்றனர்.

"என்ன அராஜகம் இது" என்று ஆலிஸ் கூறியது ராணியின் காதில் விழுந்தது. உடனே ராணி அலறினாள் "இவளுடைய தலையை வெட்டுங்கள்".

"முட்டாள்தனம்" என்று ஆலிஸ் கூவினாள். ராணி பதட்டமடைந்தாள். ராஜா ராணியின் கையைப் பிடித்து அமைதிப்படுத்தினார். "பொறுமை காட்டு" இவள் சிறுமியல்லவா! என்றார்.

"நல்லது" என்று கூறி அமைதியடைந்த ராணி ஆலிஸிடம் "உனக்கு 'க்ரோக்கோ' விளையாடத் தெரியுமா" என்று கேட்டாள்.

"தெரியும்" என்று பதிலளித்தாள் ஆலிஸ்.

"அப்படியானால் என்னுடன் விளையாட வா" என்று ராணி அழைப்பு விடுத்தாள்.

ஆலிஸ் ஊர்வலத்துடன் சேர்ந்து நடந்தாள்.

"இன்றைய நாள் இனிய நாள்" என்று பழக்கமான குரல் கேட்டது. பேசியது வெள்ளை முயல் தான். ஓரக்கண்ணால் முயலைப் பார்த்த ஆலிஸ் "உண்மைதான். சீமாட்டி எங்கே?" என்று கேட்டாள்.

முயல் ரகசியமான குரலில் பதில் சொன்னது: "சீமாட்டிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு விட்டது".

"அடப்பாவமே! எதற்காக" என்று ஆலிஸ் கேட்டாள்.

"ராணியின் காதைப்பிடித்து சீமாட்டி திருகி விட்டாள்". வெள்ளை முயல் கூறியதைக் கேட்டு ஆலிஸ் சத்தமாகச் சிரித்தாள்.

"உஷ்... ராணியின் காதுக்குக் கேட்டுவிடப் போகிறது" என்று வெள்ளை முயல் வாயை பொத்திக் காட்டியது.

ஊர்வலம் விளையாடும் இடத்திற்கு வந்துவிட்டது. முதலில் விளையாடத் தொடங்கியது ராணிதான். இப்படி ஒரு விநோதமான விளையாட்டை ஆலிஸ் பார்த்தது கிடையாது. ப்ளமிங்கோ பறவையை அடிக்கும் மட்டையாக ராணி பிடித்திருந்தாள். முள்ளம்பன்றி போன்ற ஹெட்ஜ்கோதான் பந்துபோல் உருண்டு கிடந்தது. ராணி அடிக்கும்போது குறி தவறியது. ராஜா காலால் முள்ளம்பன்றி பந்தைத் தட்டிவிட்டார். அது உருண்டு ஓடியது. வீரர்கள் வளைவுகளைப்போல் முழங்கால்களை மடக்கி நின்றிருந்தனர். அதற்குள் புகுந்து புகுந்து பந்து ஓடியது. ராணி அடித்துவிட்டதாக எல்லோரும் கைதட்டினர். ஆலிஸும் கைதட்டினாள்.

இப்போது ஆலிஸ் விளையாடும் முறை வந்தது. அவளால் ப்ளமிங்கோ பறவையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ப்ளமிங்கோவின் காலைப் பிடித்துக்கொண்டு ஹெட்ஜ்கோ பந்தைத் தட்டுவதற்கு உயர்த்தும்போது அந்தப் பறவை தலையைத் தொங்கப் போட்டது. இல்லையென்றால், கழுத்தை உயர்த்தி உயர்த்தி ஆலிஸக்குச் சிரிப்பை வரவழைத்தது. ஒருவகையாக ப்ளமிங்கோவின் கழுத்தைத் திருப்பி பந்தைத் தட்ட முயல்வதற்குள் கழுத்து வேறிடத்திற்கு போய்விட்டது. இதையெல்லாம் சரிசெய்து பந்தை அடித்தால் வீரர்கள் தங்கள் விருப்பம்போல் இடம் மாறி நின்றார்கள்.

"க்ரோக்கோ" விளையாட்டு ஆலிஸ்க்கு அலுப்பாக இருந்தது.

(தொடரும்...)

# நாடு அபிவிருத்தியை எட்டுவதற்கு ஊடகத்துறையும் முக்கியமானதாகும்



## வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்ல விடயங்களை நல்ல முறையில் மக்களுக்கு வழங்குகின்ற போது ஊடகத்துறை மூலம் நாட்டினை அபிவிருத்தி செய்ய முடியும். இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தினை கட்டியெழுப்புகின்ற போது இனங்களை அபிவிருத்தி பாதை நோக்கிக் கொண்டு செல்ல முடியும். இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தினையும் புரிந்துணர்வினையும் ஏற்படுத்துகின்ற பணியினை ஊடக வியலாளர்கள் ஆற்ற வேண்டும் என வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பிரதேச அபிவிருத்தியில் ஊடகவியலாளர்களின் பங்களிப்பு என்னும் ஊடகவியலாளர்களுக்கான கருத்தரங்கு நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தர்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தினை ஏற்படுத்த வேண்டும். இதனூடாகவே நிலையான அபிவிருத்தியினை பெற்றுக் கொள்ள முடியும். யுத்தம் முடிவுக்கு வந்த பிற்பாடு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச எனக்கு வழங்கிய ஆலோச னையினை மனத்தில் வைத்து மக்களுக்காக செயலாற்றிக் கொண்டிருக்கின்றேன். எம்முடைய அபிவிருத்தி செயற்பாட்டிற்கு ஊடகத்துறையினர் துணையாக இருந்துள்ளார்கள். கடந்த 5 வருடங்களில் அரசாங்கம் திணைக்களங்களின் ஊடாக பாரிய அபிவிருத்தி வேலைத் திட்டங்களை மேற்கொண்டுள்ளது. இதனூடாக வடமாகாணம அபிவிருத்தி அடைந்து வருகின்றது. இதற்கு ஊடகவியலாளர்கள் மிகுந்த ஒத்துழைப்பினை வழங்கியுள்ளார்கள். அனைத்து மக்களதும் அபிவிருத்திக்கு ஊட கவியலாளர்கள் ஒத்துழைப்பை வழங்குவதன் ஊடாக மக்களுக்கு முன்மாதிரியாக அபிவிருத்தி செயற்பாடுகள் மேற் கொள்ளப்படுகின்றன. யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட தன் பிற்பாடு வடமாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அபிவிருத்தித்திட்டங்கள் அனைத்துக்கும் ஊடகங்கள் ஆதரவு வழங்கியுள்ளன. அவற்றினூடாக அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்ந்து மேற் கொள்ளப்பட்டு வருகின்றன என்றார். (63)

## முரசின் இன்றைய பலன்

(13.08.2014 புதன்கிழமை)



ஐய வருஷம் ஆடி மாதம் 28 ஆம் திகதி.
திருதியை / மரணயோகம்.
பூரட்டாதி நட்சத்திரம் மு.இ. 07.46 வரை. பின் உத்தரட்டாதி.
இராகு காலம 12.05 - 01.35 வரை. சுபநேரம 04.35 - 06.05 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | வெளிநாட்டில் எல்லைகள் கடக்க முற்பட்டவேளை தெய்வாதீனமாக பிழபடாமல் தப்புதல், பயனற்ற பூர்வீக நிலத்தை விற்றுவிட்டு புதிய மனைகட்டுவதற்கு ஆயத்தமாதல். |
| ரிஷபம் | காலாவதியான பொருளை அவசரத்தில் பெற்றுவந்த வேளை மனையில் பூசல் ஏற்பட்ல், விஷமிகளால் வர்த்தக நிலையம் சேதமாக்கும் கனவு கண்டதால் அச்சம் தக்க வைத்தல். |
| மிதுனம் | போட்ட முதல் கைக்குவந்தாலே போதுமென்ற ஆதங்கத்தில் மன உளைச்சல் ஏற்படல், இடமாற்றம் வந்தாலும் தடுமாற்றமின்றி இன்முகத்துடன் ஏற்றுக்கெர்ளல், |
| கடகம் | விலாசத்திற்குரிய நபரை விசாரிக்கச் சென்றவேளை உரியவர்தலை மறைவாகிய செய்தி அறிதல், கடன்பட்டு கட்டமுழயாத நெஞ்சத்தில் துயர்மேவி பதகளிப்படைதல். |
| சிம்மம் | துணிவே துணை என்பதை தாரக மந்திரமாக கொண்டு நிம்மதிப்பெருமூச்சுவிடும் சுபதினம் இன்றாகும். |
| கன்னி | யதார்த்தவாதி வெகுஜனவிரோதி ஆவது போல் உண்மையை விளம்பியதால் பகைமை ஏற்படல், அதிக கட்டணம் வசூலிக்க முயன்றதால் ரகளை ஏற்பட்டு பின் சுமுக நிலையடைதல். |
| துலாம் | பங்குத்தொழிலில் இலாபம் கிட்டுவதினால் தனித்தியங்க முற்படாதிருத்தல், சுபகாரியமொன்றை இன்று எதிர் கொள்வதினால் நிகழ்வினை நடாத்த சேமிப்பினின்றும் பணம் பெறுதல். |
| விருச்சிகம் | திட்டமிடாது தான் தோன்றித்தனமான முறையில் பணியில் புகுந்ததால் காரிய சித்தி ஏற்படாமை, காவலரின் எச்சரிக்கையை மீறிச்சென்றவேளை பிழபட்டு தண்டனைக்குள்ளதால். |
| தனுசு | பரீட்சை முழவு சாதகமாக இருந்ததினால் உயர்பதவி தேழவரும் வாய்ப்புக்கிட்டுதல், பழைய பொருட்களை விற்பனை செய்வதற்கு விளம்பரம் செய்ய விரும்புதல். |
| மகரம் | வெளியூர் பிரயாணம் செய்ய முயன்றவேளை அமங்கல நிகழ்வினால் தடைப்படல், உங்களின் முன்னேற்றம் எண்ணி சக ஊழியர்களில் சிலர் அதிர்ச்சிக்குள்ளாதல். |
| கும்பம் | அரசுப்பணியில் மேலதிகாரியின் நடவழக்கையினால் பாதிக்கப்பட்டு பதவியுயர்வு கிடைக்காமை, மழலைக்கு நாமகரணம் சூட்டலில் தம்பதியர்களுக்குள் முரண்பாடு ஏற்படல். |
| மீனம் | வாகனத்தில் ஒழச்சென்று ஏறமுற்பட்டவேளை விபத்து ஏற்படல், உணவுக்கட்டுப்பாட்ழனால் நீரிழிவு நோய்குணமாவதை எண்ணி மகிழ்வடைதல். |

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று....

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்தும் ஆன்மீக சிந்தனையும் சமயச் சொற்பொழிவும் கலைநிகழ்வுகளும் தினமும் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று வருகின்றன.

இதில் 13 ஆம் நாளான இன்று 'அண்ணனும் தம்பியும்' என்னும் விடயம் பற்றி விகடகவி திரு.மு.திருநாவுக்கரசு சொற்பொழிவாற்றவுள்ளார்.

தொடர்ந்து சங்கானை மாவடி ஸ்ரீ ஞானவைரவர், மல்லாகம் பழம்பதி அறநெறி, நீர்வேலி ஸ்ரீ கணேசா, அனலைதீவு மனோன் மணி அம்மன், காரைநகர் சிவகாமி அம்மன் ஆகிய அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

♦♦♦


நல்லூர் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடாத்தும் தெய்வீக இசையரங்கு நிகழ்வு தினமும் மாலை 6.45 முதல் 8.15 மணிவரை நடைபெற்று வருகிறது.

இதில் 13 ஆம் நாளான இன்று எஸ்.சிவமைந்தன், திருமதி விக்னேஸ்வரி நரேந்திரா ஆகியோரின் பாட்டு இசையரங்கம் பக்கவாத்திய சகிதம் இடம் பெறவுள்ளது. (42)

## களவாக தறிக்கப்படும் பனைமரங்கள்

வரணி கும்பிட்டான் புர ஆலய வீதி முன்பு குருக்கள் வாழ்ந்த பகுதி ஆள்களற்ற காணிகளில் மாலை நேரம் இலக்கத்தகடு இல்லாத வாகனத்தில் வரும் திருட்டுக் கோஷ்டி பனை மரங்களை உடனடியாகத் தறிந்துக் துண்டுகளாக வாகனத்தில் ஏற்றிச் செல்வதாக மக்கள் தெரிவிக்கின்றனர். இப்பகுதியில் தற்போது குடிமனைகள் ஏதும் இல்லாது ஆள்களற்ற பிரதேசமாவதால் திருட்டுக்கோஷ்டிக்கு நல்ல வாய்ப்பாக உள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (150)

# நல்லைக் கந்தனுக்கு இன்று 13 ஆம் நாள் திருவிழா



## வரமருளும் திருக்கை வேல்!

பன்னிருகை எங்கே
பார் பிளந்தவேலெங்கே
மன்னிய மயிலெங்கே
திருக்கையில் சேவலெங்கே
செந்தூரப் பொட்டெங்கே
ஆறுமுகமெங்கே முப்புரி நூலெங்கே
பாவம் போக்கும் குழந்தை வடிவெங்கே
பாதமலர் போதெங்கே
வேலவா மூவினை ஓடுமங்கே ஆளவா!
கை வேல்கொண்டென்னை!

-மண்டைதீவு மகிழ்நன்-

## உள்ளம் தெளிவு பெறும்!

பற்றின் மயக்கத்தாற் பக்தரெலாம் நல்லூரில்
சுற்றிச் சுழன்று தொழுகின்றார் - மற்றவர்கள்
பார்த்துப்பரவசத்தாற் பாடுகிறார் ஆடுகிறார்
ஆர்க்கும் ஒலிகளுக்குள் ஆழ்ந்து

விக்கிரகம் நல்லூரில் வீதி வலம்வரவே
அக்கிரமம் போகும் அமைதிவரும் - பக்குவத்தை
ஆறுமுகன் வாயில் அமர்ந்து தியானிக்கத்
தேறுமே உள்ளந் தெளிந்து.

-நல்லூர்கந்தன் பாமாலை-

## நல்லூரின் மன்னா நீ!

அந்தாதி அலங்காரம் அநுபூதியே
அடியார்கள் வலம்வந்து தினமோதியே
கந்தாவுன் புகழ்பாடிக் கரங்கூப்புவார்
கண்ணார நீர்சிந்திச் சிரம் தாழ்த்தியே
வந்தாலுன் அருட்பார்வை தனைநாடியே
வடிவேலன் குடிகொண்ட தலந்தேடியே
நந்தாத அருள்வேண்டி வந்தாரையா
நல்லூரின் மன்னாநீ அருள்வாய் ஐயா!

-கவிஞர் - நயினை இராகுலன்-

## அம்மையும் அப்பனும் நீயே!

எம்மை எளிதாக்க எழுந்தருள்கின்றாய் முருகா
எம்மால் அது முடியவில்லையே ஏன் முருகா?
இம்மையில் எளிமையைக் காணமுடியவில்லை
இந்தமண் அதனால் தோற்கின்றதே இது தகுமோ?
அம்மையும் அப்பனும் நீயாக இருக்கின்றாய்
ஆதலால் நமக்கென்ற பயமொன்றும் இங்கில்லையே
செம்மையாக வாழத் தெரியாமல் நிற்கின்றோம்
சேமிக்க வரம்தந்து சோபிக்க அருள்தா முருகா.

-கே.எஸ்.சிவஞானராஜா கொக்குவில்-

## வேலன்கை வரம் அருளட்டும்!

பத்துவிரல் ஒன்றாகிப் பாலவேலை வணங்கட்டும்
எத்திக்கும் வேலன்கை வேலொன்றே தோன்றட்டும்
அத்தன் மகனாட்சி நல்லூரில் நடக்கட்டும்
சுத்தமனம் கொண்டவர்கள் பக்திவரி கட்டட்டும்
சித்தரெலாம் அவனூரில் சிறப்புற்று வாழட்டும்
பித்தரெலாம் அவனருளால் சித்தர்கள் ஆகட்டும்
முத்தமெலாம் கந்தனவன் கழலுக்கே கிட்டட்டும்
மெத்தப் பழுத்தஞானம் அடியார்மேல் செறியட்டும்.

-ஆசுகவி கெ.சிவசுப்பிரமணியம் மூளாய்-

# யாழ்.அபிவிருத்தித் திட்டங்களுக்கு 10,682 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

## - அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவிப்பு -



(யாழ்ப்பாணம்)

2009 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் வரை யாழ்.மாவட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கு 10682 மில்லியன் ரூபா நிதி அரசாங்கத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக விவசாயம், கைத்தொழில் மீள்குடியேற்றம் மற்றும் பொருளாதார உட்கட்டமைப்புகளுக்கே இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற அரசாங்க தகவல் திணைக்களத்தின் ஏற்பாட்டிலான யாழ்.மாவட்ட அபிவிருத்தியில் பிரதேச ஊடகவியலாளர்களின் பங்களிப்பு பற்றிய ஊடகக் கருத்தரங்கில் கலந்து கொண்டு யாழ்ப்பாண அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்கான மீள் பார்வை தொடர்பான சமர்ப்பணத்தின் போதே அவர் இந்தத் தகவலை தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்ட கிராமிய மட்டத்தில் குழுக்கள் தெரிவு செய்யப்பட்டு அவை மூலமாக அபிவிருத்தித்திட்டங்கள் தெரிவு செய்யப்படுவதாகவும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் 2010 ஆம் ஆண்டில் யாழ்மாவட டத்திற்கு 7573.70 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. இதன் மூலமாக பலதிட்டங்கள் செய்து முடிக்கப்பட்டிருப்பதாகவும் மேலும் சில திட்டங் கள் நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் மனைப் பொருளாதாரத்தில் பாரிய முன்னேற்றத்தைப் பெற்றிருப்பதாகவும் அரச அதிபர் தெரிவித்தார். அத்துடன் மரக்கறி பழவகைகளின் உற்பத்தியில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் 2009-2012 இற்குப் பின்னர் 2013 இல் ஏற்பட்ட வறட்சி காரணமாக இந்த உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் சின்ன வெங்காயம் மிளகாய், வாழை, உருளைக் கிழங்கு என்பவனற்றின் உற்பத்தியில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ள அதேவேளை இந்தக் காலத்தில் ஏற்பட்ட கடும் காற்று காரணமாக வாழைச் செய்கையில் வீழ்ச்சி ஏற்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

மீள்குடியேறிய மக்களுக்கான வீட்டுத் திட்டம் குறித்து தெரிவித்த அரச அதிபர் கடந்த நான்கு வருடங்களில் 25 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகவும் இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் 9700 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் நிலையில் மேலும் 5 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாவும் மின்சாரத் தைப் பொறுத்தவரை நூற்றுக்கு 60 வீதமானவர்களே யாழ். மாவட்டத்தில் மின்சாரம் பெற்றிருந்த நிலையில் தற்சமயம் 90 வீதமானவர்களுக்கு இந்த வருட இறுதிக்குள் மின்சாரம் வழங்கப்பட்டுவிடும் என்றும தெரிவித்தார். (பா)

# முதியோர் ஓய்வு இல்லம் முல்லையில் திறந்து வைப்பு

(முல்லைத்தீவு)


முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் உள்ள தேவிபுர கிராமத்தில் முதியோர் ஓய்வு இல்லத்தை வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பிரதம அதிதியாக கலந்து திறந்து வைத்துள்ளார்.

பாடசாலை மாணவர்களின் இசை வாத்தியத்துடன் விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டு இந் நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. இப் பகுதியில் உள்ள முதியோர்கள ஓய்வு எடுக்கும் இல்லமாக இந்த இல்லம் தேவிபுர கிராமத்தில் அழைக்கப்பட்டு வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இவ் இல்லம் முதியோர்கள ஒன்றிணைந்து கூடி கலந்துபேசி ஆறுதல் அடையும் ஒரு இல்லமாகவும் பொழுது போக்கு அம்சங்களான பத்திரிகை வாசிப்பதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட் டுள்ளது.

இதற்கு பிரதம விருந்தினராக வடமாகாண சபை அமைச்சர்கள் உறுப்பினர்கள் மற்றும் வண்ணி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரகளும் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (40)

# மாணவனின் நினைவாக உதவி வழங்கல்



(யாழ்ப்பாணம்)

லண்டன் பல்கலைக்கழகத்தில் கல்வியை மேற்கொண்டிருந்த போது அமரரான பல்கலைக்கழக மாணவன் செல்வன சுப்பிரமணியம் பார்த்தீபனின் முதலாம் ஆண்டு ஞாபகார்த்தமாக வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் வசதிகள் குறைந்தவர்களுக்கு சமூக நலனோம்புத் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்ட வைபவத்தில் வயோதிபரொருவருக்கு உடுபுடவைகள் வழங்கப்பட்டன. (01)

# உழவர் சந்தையை உதாசீனப்படுத்த வேண்டாம்

(வடமராட்சி)

விவசாயிகளின் நன்மை கருதி உழவர் சந்தை என்ற பெயரில் பிரத்தியேகமான சந்தையொன்று சாவகச்சேரி நகர சபையினால் அமைத்து வழங்கப்பட்ட போதிலும் விவசாயிகள் அதனைப் பயன்படுத்தாமல் உதாசீனம் செய்துவருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சாவகச்சேரி சந்தைப் பகுதியிலேயே உழவர் சந்தையும் அமைக்கப்பட்டுள்ள போதிலும் மக்கள் உள்ளூர் மரக்கறிகளை வாங்க அங்குமிங்கும் செல்ல வேண்டியுள்ளதாகவும் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேலும் விவசாயிகள் தங்களது விவசாய உற்பத்திப் பொருட்களை உழவர் சந்தைக்குள் வைத்து விற்பனை செய்யாமல் கண்ட கண்ட இடங்களில் வைத்து விற்பனை செய்வதைக் காணக்கூடியதாகவுள்ளது.

எனவே, மக்களின் நன்மைக்காகவும் உள்ளூர் விவசாயிகளின் சிரமங்களை தீர்ப்பதற்காகவும் உருவாக்கப்பட்ட இச் சந்தையைப் பயன்படுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஆயுர் வேதம்



## மார்பகக் கட்டிக்கு என்ன மருத்துவம்

மார்பக கட்டி ஏற்படுவதற்கான காரணங்களை ஆயுர்வேதம் விரிவாக எடுத்துக் கூறுகிறது.

இரத்தத்தை கெடுக்கும் பழையது, மிகவும் சூடானது, வறண்டது, காய்ந்தது, நெஞ்செரிவு உண்டாக்கக் கூடிய எண்ணெய், புண்ணாக்கு, கொள்ளு, கடுகு, மீன், உடும்பு மாமிசம், ஆடு, செம்மறி ஆட்டு மாமிசம், தயிர், மோர், புளிப்புப் பழங்கள் மற்றும் காரம், புளி, உப்பு சுவைகளைக் கொண்ட உணவுகளை அதிகம் உட்கொள்வதாலும்,

வெண்ணெய், ஊடுருவி சூட்டைக் கிளப்பும் எரிச்சலைத் தரும் லேசான உணவுப்பொருட்கள், அஜீரணத்தைத் தோற்றுவிக்கும் எளிதில் செரிக்காத உணவுப் பண்டங்கள், ஒவ்வாமை உணவுவகைகள், பகல் தூக்கம், நெருப்பின் அருகில் அமர்தல், வெயில், சோர்வு, அடிபடுதல், ஒழுங்கற்ற படுக்கை, செயல்கள் இவற்றாலும்,

சினம், வருத்தம், அச்சம், பட்டினி கிடத்தல், உடலை அதிகம் வருத்திக் கொள்ளும் செயல்கள், அழற்சி போன்றவற்றால் கேடடைந்த சருமம், மாமிசம், கொழுப்பு, எலும்பு, தசைநார், இரத்தக் கண்டல்கள் இவற்றை ஆதாரமாகக் கொண்டு உண்டாகும் வீக்கம் ஆகியவை மார்பு கட்டிக்கு காரணமாகலாம்.

மேற்குறிப்பிட்ட காரணங்களால் பெண்களின் விரிவடைந்த மார்பக இரத்தக் குழாய்களில் புகுந்து மேற்புறம் உண்டாகும் கட்டியானது பாரமான வீக்கத்தை உண்டாக்கும்.

தோஷங்களின் தொடர்பின்றி இரத்தம் சீற்றம் பெறுவதில்லை. ஆகவே எந்த நேரத்தில் எந்த தோஷமாகிய வாத-பித்த-கபம் சீற்றமுறுமோ அந்த நேரத்தில் அத்துடன் இரத்தமும் சேர்ந்து சீற்றம் கொண்டதாக இருக்கும்.

அதனால் தோஷத்தின் சீற்றமுற்ற நிலை. அது மார்புக்கட்டியில் இரத்தத்துடன் கேடடைந்து கலந்து நிற்கும் தன்மை ஆகியவற்றை மனதிற்கொண்டு சிகிச்சை செய்யவேண்டிய அவசியம் இருக்கிறது.

வாத மார்பக கட்டியில் தீவிரமான வலி, இளங்கறுப்பு, இளஞ்சிவப்பு தோன்றுதல், பலவாறாகப் பழுத்தல், சமமற்ற உருவம், குத்துதல், வெட்டுதல் போன்ற வலி காணும். பித்த மார்பகக் கட்டியில் சிவப்பு, செப்பு, கறுப்பு ஆகிய நிறம், மாதவிடாய், மோகம், காய்ச்சல், எரிச்சல் ஆகியவைக் காணப்படும். விரைவில் பழுக்கும்.

கபத்தினால் ஏற்படும் மார்பக கட்டியில் வெந்நிறம், அரிப்பு, கிளர்ச்சி, குளிர்காய்ச்சல், விறைப்பு, கொட்டாவி, ருசியின்மை, உடல் பாரம், ஆகியவை காணப்படும். கட்டி மிகத் தாமதமாக உண்டாகிப் பழுக்கும்.

ஆயுர்வேத மருந்துகளாகிய வருணாதி க்ருதம் மார்பகக் கட்டி பழுக்காத நிலையில் காலையில் வெறும் வயிற்றில் சாப்பிடுவதற்கு ஏற்ற மருந்தாகும். ஆசனவாய் வழியாகச் செலுத்தப்படும் கஷாய வஸ்தி மற்றும் எண்ணெய் வஸ்தி ஆகியவையும் நல்ல சிகிச்சைமுறைகளே.

செம்முருங்கையை நம் முன்னோர் பானம், உணவு, பூச்சு ஆகிய வகைகளில் உபயோகித்து மார்பக கட்டியை குணமடையச் செய்ததாக அஷ்டாங்க ஹ்ருதயம் எனும் ஆயுர்வேத நூல் கூறுகிறது. காராமணியை உணவில் சற்று அதிகம் சேர்த்துக் கொள்வதும் நல்ல பலனைத் தருவதாக கூறப்படுகிறது.

அதுபோல குக்கில் எனப்படும் குக்குலு இதுபோன்ற உபாதைகளில் நல்லதொரு மருந்தாகக் கண்டறியப்பட்டுள்ளது.

சுகுமாரக்ருதம் எனும் ஆயுர்வேத மூலிகை நெய் மருந்தும் இந்த உபாதையில் சாப்பிடவேண்டிய நல்ல மருந்து. மாலை வேளைகளில் வெறும் வயிற்றில் இதனைச் சாப்பிட்டு வரலாம். முன் குறிப்பிட்ட வருணாதி க்ருதம் இந்த சுகுமார க்ருதத்துடன் கலந்து சாப்பிடக்கூடிய நிலைகளும் உண்டு.

மருத்துவரின் ஆலோசனைப்படி இவற்றை எத்தனை நாட்களுக்குச் சாப்பிடவேண்டும், எப்படிச் சாப்பிட வேண்டும் என்பனவற்றை அறிந்து சாப்பிடுவதே நல்லது.

சிலாசத்து எனப்படும் மருந்தும் இதுபோன்ற மார்பகக் கட்டிகளுக்குப் பயன்படுத்தக் கூடியதே. உட்புறக் கட்டிகளை உடைத்து அவற்றை வெளியேற்றும் சக்தியை இந்த சிலாசத்து பெற்றிருப்பதால் அதையும் மேற்குறிப்பிட்ட நெய் மருந்துகளுடன் உணவிற்குப் பிறகு சாப்பிட்டு வரலாம்.

மாதவிடாயை ஏற்படுத்தும் சுரப்பிகளின் சீரான செயற்பாடுகள் இல்லாமற் போனால் இந்த உபாதை பெண்களுக்கு பொதுவாக ஏற்படும் என்ற ஒரு கருத்தும் கூறப்படுகிறது. அதனால் சுரப்பிகளின் செயற்பாடுகளில் ஏற்படும் தொய்வுகளை உடனுக்குடன் சரி செய்து கொள்வதும் நல்லதே.

# இந்திய சுதந்திரதினம் யாழ்ப்பாணத்திலும்




(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் 68 ஆவது சுதந்திரதினம் நாளை மறுதினம் கொண்டாடப்படவுள்ளது.

இந்தியாவின் சுதந்தின தினக் கொண்டாட்ட நிகழ்வு யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தின் வட மாகாணத்திற்கான அலுவலகம் அமைந்துள்ள யாழ்.மருதடி வீதியில் காலை 9 மணிக்கு இடம்பெறும் தேசிய கொடியேற்றலுடன் நிகழ்வுகள் நடைபெறவுள்ளதாக துணைத் தூதரகத்தின் இணைப்பாளர் எஸ்.டி.மூர்த்தி தெிவித்துள்ளார்

# பட்டப்படிப்புக்கான வங்கிக் கடன்

(யாழ்ப்பாணம்)

களினிப் பல்கலைக் கழகத்தின் தொலைக் கல்வி மற்றும தொடர்ச்சியான கல்வி மையத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ள பட்டப்படிப்புகளுக்காக பதிவுகளை மேற்கொள்ளும் விண்ணப்பதாரிகளுக்கு மக்கள் வங்கி விசேட கடன் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

களனி பல்கலைக்கழகத்தின் வெளிவாரி மற்றும் பட்டப்படிப்பு மாணவர்களுக்கு குறைந்த வட்டி வீதத்தில் பாடநெறிகளுக்கான கட்டணங்களைச் செலுத்துவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் இந்தக் கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது. இதற்காக அதிக பட்சம் 5 இலட்சம் ரூபா வரை கடனாக பெறமுடியும்.

அரசு தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் இரண்டு பிணையாளர்கள் அல்லது நிலையான சொத்துக்களைப் பிணையாக வைத்துப் பெறக்கூடிய இக்கடனை ஒருவருட தயவுக் காலத்துடன் 7 வருடங்களில் மீளச் செலுத்த முடியும். (10)

# 26 தமிழ் யுவதிகளின் இராணுவப் பயிற்சி நிறைவு



இராணுவத்தில் இணைத்துக்கொள்ளப்பட்ட 26 தமிழ் யுவதிகள் தமது பயிற்சிகளை முடித்துக்கொண்டு வெளி யேறும வைபவம் கிளிநொச்சி கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுசந்த ரணசிங்க தலைமையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.


இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட கிளிநொச்சி அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் இராணுவப் பெண்கள் அணியின் அணி வகுப்பு மரியாதையை பார்வை யிட்டார்,

மேலும் நான்கு மாத காலம் நடைபெற்ற இந்தப் பயிற்சித் திட்டத்தில் மொழி வளவிருத்தி, கணனிக் கல்வி, சுய தொழில் பயிற்சி போன்றன உள்ளடங்குகின்றன,

அத்துடன் ஜே. துவாரகா சிறந்த உடல்வலிமையுடைய பெண் படைவீரருக்கான வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டார்.

# வடக்கு தெற்காக இணைக்கும் பாலமாக ஊடகவியலாளர்கள் பணிபுரிய வேண்டும்

## அஸ்வர் எம்.பி.கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

வடக்கையும் தெற்கையும் இணைக்கும் பாலமாக ஊடகவியலாளர்கள் விளங்க வேண்டும். தற்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலின் கீழ் ஊடகத்துறை பெருவளர்ச்சி கண்டு வருகின்றது. ஊடகம் என்பது அழிக்க முடியாத ஒன்றாக விளங்குகின்றது.

நாட்டின் வளர்ச்சி இனங்களுக்கிடையிலான ஒற்றுமையான வாழ்வு, அபிவிருத்தி போன்றவற்றினை விருத்தி செய்யும் துறையாக ஊடகத்துறை காணப்படுகின்றது என ஊடகத்துறை அமைச்சின் மேற்பார்வையாளரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய அல்ஹாஜ் ஏ.எச்.எம்.அஸ்வர் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ் மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற பிரதேச அபிவிருத்தியில் ஊடகவியலாளர்களின் பங்களிப்பு என்னும் ஊடகவியலாளர்களுக்கான கருத்தரங்கு நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரி வித்தர்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்

ஊடகம் இல்லாது மனிதன் வழ முடியாது உலகத்தினை ஒன்றிணைத்து செல்லும் துறையாக ஊடகத்துறை காணப்படுகின்றது.தொலைக்காட்சி, இணையம் தொலைபேசி போன்ற ஏனைய தொடர்பாடற் துறைகளுடன் மனிதன் இணைந்திருக்கின்றான்.

உலகில் வேறுபாடு கிடையாது இன்று உலகம் சுருங்கி விட்டது. இன்றைய அரசினுடைய அபிவிருத்தியில் அனைத்து பிரதேசங்களும் ஒரேமாதிரியாக நோக்கப்பட்டு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தெற்கை மறக்கமாட்டோம் அதேவேளை வடக்கையும் மறக்கமாட்டோம் இரண்டையும் இணைத்த வகையிலேயே எமது அபிவிருத்திச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

தெற்கில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்திச் செயற்பாடுகள் போன்று வடக்கிலும் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

வடமாகாண ஆளுநர் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் ஒன்றிணைந்து நாட்டை கட்டியெழுப்புவதற்காக உழைத்துக் கொண்டிருக்கின்றார்கள். தெற்கில் இருக்கின்ற வசதி வாய்ப்புக்களை வடக்கு மக்களும் பெற்றுவிடவேண்டும் என்னும் செயற்பாட்டில் அதனை பெற்றுத்தருவதில் வடக்கு மாகாண ஆளுநர் துடிப்புடன் செயலாற்றிக்கொண்டிருக்கின்றார். தெற்கையும் வடக்கையும் இணைக்கும் பாலமாக அபிவிருத்திச் செயற்பாடுகள் அமைகின்றன. அபிவிருத்தியின் ஊடாக தெற்கும் வடக்கும் இணைகின்றன.

உலகத்தைப் படைக்கக் கூடிய ஆயுதமாக பேனா விளங்குகின்றது. அதேபோல அழிக்கக் கூடிய ஆயுதமாகவும் பேனா விளங்குகின்றது. ஊடகவியலாளராகிய நீங்கள் நன்மையான விடயத்திற்காக அதனைப் பயன்படுத்த வேண்டும். சர்வதேசத்தின் சில செயற்பாடுகள் நாட்டினை அழிக்கும் விதமாக இடம்பெற்று வருகின்றன. இதற்கு ஊடகவியலாளர்கள் இடம்கொடுக்க கூடாது. மகிந்தசிந்தனை வேலைத திட்டத்தில் ஜனாதிபதி ஊடகத்துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளார்.

ஆசியாவின் பலம் மிக்க தலைவர்களில் ஒருவராக விளங்கும் ஜனாதிபதி அனைத்து மக்களையும் ஒருசேர இணைத்து அபிவிருத்திச் செயற்பாடுகளினை மெற்கொண்டு வருகின்றார். மக்களின் ஆணைமூலம் இரண்டு தடவைகள் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார ஜனாதிபதியின் செயற்ப்பாட்டில் அனைவரும் இணைந்து பணியாற்றி அவரின் கரங்களைப் பலப் படுத்த வேண்டும்.

வடக்கு, தெற்கு, கிழக்கு, மத்தி என்ற பேதமின்றி ஒரே நாட்டு மக்கள் என்ற உணர்வுடன் செயற்பட்டு இந்த நாட்டினை அபிவிருத்தி பாதை நோக்கி இட்டுச் செல்ல வேண்டும். இதற்கு ஊடகவியலாளர்களது பங்கு அவசியமானதொன்றாக விளங்குகின்றது என்றார். (25,63)

# வீதியோரங்களில் வாகனங்கள் புன்னாலைக்கட்டுவனில் சிரமம்

## உடனடி நடவடிக்கை அவசியம்

புன்னாலைக் கட்டுவன் சந்திப் பகுதியில் வீதியோரங்களில் பகல் வேளைகளில் வாகனங்கள் நிறுத்தி வைக்கப்படுவதால் அந்த வீதியூடான போக்குவரத்துக்கள் பல்வேறு சிரமத்தின் மதியில் இடம்பெறுவதாக பயணிகளால் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனரக வாகனங்களும் ஏனைய சிறியரக வாகனங்களும் வீதியோரங்களில் வரிசையாக நிறுத்தி விடப்பட்டுள்ளன. இதனால்அலுவலகம் செல்வோர் மற்றும் பாடசாலை மாணவர்கள் என பல தரப்பினரும் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். இதனால் அவர்கள் நேரம் தவறி பாடசாலைகளுக்கும் அலுவலகங்களுக்கும் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

எனவே குறித்த பகுதியில் வாகனங்கள் நிறுவத்துவதை சம்பந்தப்பட்ட தரப்பினர் தடுத்து பயணிகளின் சீரான போக்குவரத்துக்கு உதவுமாறு கோரிக்கை விடுக்கின்றனர். (85)

# மதுபானக்கடை அமைக்கப்படுவதால் பாரிய பிரச்சினைகள் ஏற்படும்

## பொது அமைப்புக்கள் மகஜர்

(முழங்காவில்)

பல்லவராயன் கட்டு பழைய தபாலகத்திற்கு முன்பாக ஏ 32 வீதியில் அமைக்கப்படவிருக்கும் மதுபானசாலை நாளாந்தம் கூலிவேலை செய்யும் இப்பிரதேச மக்கள் பாரிய பிரச்சினைகளை சந்திக்க நேருவதுடன் கலாசார சீரழிவுகளும் ஏற்படலாம் எனூ பல்லவராயன் கட்டு ஜெயபுரம் வடக்கு தெற்கு பொது அமைப்புக்கள், மதகுருமார் மற்றும் பொதுமக்கள் கூட்டாக தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலை வருமான முருகேசு சந்திரகுமாருக்கு மகஜர் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளனர்.

அந்த மகஜரில் ஜெயபுரம் பிரதேசத்தில் வசித்து வருகின்ற மக்கள நாளாந்தம் கூலி வேலை மேற்கொண்டு வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வருகின்றனர்.

இது ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழும் பிரதேசமாகும். இப் பிரதேசத்திலிருக்கின்ற மதுபானக் கடைகளால் பாரிய பிரச்சினைகளை மக்கள் சந்தித்துக் கொண்டிருக்கின்றனர். அத்தோடு கலாசாரசீரழிவுகளும் குடும்பப் பிரிவுகளும் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

எனவே, பல்லவராயன்கட்டு பழைய தபாலகத்திற்கு முன்பாக ஏ.32 வீதியருகாமையில் தனியார் காணியொன்றைக் கொள்வனவு செய்து குழாய்க்கிணறு அடிக்கப்பட்ட நிலையில் இக்காணியில் மதுபான நிலையம் அமைக்கப்படவுள்ளதென பொது அமைப்புக்களாகிய நாம் அறிகின்றோம். இங்கு அமைக்கப்படவுள்ள மதுபான நிலையத்தினை தடுத்து நிறுத் துமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம் எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இதன் பிரதிகள் அரசாங்க அதிபர், பிரதேச செயலர், வடமாகாண சபை எதிர்க்கட்சி உறுப்பினர் வை.தவநாதன், முழங்காவில் பொலிஸ் பொறுப்பதிகாரி, கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி, மதுவரி கட்டுப்பாட்டு சபை (யாழ். கிளிநொச்சி மாவட்டம்), (சிறுவர் நன்நடத்தைப் பிரிவு (கிளிநொச்சி), பூநகரி பிரதேச சபை (தலைவர்) ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.


# வெற்றுக் காணிகளில் இளைஞர்கள் அட்டகாசம்

(அச்சுவேலி)

வல்வெட்டித்துறை வன்னிச்சியம்மன் ஆலய பின்புறமாக உள்ள வெற்றுக் காணியில் வைத்து இளைஞர்கள் மது அருந்துவதுடன் அப்பகுதி மக்களுக்கு பெரும் இன்னல்களையும் ஏற்படுத்தி வருகின்றனர்.


மது அருந்திவிட்டு வெற்றுப் போத்தல்களை அக்காணிக்குள் வச்சிவிட்டுச் செல்வதுடன் காணிக்குள் நின்று பலத்த சத்தத்துடன் உரையாடியும் வருகின்றனர்.

ஆலய வழி பாட்டுக்கு இத்தகைய நடவடிக் கைகள் இடையூறாக இருப்பதாக அப்பகுதி பொதுமக்கள் தெரி





விக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுவதைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (85)

23) பின்வரும் எந்தப்பொருள் மேலிருந்து பார்க்கும்போது  எனத் தோன்றும்


1) 2) 3)

24) பின்வரும் எந்தப் பொருள் மேலிருந்து பார்க்கப்படும் போது  எனத் தோன்றும்


1) 2) 3)

25) தரப்பட்ட அறிவுறுத்தலுக்கேற்ப விடை தருக

பாலும் எனக்குத் தேவையில்லை
பழமும் எனக்குத் தேவையில்லை
சோலை எங்கும் கூறி நிதம்
சுற்றித்திரிதல் போதுமப்பா!

இந்தப் பாடல் கிளி பற்றியது என்றால் பழமும் என்ற சொல்லின் கீழ் கோடிடுக. அவ்வாறின்றி இங்கு கூறப்பட்டது பால் பற்றியது என்றால் பாலும் என்ற சொல்லைச் சுற்றி வட்டமிடுக.

பின்வரும் உருவை அவதானித்து விடை எழுதுக.

26) காலியிலிருந்து கொழும்பு, கண்டி ஊடாக அனுராதபுரம் வரையுள்ள தூரம் எவ்வளவு?

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | அனுராதபுரம் |
| | | கண்டி | | 112 |
| | கொழும்பு | | 75 | |
| காலி | 45 | | 120 | |

பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடையைத் தெரிவு செய்து எழுதுக.

மீனினம் ஒடிப் பரக்குதம்மா! ஊடே
வெள்ளி ஓடமொன்று செல்லுதம்மா!

**சரியான விடையைத் தெரிவு செய்க.**

29) "வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்" என்பதன் கருத்து

1) வீண்பெருமை 2) திறமையில் நம்பிக்கை 3) கடவுள் நம்பிக்கை

30) எனது பாட்டி "ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு" என்றார் இதன் அர்த்தம் யாது?

1) கோபம் சித்தனைக்கு இடையூறு 2) விடாமுயற்சி பலன் தரும் 3) சந்தர்ப்பத்தைத் தவறவிடக்கூடாது


பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் முதலில் தரப்பட்டுள்ள உருக்களுக்குப் மிகப்பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து அதன்கீழ்க் கோடிடுக.

31) 
1) காலை
2) பாடசாலை
3) சுத்தம்

32) 
1) மேகங்கள்
2) சுற்றுலா
3) பறத்தல்

கீழே உள்ள படத்தை அவதானித்து விடை தருக.

33) நகரம் A இல் இருந்து நகரம் B இற்குப் பயணிக்கும் ஒருவர் எத்தனை தடவைகள் வலது பக்கமாகத் திரும்ப வேண்டும். 1) 4 2) 3 3) 5




(மிகுதி வினாக்கள் வெள்ளிக்கிழமை வெளியாகும்)

பயிற்சி வினாக்களின் விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும்



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014

பகுதி - I
1 மணி 15 நிமி

# கல்வி முரசு



ஆசிரியர்: திரு.பி.இரட்ணராஜ்
(pri.Trd,B.A,Dip.in.Edu,Dip.in.HRM, Dip.in.Ad)
யாழ். புனித ஜோண்பொஸ்கோ வித்தியாலயம்.




மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் முன்னோடிப் பரீட்சை - 2014 ஆகஸ்ட்


**1 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1) பாடலில் விவரிக்கப்பட்டுள்ள பிராணியைத் தெரிவு செய்க. கோடிடுக.


குளிரைப் போக்க கம்பளியும்
குடிக்கப் பாலும் நமக்கெல்லாம்
அளிக்கும் நல்ல மிருகமது
அன்புப் பிழைக்கும் நம்மை இது. - அது என்ன?


(1) (2) (3)



2) பாலும் எனக்குத் தேவையில்லை
பழமும் எனக்குத் தேவையில்லை
சோலை எங்கும் கூவி நிதம்
சுற்றித் திரிதல் போதுமப்பா!


(1) (2) (3)

**வெற்று அடைப்புக்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க**

3) 

(1) (2) (3)

4) 

(1) (2) (3)

**ஒன்றுக்கொன்று தொடர்பு அற்ற கூட்டத்தைக் கொண்ட கூட்டத்தைத் தெரிவு செய்க.**

5)


| (1) | (2) | (3) |
|---|---|---|
| கவின் | ஆலயம் | கோபம் |
| வனப்பு | கடல் | சீற்றம் |
| எழில் | கோயில் | ஆத்திரம் |
| வடிவு | மசூதி | வெகுளி |

6)

| (1) | (2) | (3) |
|---|---|---|
| கலை | கடல் | முடி |
| வித்தை | வானம் | மகுடம் |
| ஆண்மான் | பூமி | முடித்தல் |
| கலைத்தல் | முகில் | குடுமி |


7 ஆம் 8 ஆம் வினாக்களில் காட்டப்பட்டுள்ள எண் கோலங்களை அவதானித்து விடையைத் தெரிவு செய்க.

7)





(1) 20 (2) 81 (3) 100

8)





1) 10 2) 11 3) 12


9) வாக்கியம் - சொல் - எழுத்து என்பவற்றுக்கிடையிலான தொடர்வைக் காட்டும் உரு எது?



(1) (2) (3)

10) பொஸ்கோ வித்தியாலயம் வடமாகாணத்தில், யாழ். மாவட்டத்தில், யாழ் வலயத்தில் அமைந்துள்ளது. இவை பின்வரும் குறியீடுகள் மூலம் காட்டப்பட்டுள்ளது.



(1) (2) (3)

11) "நான் நவம்பர் மாதம் நடைபெறும் புலமைப்பரிசில் பரீட்சையில் 180 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறுவேன்" என்று இவ்வருடம் தரம் ஐந்தில் கல்வி பயிலும் மாணவி மாலதி தனது வகுப்பாசிரியரிடம் கூறினாள். இக்கூற்று பிழையானது இதற்குரிய காரணமாக அமைவது.

1) மாலதி திறமையான மாணவியாக இல்லாதிருந்தமையாகும்.
2) சாதாரணமாக புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறுவது ஆகஸ்ட் மாதத்தில் என்பதாகும்.
3) பரீட்சையில் 100 புள்ளிகளை மாத்திரமே பெறமுடியும் என்பதாகும்.

12) பசியினால் வாடிய நரி ஒன்று இரை தேடிச் செல்லும்போது திராட்சைக் குலை ஒன்றைக் கண்டு அதனைப் பழித்து தின்றது. இதிலுள்ள கருத்து பிழையாவதற்கு காரணமான விடயம் எது?

1) நரிக்கு பசி ஏற்படுவதில்லை
2) நரி இரை தேடிச் செல்வதில்லை
3) நரி திராட்சையை உணவாகக் கொள்வதில்லை.

கீழுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்ட உருக்களில் சரியான ஒழுங்கு வரிசையைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.


13)




1) BADEC 2) CDEAB 3) BDAEC



14)




1) BACD 2) BCDA 3) BDAC

15) பின்வரும் வாக்கியத்தை மிகக்கருத்துள்ள வாக்கியமாக மாற்றுவதற்குச் செய்ய வேண்டிய மாற்றத்தை தெரிவு செய்க.

நான் நாளை மாலை பாடசாலைக்குச் சென்றேன்.

1) நாளை என்பதற்குப் பதிலாக காலை என்பதை இடுதல்
2) மாலை என்பதற்குப் பதிலாக காலை என்பதை இடுதல்
3) நான் என்பதற்குப் பதிலாக நீ என்பதை இடுதல்

| ரூ.612.73 | என்பதைக் குறியீடுகளில் |
|---|---|
| R.A.BC.DE | எனக் குறிக்கலாம் எனின், |

16) ரூ.736.23 ஐ எவ்வாறு காட்டலாம்?

1) R.ABC.DE 2) R.DEA.CE 3) R.ABD.CE

17) 2012 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி புதன்கிழமையாகும். இம்மாதத்திலுள்ள புதன்கிழமைகளின் திகதிகளின் கூட்டுத்தொகை யாது?

1) 75 நாட்கள் 2) 70 நாட்கள் 3) 80 நாட்கள்

18) ஒரு வகுப்பில் உள்ள 6 நண்பர்கள் ஒவ்வொருவரும் அவர்களின் பிறந்த தினத்திற்கு ஒருவருக்கொருவர் வாழ்த்து அட்டைகளை அனுப்பிக்கொள்வர். ஒரு வருடத்தில் இவர்களிடையே பரிமாறிக்கொண்ட வாழ்த்து மடல்களின் எண்ணிக்கை யாது?

1) 25 2) 30 3) 35


19) மோகன் சதுரவடிவில் பூப்பாத்தியை தயார் செய்து அதனைச் சுற்றி ஒரு வேலியை அமைத்தான். யாதாயினும் ஒரு திசை வழியே பார்க்கும்போது அப்பக்கத்தில் 10 கம்பங்கள் காணப்படுமாகில், இப்பாத்திக்கு பயன்படுத்திய கம்பங்களின் எண்ணிக்கை யாது?

1) 40 கம்பங்கள் 2) 36 கம்பங்கள் 3) 42 கம்பங்கள்

20) பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு இருபத்தைந்து ஆண்டு நிறைவு விழா 2010 ஆம் ஆண்டு நடைபெற்றது. அவ்விழாவில் பங்குபற்றியபோது கண்ணனின் வயது 10, ஆகும். இப்பாடசாலையின் பொன்விழா நடைபெறும்போது கண்ணனுக்கு எத்தனை வயது இருக்கும்?

1) 45 வயது 2) 35 வயது 3) 55 வயது

21)




- இத்தராசு சமநிலையிலுள்ளது. அதன்படி அப்பிளின் நிறை

1) 400 g 2) 450 g 3) 475 g

22) கமலாவினதும், மாலாவினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 35 வருடங்களாகும். கமலாவின் வயது மாலாவின் வயதைப்போல் 4 மடங்காயின் மாலாவின் வயது எத்தனை வருடங்களாகும்?

1) 6 வருடங்கள் 2) 8 வருடங்கள் 3) 7 வருடங்கள்



அருள்மிகு கைதடி நவபுரம் ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற தேர் உற்சவத்தின் போது... (51)

# இந்து ஸ்வயம் சேவாசங்கத்தின் நோக்கம்

# சமூக நலப்பணிகளை முன்னெடுப்பதாகும்

## சங்கத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்து ஸ்வயம் சேவா சங்கத்தின் பிரதான பணி உலகளாவிய ரீதியில் இந்துக்களை ஒருங்கிணைத்து, சமூக நலப் பணிகளை முன்னெடுப்பதாகும். அந்த வகையில் இலங்கையிலுள்ள இச்சங்கம் பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருவது பாராட்டத்தக்கது என இச்சங்கத்தின் இலங்கை வாழ் வதிவிடப்பிரதிநிதி இராதாகிருஸ்ணன்ஜி தெரிவித்தார்.

சுன்னாகம் கதிரைமலைச் சிவன் ஆலயக் கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற ஸ்ரீ குருபூஜா விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்நாட்டின் பெங்களூரிலுள்ள காவேரி கலைக் கல்லூரி, இலங்கையில் யாழ்ப்பாணத்திலுள்ள திருமறைக் கலாமன்றம் முதலானவை இன்று இந்துக்களின் பாரம்பரியக் கலைகளில் ஒன்றான பரதநாட்டியத்தைப் பயிற்றுவிக்கின்றன. வளர் க்கின்றன.

பரதக் கலைகளின் சின்முத்திரைகள் எல்லாம் சிவனுக்குரியாகவிருக்க அதனை இரட்சிப்பவருக்குரியதாக மேற்படி கலைக கல்லூரிகளில் மாற்றம் செய்யப்பட்டு எம் இளஞ் சந்ததியினருக்குப் போதிக்கப்பட்டு வருகிறது. காலப்போக்கில் பரதக் கலை அந்நிய மதத்தவருக்குரியது என்ற மாயையைத் தோற்று வித்துவரும் பணியினை இவர்கள செய்து வருகின்றனர் என்பதை எம்மவர்கள் புரிந்து கொள்ளவில்லை.

எனவே இலங்கை வாழ் இந்துக்கள் எமது கலை, கலாசாரம் பண்பாடு தொடர்பில் போதிய விழிப்புணர்வுடன் இருந்து எமது இந்துப் பிள்ளைகளை எமது பாரம்பரியக்தில் கலைகளை கற்பிக வைப்பது மட்டுமன்றி வேற்று மதத்தவர் எமது கலைகளைக் கற்பிப்பதையும் கலையில் திரிவுபாட்டை ஏற்படுத்த முயற்சிக்கப்படுவதையும் கண்டிக்கவும் முன்வரவேண்டியது. காலத்தின் கட்டாய தேவையாகும். எனத் தெரிவித்தார். (06)

# இந்திய மீனவர்களின் விளக்க மறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)



இலங்கைக் கடற்படையினரால் இலங்கைக் கடற்பரப் பில் அத்துமீறி கடல்றொழிலில் ஈடுபட்டிருந்த வேளை கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்ட இந்திய மீனவர்களுக்கான விளக்கமறியல் நேற்று மேலும் ஊர்காவற்றுறை மற்றும் பருத்தித்துறை நீதிமன்றங்களால் நீடிக்கப்பட்டுள்ளன.

அனலைதீவுக் கடற்பரப்பில் கடந்த 22 ஆம் திகதி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 18 இந்திய மீனவர்கள் நேற்று மீண்டும் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட போது அவர்களை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை பருத்தித்துறைக் கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட 51 இந்திய மீனவர்களும் நேற்று பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட போது அவர்களை எதிர்வரும் மாதம் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டிருப்பதாக யாழ்.கடற் றொழில் நீரியல் வளத்திணைக் கள சிரேஷ்ட கடற்றொழில் பரிசோதனர் ரமேஜ் கண்ணா தெரிவித்துள்ளார். (பா)

# முதியோர் சங்கத்தின் மாதாந்த ஒன்று கூடல்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மாதாந்த ஒன்று கூடல் நிகழ்வு எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோப்பாய் வடக்கு மாதர் கிராம அபிவிருததிச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது என சங்கத்தின் தலைவர் பொ.இராசரத்தினம் தெரிவித்துள்ளார்.

எனவே சங்கத்தின் அங்கத்தவர் அனைவரையும் இந்த ஒன்று கூடலில் கலந்துகொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வரணி பொதுச் சந்தையை சீரமைக்க கோரிக்கை

(வரணி)

வரணி பிரதேசமக்களின் உயிர்நாடியாகவும் ஒரே ஒரு சந்தையாகவும் விளங்கும் வரணிப் பொதுச் சந்தையில் வியாபாரிகள் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் மீன் வியாபாரிகள் தொகை அதிகரிப்பைக் காண முடிகிறது. இத்தகைய சூழலில் இச்சந்தையை மிகவும் துப்புரவாக வைத்திருக்க பொதுமக்கள் தயாராக இல்லை என தெரிவிக்கப்படுகிறது.

சந்தையை கூட்டி துப்புரவுப் பணி மேற்கொண்டு ஒரு மாதத்திற்கு மேலாக உள்ளதையும் கிணற்று நீரினுள் இலை குழைகள் வீழ்ந்து கிடப்பதையும் உரிய தரப்பிற்கு பலமுறை தெரியப்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கட்டாக்காலி மாடு ஆடுகள் படுத்து உறங்குவதாகவும் நாய்களின் தொல்லை அதைவிட மோசமாக இருப்பதாகவும் மக்கள் கடும் விசனத்துடன் தெரிவிக்கின்றனர். எனவே உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (150)

# நெசவுக் கிராமம் ஆரம்பித்து வைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நெசவு கைத்தறி கிராமத்தை கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்துள்ளார்.

முள்ளியவளை கிராமத்தில் நெசவு கைத்தறியில் பயிற்சி முடித்தவர்களுக்கு அமைச்சர் றிசாட் பதியூதீனால் சான்றிதழ்களும் உப கரணங்களும் 91 ஆயிரம் ரூபா செலவில் ஒரு நபருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதனை இக்கிராமத்திலுள்ள வேலை இல்லாத யுவதிகளுக்கு நிரந்தரமான வேலையைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கோடும் இக் கிராமத்தில் இத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளனர். (40)

# சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு



(யாழ்ப்பாணம்)

வாழ்வின் எழுச்சி திணைக் களத்தினால் வவுனியாவில் உத்தியோகத்தர்களுக்கும் கிராம மட்ட தலைவர்களுக்குமான கருத்தரங்கு கடந்த வெள்ளிக் கிழமை வவுனியா கலாசாரமண்டபத்தில் இடம்பெற்றது

மேற்படி நிகழ்வானது கிராம மட்டங்களில் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கும் கிராம மட்ட தலைவர்களுக்குமான விழிப்புணர்வு கருத்தரங்காக அமையப்பெற்றது

இக்கருத்தரங்கில் குறு நிதியியல் சம்மந்தமாகவும் இலங்கை மத்திய வங்கியின் பணிகள் தொடர்பாகவும் மக்களை சேமிப்பில் ஈடுபடுத்தலின் முக்கியத்துவம் சம்மந்தமாகவும் பயிற்சிகள் வழங்கப்பட்டன

இப் பயிற்சி நெறியின் வளவாளர்களாக யாழ்.பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் பேராசிரியருமான பாலசுந்திரம் பிள்ளை மற்றும் இலங்கை மத்திய வங்கியின் குறுநிதியியல் துறை முகாமையாளர் பத்மநாதன், ஓய்வுபெற்ற அரசரங்க அதிபர் விஸ்வலிங்கம் வாழ்வின் எழுச்சி திணைக் களத்தின் வடமாகாண பிரதி பணிப்பாளர் குமாரசிறி ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர

சிறப்பு விருந்தினராக கைத்தொழில் வாணிப அமைச்சர் ரிசாத் பதியுதீன்கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது . (70)

# வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................

முகவரி :- ..............................

பிறந்த ஆண்டு :- ..............................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

# இஸ்ரேல் - பலஸ்தீனத்திற்கிடையே அமைதிப் பேச்சுவார்த்தை ஆரம்பம்

இஸ்ரேல், பலஸ்தீன தலைவர்கள் இடையே எகிப்து தலைநகர் கெய்ரோவில் அமைதிப் பேச்சுவார்த்தை நேற்று முன்தினம் திங்கட்கிழமை தொடங்கியது. இஸ்ரேல் இராணுவத்துக்கும் பலஸ்தீனத்தின் ஹமாஸ் அமைப்புக்கும் இடையே தீவிர போர் நடைபெற்று வருகிறது. கடந்த ஞாயிற்றுக்கிழமை 72 மணிநேர போர் நிறுத்தத்துக்கு இரு தரப்பும் ஒப்புக்கொண்டன.

இந்நிலையில் எகிப்து அரசின் ஏற்பாட்டின் பேரில் கெய்ரோவில் நேற்று முன்தினம் அமைதிப் பேச்சுவார்த்தை தொடங்கியது. ஹமாஸ் அமைப்பினர் ரொக்கெட் தாக்குதலை நிறுத்தாதவரை பேச்சுவார்த்தையில் பங்கேற்கமாட்டோம் என்று இஸ்ரேல் அரசு உறுதியாக தெரிவித்து வந்த நிலையில், சர்வதேச நெருக்கடி காரணமாக பேச்சுவார்த்தைக்கு முன்வந்துள்ளது.

இதுகுறித்து இஸ்ரேல் தூதர் ஒருவர் கூறியபோது, எகிப்தில் இப்போது பேச்சுவார்த்தை தொடங்கியுள்ளது. இந்த முயற்சி தோல்வி அடைந்தால் மறைமுகமாக பேச்சுவார்த்தை நடாத்தவும் தயாராக உள்ளோம் என்று தெரிவித்தார்.

காஸா பகுதியில் 72 மணி நேர போர் நிறுத்தம் அமுல்படுத்தப்பட்டிருப்பதை ஐ.நா. பொதுச் செயலாளர் பான்-கி-மூன் வரவேற்றுள்ளார்.

இதுகுறித்து அவரது செய்தித் தொடர்பாளர் கூறியபோது, 3 நாள் போர் நிறுத்தம் மேலும் நிரந்தரமாக வேண்டும், அதற்கான முயற்சிகளில் ஐ.நா. சபை ஈடுபட்டுள்ளது, இரு தரப்பினருக்கும் இடையில் சுமூக உடன்பாடு எட்டுவதற்கு ஐ.நா. உதவத் தயாராகவுள்ளது என்று தெரிவித்தார்.

# மீனவர் பிரச்சினைக்குத் தீர்வுகாண தமிழக காங்கிரஸ் போராட்டம்

(சென்னை)

தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு, தீர்வு எட்டப்படவில்லை என்றால், தமிழக காங்கிரஸ் போராட்டத்தில் ஈடுபடும் என தமிழக காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன் அறிவித்துள்ளார்.


இது தொடர்பான, அவரது அறிக்கை: லோக்சபா தேர்தலின் போது, தமிழகம் வந்த பிரதமர் மோடி, "பா.ஜ. ஆட்சி வந்ததும் மீனவர் பிரச்சினை தீர்ந்து விடும் என்றும் தமிழக மீனவர்கள் எந்தவித பாதிப்புமின்றி, கடலுக்கு மீன் பிடிக்க செல்லலாம்" எனவும் பேசினார். ஆனால், இலங்கை கடற்படையினரால் கடந்த மாதம் கைது செய்யப்பட்ட 93 மீனவர்களும் கைப்பற்றப்பட்ட 62 படகுகளும் இன்னும் இலங்கை அரசால் விடுவிக்கப்படவில்லை. இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கச் சொல்லி இராமேஸ்வரம் மீனவர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

உலகச் செய்திகள்

மீனவர் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும் என, மத்திய அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் கூறியிருக்கிறார். மற்ற அரசியல் கட்சிகளைப் போல, பிறர் வயிற்றில் அடித்து வயிறு காயும் போது அதை வைத்து அரசியல் நடாத்துகிற மனப்போக்கும் எண்ணமும் காங்கிரசுக்கு என்றுமே இருந்தது இல்லை. ஆகவே, இப்பிரச்சினைக்கு யார் தீர்வு கண்டாலும் எங்களுக்கு மகிழ்ச்சி தான். ஆனால், தீர்வு எட்டப்படவில்லை என்றால் கண்டிப்பாக தமிழக காங்கிரஸ் போராட்டத்தில் ஈடுபடும். இவ்வாறு ஞானதேசிகன் கூறியுள்ளார்.

# தீவிரவாதத்தை ஒழிக்க பொலிஸ் சீர்திருத்தம் அவசியம்

## இந்திய எம்.பி.க்கள் வலியுறுத்து



(புதுடில்லி)

இந்தியாவில் பயங்கரவாதத்தை வேரறுக்க, கடுமையான செயற்பாட்டு முறையை உருவாக்க வேண்டும். பொலிஸ் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும்'' என, ராஜ்யசபாவில், எம்.பி.,க்கள் பலரும் நேற்றுமுன்தினம் கோரிக்கை விடுத்தனர்.

மத்திய உள்துறை அமைச்சகத்தின் செயற்பாடுகள் குறித்து, ராஜ்யசபாவில், நேற்று முன்தினம் விவாதம் நடைபெற்றது. இந்த விவாதத்தில் பங்கேற்றுப் பேசிய, எம்.பி.க்கள் கூறியதாவது,

எச்.கே.துவா - நியமன எம்.பி. பயங்கரவாத தாக்குதல்களை எதிர்கொள்ளும் நிலையில், நாடு இல்லை. மும்பையில், 2008 இல், பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதல் மூலம், இது தெரியவந்துள்ளது. எந்த ஒரு தனிப்பட்ட மாநிலமும், பயங்கரவாதத்தை ஒழித்து விட முடியாது.

இதற்கு மத்திய அரசின் ஒத்துழைப்பு தேவை. பொலிஸ் சீர்திருத்தங்கள் தொடர்பாக, தரம் வீரா கமிஷன் அளித்த பரிந்துரைகள், இன்னும் அமுல்படுத்தப்படவில்லை. பொலிஸ் டி.ஜி.பி.,க்கள் எல்லாம், முதல்வரின் விருப்பத்திற்கு ஏற்ற வகையில், நியமிக்கப்படுவது தடுக்கப்படவேண்டும். இது போன்ற நியமனங்களை, சிறப்பு நியமன ஆணையங்கள் மேற்கொள்ளவேண்டும்.

பயங்கரவாதத்தை ஒடுக்க, கடுமையான செயற்பாட்டு முறை தேவை. பொலிஸ் சீர்திருத்தங்கள் அவசியம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

# உக்ரைனின் சிறை மீது ஏவுகணைத் தாக்குதல்



உக்ரைனின் டோன்ஸ்டெக் சிறைச்சாலை மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது. சிறைச்சாலை மீது நடாந்த தாக்குதலைப் பயன்படுத்தி 100 இற்கும் அதிகமான சிறைக் கைதிகள் தப்பி ஓடியுள்ளனர். உக்ரைனின் டோன்ஸ்டெக் நகரில் மிகுந்த பாதுகாப்புடன் கூடிய சிறைச்சாலை மீது நேற்று ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனால் ஏற்பட்ட கலவரத்தில் 100 இற்கும் மேற்பட்ட கைதிகள் அங்கிருந்து தப்பி ஓடி விட்டனர். உக்ரைனில் ரஷ்ய ஆதரவுக் கிளர்ச்சியாளர்களுக்கும் அந்நாட்டு இராணுவத்திற்கும் இடையே உள்நாட்டு பிரச்சினை நீடித்து வருகிறது. இரு தரப்பிலும் ஏவுகணை வீச்சுகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. இதனால் அங்கிருந்து இலட்சக்கணக்கான மக்கள் வெவ்வேறு இடங்களுக்கு வெளியேறி வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலால் சிறையின் மின் சேவை பாதிக்கப்பட்டது. மேலும் சிறையில் பதற்றமான சூழல் நிலவுகிறது.

இந்த சூழலைப் பயன்படுத்தி, 100 இற் கும் மேற்பட்ட கைதிகள் தப்பி ஓடியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. குழப்பத் திற்கு நடுவே வெளியே சென்ற 34 கைதிகள் சிறைக்கு திரும்பியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

உக்ரைனில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு நடாத்தப்பட்ட ஏவுகணை வீச்சில் டோனெட் ஸ்க் நகரத்தின் மின் சேவைகள் பல துண்டிக்கப்பட்டன. 10 இற்கும் மேற்பட்ட வீடுகள், கடைகள் முற்றிலுமாக தரை மட்டமாகியுள்ளன. இதனால் சுமார் 20,000 மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். தாக்குதலின் அச்சத்தில் 4 இலட்சம் பேர் சொந்த இடங்களை விட்டு வெளியேறியுள்ளனர்.

# எபோலா வைரஸ் 1013 பேர் பாதிப்பு

மேற்கு ஆபிரிக்க நாடுகளில் எபோலா நோய் பரவி வருகிறது. இதுவரை 1013 பேர் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் 53 பேர் இந்த நோயால் உயிரிழந்துள்ளதாகவும் உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதிகபட்சமாக லைபீரியாவில் 29 பேரும் சியரா லியோனில் 17 பேரும் பலியானதாக உலக சுகாதார நிறுவனம் இணையத் தளத்தில் செய்தி வெளியிட்டுள்ளது.

# துருக்கி ஜனாதிபதி தேர்தல் ஏர்டோகன் வெற்றி



துருக்கியில் முதன்முதலாக பொதுமக்கள் வாக்கெடுப்பின் மூலம் நடைபெற்ற அதிபர் தேர்தலில், தற்போதைய பிரதமர் ரெசெப் தயிப் எர்டோகன் வெற்றி வெற்றுள்ளார். இதனை துருக்கி தலைமைத் தேர்தல் ஆணையர் சதி குவென் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார். பெரும்பான்மை வாக்குகள் பெற்று எர்டோகன் வெற்றி பெறறுள்ளார் என அவர் தெரிவித்துள்ளார்.

துருக்கி ஜனாதிபதி இதுவரை நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தார். 91 ஆண்டுகளுக்குப் பிறகு, நாட்டின் உயரிய தலைவரான அதிபரை, பொதுமக்களே தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

இதில், மொத்தம் 5.3 கோடி வாக்காளர்களுக்காக, 1.6 இலட்சம் வாக்குப்பதிவு மையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அதிபர் தேர்தலில் தற்போதைய பிரதமர் தயிப் எர்டோகன், இஸ்லாமிய நாடுகள் ஒத்துழைப்பு அமைப்பின் முன்னாள் தலைவர் எக்மெலிட்டின் இசானொக்லு, குர்திஷ் இன மக்கள் தலைவர் செலாஹதின் டெமிர்டாஸ் ஆகியோர் போட்டியிட்டனர். இதில் ஏர்டோகன் வெற்றிபெற்றுள்ளார்.

# இஸ்லாமிய தீவிரவாதத்திற்கு எதிராக அரபு நாடுகள் கூட்டு முயற்சி



(ரியாத்)

ஈராக்கில் தற்போதைய அரசுக்கு எதிராக நடைபெற்றுவரும் இஸ்லாமியப் போராளிகளின் தாக்குதல்கள் இஸ்லாமிய தீவிரவாதத்தை எதிர்கொள்ள ஒரு கூட்டு முயற்சியினை மேற்கொள்ளவேண்டிய அவசியத்தை அரபு நாடுகளுக்கிடையே உருவாக்கியுள்ளன.

மக்கள் தொகை அதிகம் கொண்டதும் பணக்கார மாநிலமாகக் கருதப்படுவதுமான சவுதி அரேபியாவும், எகிப்தும் கடந்த ஞாயிறன்று இதற்கான ஒரு கூட்டு முயற்சியினை மேற்கொண்டன.

எகிப்தின் அதிபர் அப்தெல் பட்டா அல் சிசியும், சவுதி அரேபியாவின் மன்னர் அப்துல்லாவும் இஸலாமிய சகோதரத்துவ இயக்கத்திற்கு எதிரானவர்களாகக் கருதப்படுகின்றனர்.

ஈராக்கில் தீவிரவாதிகளுக்கு கிடைத்துள்ள தற்போதைய வெற்றியை தங்களுடைய ஸ்திரத்தன்மைக்கான அச்சுறுத்தலாகவும், பிராந்தியப் பாதுகாப்பு குறைபாடாகவும் அவர்கள் கருதுகின்றனர். இதனைத் தொடர்ந்து கடந்த ஞாயிறன்று இருவரும் சந்தித்துப் பேச்சுவாரத்தை நடாத்தியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதம் போன்றவற்றை நிராகரிக்கும் இஸ்லாமியத்தின் உண்மையான மற்றும் மிதமான மதிப்புகளை மேம்படுத்தும் விதமாக இணைந்து செயற்பட இரு தலைவர்களும் ஒப்புக்கொண்டதாக சிசியின் தகவல் தொடர்பாளர் எஹாப் படவி குறிப்பிட்டார்.

# முறைப்பாடு செய்வது பகுசிரமம்;
# கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் அவலம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொலிஸ்நிலையத்தில் பொதுமக்கள் முறைப்பாடுகளை இலகுவாக பதிவு செய்யும் வகையில் தமிழ்ப்பொலிஸார் கடமையாற்றி வந்த நிலையில் தற்போது தமிழ்ப்பொலிஸார் இடமாற்றப்பட்டு சகோதர மொழி பேசும் பொலிஸார் கடமையாற்றுவதால் மீளவும் மக்கள் மொழிப்பிரச்சினையை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக முன்னர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு பொதுமக்கள் தமது முறைப்பாடுகளை தெரிவிப்பதற்கு மொழிப் பிரச்சினையை எதிர்நோக்கி வந்த நிலையில் தமிழ் பொலிஸாரை கடமையில் ஈடுபடுத்துமாறு பொதுமக்கள் கோரிக்கை முன்வைத்தனர்.

இந் நிலையில் குற்றச்செயல்களைத் தடுத்து பொதுமக்களுக்கு பாதுகாப்பினை வழங்கும் வகையில் அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்கும்வகையில் தமிழ்ப் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். இதனால் பொதுமக்கள் எந்நேரத்திலும் தமது முறைப்பாடுகளை தெரிவித்தனர்.

இந்நிலையில் தற்போது தமிழ பொலிஸார் வேறு பிரதேசங்களுக்கு இடமாற்றப்பட்டுள்ளதாகவும் மீளவும் கிளிநொச்சி பொலிஸ நிலையத்திற்கு சகோதர மொழி பேசும் பொலிஸார். கடமையில் ஈடுபட்டுள்ளதாகவும் இதனால் நெருக்கடி நிலையை எதிர்நோக்குவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே பொதுமக்கள் முறைப்பாடுகளை தெரிவிப்பதற்கு ஏதுவாக கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். (77)

# மானிப்பாயில் விபத்து;
# வீதியில் பயணித்தவர் காயம்



கவனயீனமாக மோட்டார் வண்டியைச் செலுததியமையால் விபத்து ஒன்று மானிப்பாய் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் இடம்பெற்றது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு முன்பாக உள்ளவீதி வளைவில் மாலை 5.45 மணியளவில் இடம்பெற்றது.

மானிப்பாயில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்ற ஹன்டர் வாகனத்தை வளைவில் முந்திச் செல்ல முயற்சித்த மோட்டார் வண்டியினாலேயே விபத்து ஏற்பட்டது. முந்திச் செல்ல முற்படும் போது எதிரே பொதியுடன் சைக்கிளில் வந்த நபரைக் கவனிக்காது மோட்டார் சைக்கிள் முந்திச் செல்ல முற்பட்டதால் அச் சைக்கிளின் கைப்பிடியுடன் முட்டியதில் நிலை குலைந்து ஹன்டரின் பின் பகுதியில் சிக்குண்டு சிறிது தூரம் இழுத்துச் செல்லப்பட்டது.

எனினும் ஹன்டர் வாகன சாரதியின் சாதுரியமான செயற்பாட்டினால் உயிர்கள் எவையும் காவு கொள்ளப்படவில்லை.

மோட்டார் சைக்கிள் முற்றாக சேதமடைந்ததுடன் அதில் பயணித்தவர்கள் காயங்களுடன் தப்பினர்.

சம்பவம் குறித்து விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (48)

# நாட்டைக் காட்டிக்கொடுக்கும்
# மன்னார் ஆயரைக் கைது செய்யுங்கள்
## அரசிடம் கோரும் ஞானசாரதேரர்

(கொழும்பு)

நாட்டையும், படையினரையும் காட்டிக் கொடுக்கும் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப்பைக்கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் . என வலியுறுத்தும் பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர், அவரைக் கைது செய்வதற்கு அரசாங்கம் பின்னடிப்பது எதற்காக என்றும் கேள்வியெழுப்பினார்.



இது தொடர்பாக தேரர் மேலும் தெரிவிக்கையில்

ஆயர் இராயப்பு ஜோசப் தொடர்ந்தும் இலங்கைக்கு எதிராகவும் எமது படையினருக்கு எதிராகவும் தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார். இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டு அரசாங்கம் மௌனமாக இருக்கின்றது.

இராயப்பு ஜோசப் இலங்கையின். அரசியலமைப்பையும் சட்டங்களையும் மீறிச் செயற்படுகின்றார்.

இறுதிக் கட்ட யுத்தத்தில் எமது படையினர் கொத்துக் குண்டுகளை மக்கள் மீது பொழிந்தனர் என்றும் சர்வதேச ரீதியில் பிரசாரத்தை இவரே முன்னெடுத்தார்.

பாம்பு கடிக்கிறது எனக் கூச்சலிட்டுக் கொண்டிருக்காமல் அப் பாம்மை அடித்துக் கொல்ல வேண்டும். அதேபோன்று தேசத்துரோக செயலில் தொடர்ந்தும் ஈடுபட்டு வரும் இராயப்பு ஜோசப்பை கைது செய்து சிறையில் அடைக்க வேண்டுமென்றும் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

# கோரிக்கைகளை நிறைவேற்றக்கோரி
# அரச வைத்தியசாலை ஊழியர்கள்
# இன்று பணிப்பகிஷ்கரிப்பில் குதிப்பு

சம்பள உயர்வு, தற்காலிக ஊழியர்களை நிரந்தரமாக்கல் போன்ற வைத்தியசாலை உத்தியோகத்தர்களின் பிரச்சினைக்கு இதுவரை தீர்வு வழங்காமையை அடிப்படையாகக் கொண்டு இன்றையதினம் நாடளாவிய ரீதியில் அனைத்து அரச வைத்தியசாலைகளிலும் பணிப்புரியும் ஊழியர்கள் பணிபகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளனர்.

இப்பணிப்பகிஷ்கரிப்பை அகில இலங்கை சுவசேவை சங்கம் ஏற்பாடு செய்துள்ளது. மேலும் இவ் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு ஏனைய சுகாதார தொழிற்சங்கங்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அகில இலங்கை சுவசேவை சங்கத்தின் செயலாளர் காமினி குமாரசிங்க கருத்து தெரிவிக்கையில் 03/2006ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பி.எல். மற்றும் எம்.என். பிரிவுகளைச் சேர்ந்த வைத்தியசாலையின் ஊழியர்களுக்கு கிடைக்கப்பெற வேண்டிய சம்பள நிலுவை மற்றும் தற காலிக ஊழியர்களுக்கு நியமனம் வழங்கல் போன்ற பிரச்சினைகள் குறித்து பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டும் இதுவரை தீர்வு கிட்டவில்லை.

மேற்குறித்த சுற்றறிக்கைக்கு அமைவான சம்பள நிலுவை சப்ரகமுவ மாகாண சுகாதார ஊழியர்களுக்கும் ஆயுர்வேத திணைக்களத்தின் ஊழியர்களுக்கும் பகிரப்பட்ட போதிலும் பி.எல். பிரிவினருக்கு உரித்தான 15 வருட நிலுவையான 50 ஆயிரம் ரூபா இதுவரை வழங்கப்படவில்லை.

இந்நிலையில் மேற்குறித்த கோரிக்கைகளை பெற்றுக் கொளளும் நோக்குடன் அனைத்து வைத்தியசாலைகளிலும் ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளனர்.

இதற்கமைய சுகாதார அமைச்சுக்கு முன்பு ஆர்ப்பாட்டமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

### அரசு...

யிடப்பட்டது.

இலங்கை அரசாங்கத்திற்கும் ஏனைய தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கும் இடையில் ஓர் பிணைப்பை ஏற்படுத்த இந்த அறிக்கை வழியமைக்கும் என நம்புவதாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி சுபினாய் நெண்டி தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கை எதிர்கால கொள்கை வகுப்பு மற்றும் திட்டமிடல் நடவடிக்கைகளுக்கு வழியமைக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### எண்பது...

கிறது.

அவர்களின் நிகழ்வுகளில் நாம் தொடர்ந்து பங்குபற்றி வருகிறோம்.

இலங்கையில் உள்ள ஏனைய பகுதிகளை விடவும், வடக்கு, கிழக்கில் உறுதியான நிலை உள்ளது.

அங்கு பெரிய பிரச்சினைகள் ஏதும் இல்லை.

ஆனால், விடுதலைப் புலிகளின் தலைமை அழிக்கப்பட்டு ஐந்து ஆண்டுகள் கழிந்த பின்னரும், இலங்கையில் குழப்பத்தை ஏற்படுத்த வெளிநாட்டில் உள்ள பிரிவுனைவாத சக்திகள் இன்னமும் முயற்சிக்கின்றன என்பதை நாம் அறிவோம்.

வடக்கு கிழக்கில் இருந்து இராணுவத்தினர் குறைக்கப்பட்டுள்ளனர்.

காத்திரமான புலனாய்வுக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### இலங்கையுடனான...

ரப்பு ஒத்துழைப்புகளை விரிவாக்கிக் கொள்வற்கு சீனாவுடன் இணைந்து பணியாற்ற இலங்கை தயாராக இருப்பதாகவும் ஜி.எல்.பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

### நித்திரையிலிருந்த...

இரண்டு சகோதரர்களுடன் குறித்த சிறுவன் உறங்கிக் கொண்டிருந்த போது வீட்டினுள் நுழைந்த பாம்பு அவரைத் தீண்டியுள்ளது. இதனையடுத்து அந்தச் சிறுவன் அழுதவாறு கையில் ஏதோ கடித்துவிட்ட தாக தனது தாயாருக்கு தெரி யப்படுத்தியுள்ளார். உடனடியாக வவுனியா வைத்தியசாலைக்கு நள்ளிரவு ஒரு மணியளவில் சிறுவன் கொண்டுசெல்லப்பட்டார். சிறுவனின் கையின் பல இடங்களில் பாம்பு தீண்டியுள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்ததையடுத்து, அவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி சிறுவன் நேற்று அதிகாலை மரணமடைந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### மருத்துவ...

கொண்டு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு திரும்பிய அவர் அங்கு மயங்கி விழுந்தார் என்றும், உடனடியாக சாவகச்சேரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோது அவர் உயிரிழந்து விட்டார் என்று அங்கு உறுதிப்படுத்தப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

### அவ்டாஸ்...

அடிப்படையில்தான் இந்திய நிபுணர் உள்ளடக்கப்படு வதற்கு சாத்தியங்கள் உள்ளன.

இது இந்திய அரசாங்கத்தின் நிலைப்பாட்டைப் பிரதிபலிக்காது.இதில் நாம் ஒன்றுமே செய்யவில்லை என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அனைத்துலக நிபுணர்களின் குழுவை ஜனாதிபதி விரிவாக்க முடிவு செய்துள்ளதாகவும், ஆனால், சிலரின் பெயர்கள் ஆலோசிக்கப்பட்டு வருகின்ற போதும், இன்னமும் இறுதியான முடிவு எடுக்கப்படவில்லை என்றும் அவரது பேச்சாளர் மொகான் சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

### விசேட...

யான தீர்வைக் காணவேண்டும் எனக் கேட்டுக்கொள்ளவுள்ளதாக அமைச்சர். டக்ளஸ் தேவானந்தா இன்றையதினம் ஜனாதிபதி தலைமையில் நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் நேரடியாகக் கோரிக்கை விடுக்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

நேற்றைய தினம் யாழ்.செயலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற யாழ்.குடாநாட்டின் வறட்சி மற்றும் குடிநீர்த் தட்டுப்பாடு போன்ற பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காண்பது தொடர்பாக ஆராயும் விசேட கூட்டத்திலேயே அவர் இவ வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர், மாகாண சபையை பொறுப்பேற்றிருக்கும் கூட்டமைப்பினர் இரணைமடு- யாழ்ப்பாணம் குடிநீர் விநியோகத் திட்டத்தில் அக்கறை செலுத்தாமல் இந்த நிலை தொடருமாக இருந்தால் இரணைமடு-யாழ்ப்பாணம் குடிநீர் விநியோகத் திட்டத்துக்கான நிதி திரும்பிவிடக்கூடிய ஆபத்தும் ஏற்படக்கூடுமெனக் கூறினார்.

வழமையைவிடவும் வடமாகாணம் பாரிய வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளது. யாழ்.குடாநாடு மட்டுமல்லாது, கிளிநொச்சியிலும் பளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி போன்ற பகுதிகளும் குடிநீர் தட்டுப்பாட்டுக்கு முகம்கொடுத்துள்ளன இவ்விடயத்தில் வடக்கு மாகாண சபையினர் எவ்விதமான பங்களிப்பைச் செய்துள்ளனர் எனவும் வட மாகாண செயலாளரிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேள்வி எழுப்பினார்.

எவ்வாறெனினும் மக்கள் தற்போது எதிர்கொண்டுள்ள வறட்சி நெருக்கடிக்கு தீர்வுகாண்கின்ற நடவடிக்கையில் பிரதேச செயலாளர்களும், பிரதேச சபைச் செயலாளர்களும் இணைந்து பணியாற்ற வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

இந்த விசேட கூட்டத்தில் அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர், மாவட்ட திட்டப்பணிப்பாளர், மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர், மாவட்ட விவசாயப் பணிப்பாளர், நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அதிகாரிகள், மாகாண ஆணையாளர் கமநல சேவைகள் அமைச்சு, பிரதேச செயலாளர்கள், பிரதேச சபைச் செயலாளர்கள், மற்றும் அரச அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

# ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தாதது அரசின் தவறு

## அமைச்சர் வாசு தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தாமையானது அரசின் தவறென அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவிக்கையில்

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை நியமித்த சர்வதே விசாரணைக் குழுவின் முன்னிலையில் சாட்சியம் வழங்க தமிழ் மக்களுக்கு உதவிகளையும் அதற்கான ஏற்பாடுகளையும் செய்து கொடுக்க கூட்டமைப்பு தயாராக உள்ளதாகவும்,

அதேவேளை யுத்த காலத்தில் நாடாளுமன்றத்தில் கூட்டமைப்பின் தலைவரும் எம்.பி.யுமான சம்பந்தன் ஆற்றிய உரைகளை விசாரணைக் குழுவிடம் கையளிக்கப்படவுள்ளதாகவும் கூட்டமைப்பு தெரிவித்துள்ளமையானது, எவ்விதத்திலும் சட்டத்தை மீறும் அல்லது அரசியலமைப்பை மீறும் செயலாகாது. அத்தோடு இச் சாட்சியங்கள் நாட்டுக்கு எதிரானதல்ல. சம்பவங்கள் தொடர்பாகவே சாட்சியங்கள் வழங்கப்படுகிறன.

உதாரணமாக ஜனாதிபதி நியமித்த மக்ஸ்வல் பரணகம தலைமையிலான விசாரணைக் குழு முன்னிலையில் சாட்சியமளிக்கும் மக்கள் தமது பிள்ளைகள் தமது கணவர்மார் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்களை இதுவரையில் காணவில்லை போன்ற சம்பவங்களையே சாட்சியங்களாக வழங்குகின்றார்.

இது சட்டவிரோத செயலோ அல்லது தேசவிரோத செயலோ ஆகாது. அதேபோன்று கூட்டமைப்பினர் சாட்சியமளிப்பதும் அவ்வாறானதாகவே அமையும். ஆனால் சர்வதேச விசாரணைக் குழுவை நவிப்பிள்ளை அமைத்தது இலங்கையை பழிவாங்கும் எண்ணத்துடனே ஆகும்.

எனவே கூட்டமைப்பினர் இக் குழுவில் சாட்சியமளிப்பதை நான் எதிர்க்கின்றேன். அவர்கள் உள்ளூர் விசாரணைக் குழுவிற்கு சாட்சியங்களை வழங்கலாம்.

ஜனாதிபதியால் நல்லிணக்க ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. அது அறிக்கையும் வெளியிட்டது. பரிந்துரைகளையும் முன்வைத்தது.

இதனை நடைமுறைப்படுத்தாமை அரசாங்கத்தின் தவறு. ஆனால் அறிக்கை வெளியானது அதே போன்று மெக்ஸ்வல் பரணகமவின் உ[illegible] ஆணைக் குழுவும் விசாரணைகளை நடத்தி அறிக்கை வெளியிடும் என்றும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

# இராணுவத் தளபதியை சந்தித்தார் ரவிநாத்



இலங்கையின் ஜெனிவாவுக்கான வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க நேற்றைய தினம் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தயா ரத்நாயக்கவைச் சந்தித்துப் பேச்சு நடாத்தியுள்ளார்.

இராணுவத் தலைமையகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இதன்போது இருவரும் உலக நடப்புக்கள் மற்றும் உலக நாடுகளுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் தொடர்பில் கலந்துரையாடினர்.

இதேவேளை இலங்கையில் நடைபெறவுள்ள பாதுகாப்பு மாநாடு 2014 தொடர்பிலும் இருவரும் பேச்சு நடாத்தினர். இந்த கலந்துரையாடலின்போது இராணுவ செயலாளர் மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர உட்பட்டோர் பங்கேற்றிருந்தனர்.

# 'எபோலா' தொற்றுக்கு அறிகுறி அங்கொடவில் தீவிர சிகிச்சை

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

'எபோலா' உயிர் கொல்லி வைரஸ் இலங்கைக்குள் நுழையாதிருக்கும் வகையில் விமான நிலையங்களில் தீவிர சோதனை நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. ஏதாவது தொற்றுக்கு இலக்கானவர்கள் அடையாளம் காணப்பட்டால் அவர்கள் உடனடியாக அங்கொட தொற்று நோய் மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டு தீவிர கண்காணிப்பு சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்படுவர் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் பி.ஜி. மகிபால தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, எபோலா வைரஸ் எமது நாட்டில் எந்த வகையிலும் நுழைய முடியாத வகையில் தடைசெய்யப்பட்டுள்ளது. சர்வதேச விமான நிலையத்தினூடாக வரும் பயணிகள் பூரண சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே நாட்டினுள் அனுமதிக்கப்படுகிறார்கள். இந்த வைரஸ் பரவலின் தீவிரத்தைக் கட்டுப்படுத்தும் விதமாக கடந்த வாரத்தில் இப்பரி[illegible]தனை வசதிகள் விமான நி[illegible]யத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. விமான நிலையத்தை வந்தடைகின்ற அனைத்து சுற்றுலாப் பயணிகளுக்கும் பொதுவான வகையில் பரிசோதிக்கும் விதமாக ஒரு வலுவான கண்காணிப்பு அமைப்பு நிறுவப்பட்டுள்ளது. இச்சேவை 24 மணி நேரமும் நடைபெறும். பரிசோதனைகளின் போது எவராவது வைரஸ் தொற்றுடன் காணப்பட்டால் அவர்கள் உடனடியாக அங்கொட தொற்று நோய் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு தீவிர கண்காணிப்பு சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்படுவர் என்றும் தெரிவித்துள்ளார்.

# வடக்கில் வாக்குகளைக் கவர நாடகமாடுகிறார் ரணில்

## குற்றம் சாட்டுகிறார் எஸ்.பி.

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒன்றுபடுத்திய இந்நாட்டை மீண்டும் இரண்டாகப் பிரிப்பதற்கு ரணில் விக்ரமசிங்க முயல்வதாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்தார்.

இந்த வகையில் தற்போது வடக்கில் தமிழ் மக்களுடைய வாக்குகளை கவரும் வகையில் பல பிரயத்தனங்களை ரணில் விக்ரமசிங்க மேற்கொண்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். கண்டி - வெலிகொல்ல பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஆசிரியர் சங்க உறுப்பினர்களுடனான சந்திப்பின் போது அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க மேலும் அங்கு கூறுகையில், வடபுல தமிழ் மக்கள் மத்தியில் வாக்கு கேட்கும் ரணில் எவ்வகையான வாக்குறுதிகளை வழங்குகின்றார் என்பதை நாம் அறிய வேண்டும்.

புலிகளின் கோரிக்கைகளையே ரணில் மீண்டும் முன்வைக்க முயற்சி செய்து வருகின்றார் இன்று கிராமங்களிலுள்ள ஐ.தே.க. ஆதரவாளர்கள் இந்நாட்டில் மீண்டும் ஒரு குண்டு வெடிப்புச் சத்தங்களையோ அல்லது நாடு பிரிக்கப்படுவதையோ விரும்பவில்லை.

தாய்நாட்டை வெளிநாட்டவர்களிடம் தக்க வைக்கவும் அவர்கள் விரும்பமில்லை.

இன்று 80 சத வீதமான ஆடைகளை நாம் உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றோம். தற்போது நாடு அமைதியான நிலையிலுள்ளது.

மக்கள் நிம்மதியாக வாழும் சூழலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எற்படுத்தியுள்ளார். ஆகவே மக்கள் என்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையே ஆதரிப்பர் என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.


सत्यमेव जयते

**CONSULATE GENERAL OF INDIA**
**JAFFNA**

**INVITATION FOR INDEPENDENCE DAY IN JAFFNA**

ON THE OCCASION OF THE 68TH INDEPENDENCE DAY OF INDIA, A FLAG HOISTING CEREMONY WILL BE HELD ON FRIDAY, 15TH AUGUST, 2014 AT 0900 AM AT 14, MARUTHADY LANE, NALLUR, JAFFNA.

ALL INDIAN NATIONALS ARE CORDIALLY INVITED TO ATTEND.

(C/3435)


# பெண் மருத்துவர் மரணம்

கொழும்பு பம்பலப்பிட்டி விசாகா வீதியில் இயங்கி வரும் அழகு சாதன நிலையத்தில் ஊசி ஏற்றிக் கொண்ட மருத்துவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 4.00 மணியளவில் இடம்பெற்று ள்ளது.

அமெரிக்காவில் பயிற்சி பெற்ற ஒருவரினால் நடாத்தப்பட்டு வந்த இந்த அழகுசாதன நிலையத்தில் தமது இளமையைத் தக்கவைத்துக்கொள்வதற்காக மருத்துவம் செய்து கொள்ளச் சென்ற 47 வயதுடைய பெண் மருத்துவர் ஒருவருக்கு ஊசி ஏற்றப்பட்டது.

இதன்போது குறித்து ஊசி மருந்து காரணமாக குறித்த மருத்துவர் மரணமானதாக பம்பலப்பிட்டி பொலிஸார் அறிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன.

# வீடு சேதம்

வவுனியாப் பகுதியில் நேற்றைய தினம் பலத்த காற்று வீசியதனால் வவுனியா கல்நாட்டியங்குளம் வேப்பங்குளம் பகுதியிலுள்ள ஒரு வீடு முற்றாக சேதமடைந்துள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, நேற்று மு.ப. 10.00 மணிக்கு கல்நாட்டியங்குளம் வேப்பங்குளம் பகுதியில் வீசிய சுழற்காற்று வீட்டின் கூரைப்பகுதி மற்றும் சுவர்ப் பகுதியில் பலத்த சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. (70)

## அதிகரித்து வரும் 'எபோலா' தொற்று

# இலங்கையரை உடனடியாக திருப்பியழைக்க அறிவிப்பு

எபோலா வைரஸ் தொற்று அபாயம் காரணமாக, மேற்கு ஆபிரிக்க நாடுகளில் உள்ள இலங்கையர்களை உடனடியாக நாட்டுக்கு திரும்பியழைக்குமாறு அவர்களது உறவினர்களிடம், இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் கோரிக்கை விடுத்துள்ளது.

மேற்கு ஆபிரிக்க நாடுகளான லைபீரியா, சியோரா லியோன் மற்றும் கினியா ஆகிய நாடுகளில் சுமார் 200 இற்கும் அதிகமான இலங்கையர்கள் தொழில்புரிந்து வருவதாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவிதுளளது.

மேற்கூறிய எண்ணிக்கையிலான ஊழியர்கள் தமது பணியகத்தில் பதிவு செய்து சென்றுள்ளதாகவும், பதிவுகளை மேற்கொள்ளாத ஊழியர்களின் குடும்பங்கள் அது தொடர்பிலான விபரங்களை தமக்கு வழங்கினால் அவர்களை மீண்டும் நாட்டுக்கு கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பேச்சாளர் மங்கள ரன்தெனிய நேற்றுத் தெரிவித்தார்.

# மடுமாதா திருவிழாவில் சுற்றுலா நீதிமன்றம்

மன்னார் மடு மாதா திரு விழாவினை முன்னிட்டு, சுற்றுலா நீதிமன்றம் மடுவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

பொது மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகவும், பொலிஸார், விலைக் கட்டுப்பாட்டுச்சபை, சுகாதார பரிசோதகர்கள் ஆகியோரின் வசதி கருதியும் இந்த நீதிமன்றம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யுத்தம் நிறைவு பெற்றதன் பின்னர் மடுத்திருத்தல பரிபாலகரின் வழிகாட்டலின் பேரில் இந்தச் சுற்றுலா நீதிமன்றம் புனரமைக்கப்பட்டு கடந்த வருடம் திறக்கப்பட்டது.

மடுத் திருத்தலத் திருவிழாவை முன்னிட்டு இந்த நீதிமன்றம் எதிர்வரும் 15 ஆம் திகதிவரை இயங்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஆகஸ்ட் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.